பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# அதபு மாலை

காயற்பட்டணம் காமிலொலி, ஸுலைமான் லெப்பை
ஆலிம் ஸாஹிபவர்கள் குமாரர்

**காமிலொலி, ஷாமு நைனு லெப்பை**

ஆலிம் ஸாஹிபவர்கள் திருவாய்மலர்ந்தருளியது

மேலப்பாளையம்

**காளை ஹஸனலிப்புலவர் அவர்களால்**

பார்வையிடப்பட்டது.


சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு
கொழும்பு

இதன் விலை ] 1951 [ ரூ. 1—4—0

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

# அதபு மாலை

காயற்பட்டணம் காமிலொலி, ஸுலைமான் லெப்பை
ஆலிம் ஸாஹிபவர்கள் குமாரர்

**காமிலொலி, ஷாமு நைனா லெப்பை**

ஆலிம் ஸாஹிபவர்கள் திருவாய்மலர்ந்தருளியது

**மேலப்பாளையம்**

**காளீ ஹஸனலிப்புலவர் அவர்களால்**

பார்வையிடப்பட்டது.

## சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு

**கொழும்பு**

இதன் விலை ] 1951 [ ரூ. 1—4—0

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

# நபி நாயகம் பேரில்

கண்ணஹ்மது மகுதூமுஹம்மதுப் புலவரவர்களாற்
செய்யப்பட்ட இரட்டை யாசிரிய விருத்தம்.

ஆதிமுதலோனொளியி லேதாள மாகவு
    மமைந்துவரும் யாறஸூலே
அந்தரம் விளங்கிட விளங்குபுகழ் கிந்திலொளி
    யாகிவரும் யாறஸூலே
ஆசைவிரி வானமயில் வேஷமாஃ தாயெகி
    னமர்ந்துவரும் யாறஸூலே
அங்குமறை பொங்கு மங்களமு ளங்கிட
    வயின்றுவரும் யாறஸூலே
சோதிவிரி வாசமனு ஆதநபி நாதர் நுத
    ரோன்றிவரும் யாறஸூலே
சுந்தர சுகந்தமார் விந்தையின் மகிழ்ந்துகரி
    சொல்லவரும் யாறஸூலே
தூய்சுவன கூறாட மாதுக டொழும்பொடு
    தொடர்ந்துவரும் யாறஸூலே
சொல்லாசி யாமறிய முல்லாச வைவலொடு
    சூழ்ந்துவரும் யாறஸூலே
தீதகல வேபறவை ஜாதிபல வேவல்பணி
    செய்யவரும் யாறஸூலே
திங்களென வங்கவொளி யெங்கனும் விளங்கமெய்
    சிறந்துவரும் யாறஸூலே
தீனிலிஸ் லாநெறிய தேயுலகெ லாநனி
    செழிக்கவரும் யாறஸூலே
தீயவினை யானகுபிர் மாயவொரு சீயநிகர்
    சீறிவரும் யாறஸூலே
நீதிநெறி சாதுரிய மேவுகதி ஜாமனது
    நேசமுறும் யாறஸூலே
நேத்ரியுறு பாத்திமா நாச்சிமகிழ் தந்தையே
    நியதிமிகும் யாறஸூலே
நெயினர் முஹியத்தி னருள்பேர ரேயுடலி
    னிழலற்ற யாறஸூலே
நித்யநும் புகழ்பாடு மகுதூமு ஹம்மதையி
    ரெட்சியும் யாறஸூலே.

முற்றிற்று.

20996.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

## இஃது

# அச்சிட்ட வரலாறு.

எல்லா உலகங்களையும், உயிர்களையும் படைத் தரசாட்சி
செய்யும் வல்லகாரணனாகிய அல்லாஹுத் தஆலா இறக்கிய
வேதத்தையும் அவன் தூதர்களாகிய லட்சத்திருபத்து நான்
காயிரம் நபிகளென்னும் தீர்க்க தெரிசிகட்கும் சிரகிரீடமாகிய
நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லமவர்களின் திருவாய் மலர்ந்தருளிய வாக்கியங்களான
ஹதீதுகளையும், வேதசாட்சிகளான இமாம்கள் முதலான
ஆலிம்களுடைய வுபதேசங்களையும் வாக்குமனமு மொத்து
விசுவசித் துறுதி கொண்டிருக்கும் மூமின் முஸ்லிமாகிய சகலரு
மறியும்படியாய்க் கல்வி தெரியாத ஏழையாகிய நான் சொல்
வது யாதெனில். இந்த அசபுமாலையை முன்னரேட்டுப்பிரதி
யைப்பார்த்தச்சிட்ட காலந்தொடங்கி நாளதுவரைக்கும் பலர்
பலமாதிரியாக அச்சிட்டு வழங்கிவந்ததை நாமுத்துணர்ந்து
பரிசோதிக்கும்போது, காயற்பட்டணம், ஹலறத்து ஷாமு
நயினார் லெப்பையாலிம் ஸாஹிபவர்கள் செய்த செய்யுள்
களென்றதிடமாகச் சொல்லக்கூடாமையாய்ப் பாடல்கள்
தோறு மிகவும் பிழைகளுற்றிருந்தமையாலும், ஒவ்வோர்
பாட்டுகளையும் எழுவாய் பயனிலை, யுதாரணங்களிலும்,
எதுகை மோனைகளிலும் திரிந்துகிடந்த பிசகுகளை யொதுக்
கிப் புதியமொழிகளைச்சேர்த்து வேண்டுமான பாட்டுகளைப்
படித்துச் சுத்தப்பிரதியாக்கி யாங்காங்குபுதைந்தகருத்து
களுக்குக் கருத்து மேற்படுத்தி. அல்லா றஸூல் முஹியித்தீ
னுண்டகை யவர்களுதவியாலச்சிடுவித்து முடிவாயினது. ஆக
லால்இதை யறியப் பிரியமுள்ள நன்மனப் புண்ணியர்கள்
முன்பதிப்புகளைப் பார்த்தாற் றெரிந்துகொள்ளலாம் என்று
அவர்களை யாம்விரும்புகின்றனம்.

# அட்டவணை.


| பக்கம். | விஷயம் | பாடற்றொகை. |
|---|---|---|
| 5 | தற்சிறப்புப்பாயிரம் | 6 |
| 6 | கலிமாவரிசைப் படலம் | 12 |
| 7 | ஈமான்கொள்ளு மியல்புப் படலம் | 20 |
| 8 | தொழுகையியல்புப் படலம் | 60 |
| 14 | ஸக்காத் தியல்புப் படலம் | 93 |
| 19 | நோன்பியல்புப் படலம் | 103 |
| 20 | ஹஜ்ஜியல்புப் படலம் | 125 |
| 24 | குபிர் பெரும்பாவம் விலக்குப் படலம் | 160 |
| 28 | வட்டிவிலக்குப் படலம் | 174 |
| 31 | கோள்விலக்குப் படலம் | 185 |
| 32 | ஸினைவிலக்குப் படலம் | 218 |
| 37 | நஜீஸுவிலக்குப் படலம் | 233 |
| 39 | நிலத்தை யகிகமெடுப்பதைவிலக்குப்படலம் | 246 |
| 41 | பெண்கள் வெளிக்குளங்குளித்தல்விலக்குப்படலம் | 262 |
| 44 | மூக்குத்திபோடுமுறமைப் படலம் | 268 |
| ,, | பெண்களூஞ்சலாடல் விலக்குப்படலம் | 273 |
| 45 | பெண்கள்வளையற்போடும் விபரப்படலம் | 277 |
| 46 | கந்தூரிப்படலம் | 283 |
| 47 | பெண்கள் கபுறுகாணப்போகிறதைவிலக்குப்படலம் | 290 |
| 48 | கலியாண பிதுஅத்துப் படலம் | 327 |
| 53 | பெண்களிழவு வீட்டுக்குபோகுதல் விலக்குப்படலம் | 338 |
| 55 | கட்டைப் பக்கிர் படலம் | 358 |
| 58 | முரீதுப் படலம் | 370 |
| 59 | அடிமையாளும் படலம் | 382 |
| 61 | மாடாடாளும் படலம் | 386 |
| 63 | பெண்புருஷர் நடக்கும் கருமப்படலம் | 455 |
| 71 | தாய்தந்தையைப் பேணும் படலம் | 473 |
| 74 | ஸலவாத்துப் படலம் | 479 |
| 75 | வஹ்ஹாபிப் படலம் | 494 |
| 77 | பலஹதீதுப் படலம் | 544 |
| 84 | குறுசுப் படலம் | 574 |
| 90 | மௌவிதுப் படலம் | 578 |
| ,, | பெண்வார்த்தை கேட்கலாகாப் படலம் | 584 |
| 91 | லெப்பைமார் படலம் | 637 |


ஆ படலம் 34-க்குத் திருவிருத்தம் 637.

அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது

# அதபு மாலை

## தற்சிறப்புப் பாயிரம்

### காப்பு

கலி வெண்பா

முந்தவொளி யான முஹம்மது றஸூல்பொருட்டி
லிந்தஜமா டைவரு மேந்திழையுஞ்—செந்தமிழில்
வேகாமற் சொர்க்கபதி வீடடைந்து வாழ்வதற்குப்
பாகார் ஷறகின்வழி பார்த்திங்-காகமகிழ்
கொள்ளதபு மாலையினைக் கூறவுல கும்பரோடு
முள்ளவெவை யுங்கா னுண்டாக்கும்—விள்ளுமொரு
நித்தனே சுத்த நீதிமறை தான் விளக்குங்
கத்தனே நீயிதற்குக் காப்பு.

தோங்கலென்று வழங்கும் அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

ஆதி பெரியோனே தம்பிரானே யால மடங்கலும் படைத் தவனே, நீங்கு குறையாம லெவ்வுயிர்க்குநித்த மிரணங்க ளீப வனே, சாதி யொழுங்காக வுனைப்புகழ்ந்து சகல மனுடர்க்கு மதபுமாலை, ஏத மறவெடுத் தியம்பவெனக் கென்றுக் கிருபை செய் தருளுவாயே. 1

எல்லாப் புகழ்ச்சியும் அல்லாவுக்கா மேத்த முஸல வாத்தினேடும், எல்லா பறகத்துஞ் சங்கைகளு மெணமில் லாமலே நீளமாகக், குல்லா லந்தனில் வஸ்துவெல்லாங் கூடிப் பிரிகிற நாள்வரைக்கும், சல்லாபர்நபி முஹம்மதுமேற் சர கான்மேகம்போற் சொரிகுவானே. 2

நல்லா ராநபிமா ரெல்லோர்க்கு நான்கியார்கட்கு நபி யுல்லாவாம், வல்லா ரருள் பெற்ற சிறியபிதா வமுத்தம் சாவுக்கு மப்பாஸ—க்கும், பொல்லாத துனியாவிலிருக்கையிலே பொன்னுார் மாராயம் பெற்றவர்க்கு, மல்லா ரலிமக * ரஸனை னுக்கும் வல்லோன் றஹ்மத்துண்டாக ஆமீன். 3

* ஸைன் என்பது அறப்புபாஷையில் 2, ஆதலால், அஸனைன் என்பது அஸன், ஹுஸைனென்று கொள்க.

அன்பியாக்கர சானவெக்க ளால நபிமகளார் தமக்கும், நம்பிராட்டிமா ரனைவருக்கு நபியி னனைபிதா கிளைஞருக்கும், வம்பு ருவைசுல் கறுனியார்க்கும் வன்மை முஹாஜிரீனன் சாரிக்கும், கும்பலமஸ் ஹாபிமார்க்குங் கோமான் றிலுவா னுண்டாக ஆமீன். 4

வலியோன் றனக்காகப்பீஸபீலின் வருந்தியுயிரிணையிழந் தோருக்கு, மொலிமாருலமாக்களிமாம்களும் முண்மை முஹி யித்தீன் பீர் தமக்கும், பொலிவாம் நாகூரின் மறைந்கி ருக்கும் புகழாரும் மொலிகாதிறுக்கு, மலிவாம்காஹிரி னொலிமாருக்கும் வல்லோன் றஹமத்துண்டாக ஆமீன். 5

அஹறகா னுதவியா லதபுமாலை யன்பாயுரைக்கின்றேன் கேட்டறிந்து, பகரமிகவுள்ள வாடவரும் பாவைமார்களும் பலன்பெறவே, பகையிலா அமல்செய்வீரெனிற்படைத் தோன் பொருத்தமும் றஹ்மத்துவுண்டாகவே, மகரமீன் சினை விருந்துமுண்டு மக்கநபியுடன் சேர்வீர்களே. 6

தற்சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

## கலிமாவரிசைப் படலம்

வரிசைக் கலிமாவைத் தினங்கடோறும் வண்மையுட னாறுதரமோதின, விரவினொளிபோலே நன்றாகவே யெவ்மல் கியாமத்தில் வருவாரென. அரியையலழைப்பித்தே யலிக்கா கவே யஸறுதொழுமட்டு நிறுத்திவைத்த. அறிய நபியுல்லா வுரைத்தாரென வழகினறி யோர்களருளிச்செய்தார். 1

எல்லாதிக்றிலும் வரிசையோடுமேற்ற மிகும்திக்கிர் லாஇலாஹ, இல்லல்லாவென்று சொன்னூரெழு லிந்தை பிருபாதி யாயழைத்த, நல்லார்சொற்கேட்டு நயம்பெறவே நாடித்தினந்தோறு மத்திக்கிறைச், சொல்லாற்கருத்தோடு நன்றுகவே சூழ்ந்துதிக்ரு செய்துவருவீர்களே. 2

அவ்வல்க் கலாமுமாகிறக்கலாமு மழகாங்கலிமாவென் றுயிருந்தா, லொவ்வாப் பிழைகோடி யுண்டாகிலு முடை யோன் பொறுக்குப்பின் னெழுப்பும்போது, செவ்விமதி போலத் துலங்கிடவே சிறப்பானஃதுள்ளோனுகவுமே,கவ்வும் வருத்தமொன் றில்லாமலே கலந்து கூடுவானல்லோருடன். 3

நல்ல கலிமாவாந் தைபுவை நாடி யொருதட்டில் வைத் துடனே, சொல்லுமறுதட்டி லேழுவானஞ்சோதி மலக்குகள் மானுடர்கள், எல்லவரையுமேழ் பூமியையு மிசையும்படி

வைத்து நிறுத்திடினும், வெல்லுங் கலிமாத்தான் கனக்கு
மென வெற்றியுள நாயன் சொல்லினனே. 4

சங்கைக் கலிமாவென் கோட்டையென்றுஞ் சடுதியதிற்
புகுந்தோர்களென்றன், பங்க அதாபைவிட் டகல்வாரென்
றும் படைத்தோனுரைத்தானென் றுரைத்தலோடு, முங்
கலுடலுக்குச் சக்காத்தாவதுண்மைக் கலிமாயுந் தகுலீ
லென்றும், கெங்கைப்புனல்ஸாவா நகரில்வற்றக் கீர்த்தி
யோடு பிறந்தவரோதினர். 5

குருட்டி னிபுலீசு சொன்னதுகேள் கூட்டமனுடரைப்
பாவத்தினல், மருட்டி தல்கொண்டு ஹலாக்காக்குவேன்
வாகாயவர்களுமென்றனையே, இருட்டுத்தனை நீக்குங்கலிமாக்
கொண்டு மியல்பாமிஸ்திகுபாறுகொண்டும், பிரட்டி ஹலாக்
காக்கி விடுவாரென்றான் பிரட்டிவிரட்டுமவ் விபுலீசையே. 6

கலிமாவரிசைப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 2-க்குத் திருவிருத்தம் 12

---

## ஈமான்கொள்ளு மியல்புப் படலம்

அல்லா வொருவன்றா னெல்லாத்தையு மமைதேயழித்
தெழுப்புவனுமென்றும், வெல்லுமலாயிக்கத்தெல்லோர்களும்
விதித்தோன பணிசெய்யுமடுமையென்றும், சொல்லும்புறக்
காணும் வேதங்களுந் துய்யோன்றிருவுள வசனமென்றும்,
நல்லமுஹம்மது நபிமார்களும் நாயன் றூதாங்கருண்மை
யென்றும். 1

அல்லும் பகலற்றே யொருகாலமா யாருங்கியாமந்தா
னெடுக்கமென்றும், சூல்லும் படைப்பெல்லா மெழுப்பியந்
நாட்குறித்து வருநன்மை தீமைகளும், சொல்லும்படிகேட்டு
மனுஜின்னுக்குஞ் சுவர்க்க நரகமுங் கொடுப்பானென்றும்,
வல்லோன் விதிப்படி நன்மை தீமை வந்தாலு நன்மைக்
குகைய மென்றும். 2

எல்லா முடையவனல்லாமென்று மீற நிலைமையு மிப்ப
டியே, அல்லா நபியும்மத் தெல்லாருக்கு மானவீமானந் தீனு
மென்றும், வல்லோனிறக்கிய வேதத்திலே வந்த வசனமென்
றறிந்துணர்ந்து, சொல்லுஞ் செயல்களு நினைவுமொன்றாய்த்
துய்யோன் றனைகித்தம்வணங்குவீரே. 3

இருளாங் கபுறது மதனதாபு மிறங்கி யிருவும்பர் கேள்வி
தானும், தெருளாங் கூட்டத்தை யெழுப்புதலுந் தெரிந்து

குற்றத்தோர் பிரியுகலும், அருளாம் ஷபாஅத்து மிரை ஹிசாபும் அமளி வருத்தமும் சான்றிராசும், பொருளாஞ் சொர்க்கம் நாறிவைகளெல்லாம் பொறுப் பாம் ஹக் கென்றே யீமான் கொள்வீர். 3

இறையோன் றனக்குண்டாம் சிபாத்துகடா னிருபதி ருப்பது நாமெல்லோரும். அறிய விதியாகுந் துவர்க்கமில்லா ளுகிர் தீர்மானவமனுக்கில்லை, குறியா கவுஜூ துள்ளமை யுங்கூட்டுந் துணையன்றித் தனியேதானுய், மறைவாய்த் தனித் தவ னவனொருவன் மறக்கும் படைப்புகட் கொவ்வாதவன். 5

அறிவுடனைட்டம் பார்வை கேள்வி யாகுந்தத்துவஞ்சீவன் பேச்சு, மறிவோ னுவின்றிப் பேச்சுமுள்ளோனுன் செவி யின்றிக் கேள்வியுள்ளோன், குறியாங் கண்ணன்றிப் பார் வையுள்ளோன் கூடுந்துணையன்றிக்குதறத் துள்ளோன், குறியிலடங்காத றாஹு மன்றிக் குணமாய் ஹயாத்துள்ளோ னுட்டமுள்ளோன். 6

இந்த விருபது சிபாத்தெல்லா மிறையோன் றனக்குத் தான் வாஜிபாகும், சொந்த மாதா பிதாவுமில்லைச் சொகுசர்ம் பெண்ஜாதி தானுமில்லைத் தொந்தமாமாண் பெண் மக்களில்லைத் தோழன்றுணையில்லை நாயனுக்கே, யந்தமுடனிவை யெல்லாத்தையு மறிந்து நிருணயங் கொள் வீர்களே. 7

ஊணில்லாதவ னுறக்கமில்லா னுண்டாம் வஸ்துகளவன் போலில்லை, ஆணில்லாதவன் பெண்ணுமில்லை யவனல்லா தவை தேவையற்றோன், பேணிப்படைப்புக் கெல்லாமிரணம் பெருகக் கொடுப்பது கடனுமில்லை, பூணியறிந்துதா னுயன்றனை யுவப்பாய் வணங்கினலு வப்புண்டாமே. 8

ஈமான்கோள்வுரு மியல்புப் படலம்—முற்றிற்று.

ஆ படலம் 3-க்குத் திருவிருத்தம் 20.

## தொழுகை யியல்புப் படலம்

கலிமா தனைச்சொல்லி யீமான் கொண்டு கடனும்பறுலு களிறுக்காமலே, தலைமேலிஸ்லாமொன் றடையாளமுந்தாடி நிக்காஹுடன் றேலறுத்துப், பெலமா மிவைநான்கும் போதுமென்னும் பெரிய பாவிகண் மிகுபேருண்டும், நவிவா யிருந்தாலும் வலிமையாலும் நாளும் பாவியாய் நரகில் வீழ்வார். 1

ஈமான் றனைக்கொண்டு முஸலாங்கொண்டு மிருக்கும் பறு லுகளிறுக்காமலே, சிமான் விலக்கிய பாவங்களைத் தெரிந்து விலக்கா மலுலகத்திலே, நாமா மிஸ்லாமென் றிருபோர்கடா ஹைகியாமத்து நாளினிலே, கோமான் லஃனத்தால் நபி முனிவாற் கொடிய நரகத்தில் வீழ்வார்களே. 2

இஸ்லா மார்க்கத்தின் கோலங்கொண்டு மெல்லா அமல் களும் செய்வோரைப்போல், அசலா றறியவேயவரவர்க்கே யறபுப்பாஷையாற் பேரும்வைத்து, நசலாங் காபிர்கள் செய லாகவே நாட்டினடபடி பாவஞ்செய்தோர், பிசலாமவுத்துவங் தடிக்கும் போது பேணுந்தோணியைக் கவிழ்த்தோராவார்.3

கொண்ட கோலத்தை வெளிகாட்டியே கோமான் தீனுக்கு வேறாகவே, கண்டபலவகைப் பாவஞ்செய்வோா காலமுடிந்து பின்கியாமமான, லண்டு மிவர்கடான் றுனியாவிலே அல்லா வெனைப்பரி யாசஞ்செய்து, கொண்டு நடந்திட்ட பாவிகளாங் கொடியோர் வருகிறார் அடியுமென்பான். 4

வெட்க மிகவுள்ள மடவார்களும் வெளியிற் றிரிகின்ற வாடவரும், ஹக்கன்றனைநித்தம் வணங்குதற்காங் கனமாம றிவுகள் படியாமலும், தக்க அமல்களைச் செய்யாமலுஞ் சத மாய்த் துனியரவை விரும்பினோர்க, டுக்க மாகிய நரகத்திலே சோர்ந்தே வொயிலினைத் தொங்கிப்பாரே. 5

முழுக்குமுழுவுநற் றொழுகைநோன்பு முழுது மறியாதும் வணஙகாதுமாய், அழுக்கின் சோரியும் பாராமலே யகிலேதரி பட்டுப் பெற்ற பிள்ளை, யொழுக்க மில்லாத ஹறாமியென்றே யுதா சினப்பட்டுத்திரியுமென, வெளுக்கு முன்னமே வணங்கு நல்லோர் வேதவிதிப்படி விளம்பினரே. 6

தொழுகைதனைவிட்டு முழுக்கைவிட்டுந் துன்பமிகவுள்ள வின்பங் கொண்டுங், கழுதையினம்போலே யாணும்பெண் ணும் ஹறபாக்கேடாகவே வாழ்வதெல்லா, முழுது முயிர்கள் போய் மவுத்கா யினல்மோச மினிப்பிண நாறியபி, னழுத குரல்கேட்கக்கபுறுதனி லடங்குந்தன்மையை யறிந்திலையோ.7

நாணூற்றுச்சின்னங் தலங்களிலே நலமாந் தொழுகை யின் கருமமதைக்கோனேற் றமதாலேன் குறுஆனிலே குணமாய்வணங்கத்தான் வேண்டுமென்று, னீநாற்றுளப திருந்தபோதும் நிலத்தில் விழுமட்டுந்தொழுகவேண்டு, நூனூற்றதுபோலே விளக்கவேண்டு நோன்புந்தொழுகையு மாண்பெண்ணுமே. 8

மருவி யுலுச்செய்தே யகத்தாலஞ்சி மனது கோணமற் றொழுதோருக்குத், தெருவு தனிலோராரேடுமோகிற் றின

மைந்து முறைகுளித்தாலதிற். செருமி யிருக்கின்ற வூற்றை போம்போற் சேர்ந்த பிழையெல்லாந் தீருமென்று, குருவி நபிசொன்னாரென்றே நல்ல குணங்களார் ஷாபி றெடுத்தோதினார். 9

வரிசை யிமாமுக்கு முன்றலையை வாகாயுயர்த்தினோர் தலைநாயகன், பிரியக்கியாமத்தில் நாய்தலைபோற் பெரிதாயெழுப்பவானெனவுமின்னும், திரும்பிப்பார்க்குகல்தொழுகை தனில் ஷெய்த்தானி புலீசு ருஞ்சலெனக், கரும்புபோலுரை செப்புமெங்கள் கண்ணி மணியான நபினார் சொன்னார். 10

ஷத்தா துடனுகை தழுதுதனை வைத்தானுமறாது பிறவுன்றனை, மத்தா யெனும்வெகு நீளமுள்ள மாரி தாமுசு வம்பன்றனை, முக்காம் நபிவள்ளல் தம்முடனே முண்டியெதிர்செய்த அபூஜஹிலை, வித்தா ரமாதாகவொடுக்குவித்த வேந்தன்றனை நித்தம் வணங்குவீரே. 11

தேனுறெடுபாலாற் நீராறுமே தெரிந்தமதுவாறு மோடுகின்றதினோர் புகுஞ்சொர்க்க நிஃமத்துவுந் தீங்கொன்றனு காதான்றெரிசனையும், தானோன்றனையஞ்சி வணக்கத்துடன்றக்க நோன்புகள் சதக்காக்களும், தானேசெய்வோர் கடங்களுக்குத் தக்கோன் கொடுப்பானென்றாரி றஸூல். 12

தொழுதே ஈமானின்படி நடந்து தொல்லைத்துனியா விட்டிறந்த பின்பு. பழுசாமரவந்தேள் பிடித்திடாமற்பாரவறுஷின் கீழ் நிற்போர்களைப், பொழுதுநிலவையும் பழிக்கின்ற பூவைஹூறுல்ஹீன்பலபேர்வந்து, வளைந்தே யெதிர் சென்று சங்கையுடன் வரிசைப்பதி சொர்க்கத்தினிற் சேர்க்குவாரே. 13

கலிமாச் சொல்வது ஹயாத்திலொன்று கனத்த ஸக்காத்துச் சீமான்கள்மேல், மலிவாகும் நோன்பு வருஷந்தோறு வரிசை ஹஜ்ஜுதான்மிகு சீமான்மேற், சலியாத் தொழுகைதான் காலமெல்லாந்தனக்குறி சுக்கு மூச்சுள்ள மட்டு, மெலிவா யிருந்தாலுந் தொழுமெனவே வேத முஹம்மதுநபி யோதினாரே, 14

வேதம் குறுஆனில் தௌறாத்தினில் வெளிச்சமுள இன்ஜீல்சபூரிவையில், நாதன்றொழுகைவிட்டோர்கள் பொல்லா நாற்றமுளகாபிறென வோதினன், காதமணம் வீசுநபியும் மத்திக்கானமாந் தொழுகையைப் பழுதாக்கின, மாதைமனதாசை மனதுள்வைத்த மாந்தர் *ஹைஹபினைச்சந்திப்பாரே 15

* ஹைஹ, என்பது நரகத்திற் பெரிய வோடையென்று கொள்க.

தொழுகைதனை விட்டோர் கழுதையிலும் சுணங்கனையி
லும் பற்றியிலும். பழுதுங் குறைவுமார் நாற்காலிலும் பார
நகரத்துக் காலமுழுது, மிகக் கெட்டோ ரிவரெனவே
முன்னாள் முஹம்மதின் ஹதீதின்படி, அழுதுதொழுது தான
மல்கள் செய்யுமறி வாளரெல்லா மெடுத்தோதினார். 16

முந்தவுளநாயன் முனிவினாலு முழுதும் வானத்தோர்
முனிவினாலும், அந்தர லோகத்தோர் முனிவினாலுமதின்
பின்புவி யுள்ளோர் முனிவினாலும், பிந்தம்புவியின் கீழ்
மறைந்திருக்கும் பெரிய படைப்புகள் முனிவினாலும், அந்த
முள கடல் மலைமரங்கள தபாய் வணங்காரை பதுவாச்செய்யும்.

பல்லு வளக்கித்தான் றொழுகிறது பழுப்பாய்த் தொழு
வகிலெழு பத்துச், சொல்லுந் தொழுகையி லேற்றமாகுஞ்
சொந்தமிஸ்வாக்கிட்டாற பனிநீர். நல்லகாரிய முண்டுமென்று
நல்லோர் சொன்னவை கேட்டறிந்தே. அல்லும்பகலு மொவ்
வோர் வகுத்து மழகாய மிசுவாக்குச்செய்வீர்களே. 18

நல்லவெள்ளியிற் றொழுகைவிட்டோர் நாடும்நபி நாத
ரேவற்படி, வெல்லும்விருதுக ளெல்லாத்துக்கும் வேறுபட்ட
வோர் பாவியாகும், நல்லாருடன்கூட ஆசைவைத்து நாடித்
தினந்தோரும் ஜும்ஆத்தனைத், தொல்லையணுகாமற்பேணு
தலாய்த் தொடர்ந்து தொழுவீரென் றிறஸூல் சொன்னார்.19

வெள்ளிக்கிழமை நாள்வேட்டை போகல் விலக்கலாகிய
செயலதனாற், பள்ளிக்குவந்து கூடினாலும் பாதி நன்மையுங்
கிடையாதென்றார், தள்ளியதைவிட்டு முஸ்லிமானோர்
தகுமாநபிசுன்னத்தைவிடாமல், வள்ளிதாகவே முழுகிக்
கொண்டு வந்து குத்துபாத்தொழுவீர்களே. 20

குத்துபாத் தன்னைவிட்ட பேர்கள் கொடிய முனாபிக்கிற்
கேடராகும், சுத்தமாம்ஹஜ்ஜுப்போல தானதுய்யஜும்
அத்துத்தொழுகை தன்னை, நித்தந்தான்வந்து தொழாமல்
விட்டோ ரீதிநபிஷபாஅத்தினுக்குச், சத்தனாகவே போவா
னென்று சாற்றினார் நல்லவுலமாக்களே. 21

பள்ளிதனில்வந்து வணங்காமலே பலகாஞ்சிலவிடந்
தொழுதோர், ஒள்ளிதார்நபி மாளிகையை யொழியவிடிப்
பித்தப்பழிகாரராய்த், தெள்ளியவர் தொழும் வணக்கமெல்
லாந் துலக்கங்கலங்கலாய் போகுமென்று, மள்ளிகயிர்
கொடுத்த மல்கள்செய்யு மறிவாளரெல்லா மெடுத்தோதினார்.

பறுலாந் தொகைகடனைத்தொழுதுபடைத்தோ நபிசுன்
னத்ததைகளை விட்டோர், வெறுஞ்சோற்றினைத் தின்று கறி

யில்லாமல் விக்கி விழுங்காத சேவற்போலுந், திறமாம்பயிரு
கடனைப்போட்டுற் றிருந்தவடைப்புக ளடையாமலே, மிருக
ஜாதியை மேயவிட்டு வீணே போனவர்தானு மென்றார். 23

மறக்காதே யஸ்றுத்தொழுகை பற்றவணக்கமா நிஸ்கா
ரத்தைக், குறைத்திடாமலே நிறப்பமாகக் குறித்த இமா
முடன் றொழுவீரென்றும், சிறப்பாமஸறினை விட்டபேர்கள்
செய்யுந்தவமெல்லா மழியுமென்றும், பிறப்புமிறப்பு மில்லா
தோநபி பேசினாரென்றார் பெரியோரெல்லாம். 24

கடுமைமூனாபீக்காம் பேர்சண்மேலே கனத்தவமாமிகு
ஷாபஜிறு, படியிற்பாராக்காக விட்டிடாமற் பதறிவிழித்துத்
தான் தொழுவீரென்று, குடும்பமிழந்துதான் முதலிழந்து
குடிகேடனாகியே யிருப்போர்கள் போல், நடுவாமஸறவிட்
டோரெனவே நவ்வியுடன் பேசிவந்தோர் சொன்னார். 25

பஜிறுத்தொழுகைமுன் னொருசுன்னதுப் பதியிலுள
வாழ்க்கை யடங்கலுக்குங், குஷியாம்கயிராரும் லுஹறுக்கு
முன்குணமாய் தின்பின்னும் ரண்டுஸலாம், ருசியாய்த்தொழு
தோர்க்கு நரகம்ஹறாம் நுவலுமசறுக்கு முன்னீஸலாம், பிசு
கில்லாமலே தொழுதோருக்குப் பெரியோன் றஹ்மத்தைச்
சொரிவானென்றார். 26

வன்மைமக்ரிபுத் தொழுகைப் பின்வாகா யொருஸலாந்
தொழுதிடவு, முன்மையுட இஷாத்தொழுத பின்ன ருறுதி
யுடனொரு ஸலாந் தொழவும், பண்மையுரையான நபியிற
ஸூல் பாரில் மனுடருக்குரைத்தாரென, வண்மையுடனிபு
னுமறு சொன்னாரென் றியியப்பினாரிமாம்புகாரி. 27

பத்தியாயாறுறக்கு அத்துத்தான் பாரமக்ரிபு நபிற்றொ
ழுதார், சுத்தியாம்பன்னிரண்டதாகச்சுகமாய் வணங்குவார்
போளா மென்றும், வித்துறுத்தொழா னென்னும்மத்தில்
விருப்பமுள்ளனல்ல னென்றுநபி, வெற்றிபெறச்சொன்னா
ரெனக்கித்தாபில் விளம்பினாரபூ தாவூதென்போர். 28

தொழுகையில்லாத பன்றிக்குத்தான் சோறுகறிமண
மாய்க் கொடுத்தோர், அழகாகியவனை யவனுடனே யணைந்
தவனைப் போலேயாவானென்றும், பழுதாம நாய்தின்னுஞ்
சட்டிதனிற்பாவியவன் தின்னநாயதுதான், தழுவியேவஜீ
பனந்தின்னுமற்றள்ளி விட்டதைக் கேட்டிலேயோ. 29

தொழுகையிழந்தோர்க ளென்னைப்போலே தோஷத்
தாற் பாவியாவாரெனப், பழுதாமிபுலீசு சொன்னதையும்,
பாராக்குளந்தனிற் றொழுகையில்லான், கழுதையினம்

போலே குடித்தளவிற்கனத்த அமலுள்ளவோர் ஷைகுதான்,
அழுகுமனம்வாடி யக்குளம் விட்டகன் செய்தியையறிந்
தில்லையோ. 30

ஆகாதகிலபாஷிக்கானே ரறிவில்லாஞானி யெனப்
பேரிட்டு, வாகானமார்க்கந் தன்னைவிட்டு மனுதர்தமையிங்
கேடாக்கினோர்கள், சாகான்லஃனத்தைப் பொதிந்து
கொண்ட சங்கையனுகாத இபுலீஸ்தன். மோகாந்தப்பய
லாய்க்குப்பாறாய் முடிகிடாவண்ண நடப்பீர்களே. 31

கருநாடகந்தனிற் சிலர் பொல்லாத கள்ளஹறாமிகளி
ருந்துகொண்டு, கருதித்தொழுவரைக் கலைத்திடுவார் காபிர்
தனிற்கெட்ட காபிர்களாய், மருவுமனுட ரெல்லோருஞ் சரி
மாந்தருயர்த்திதாழ் மைகளில்லென்றும், குருவினுபதேசங்
கொள்ளாமலே குடிகேடனாகிய ஞானி சொல்வார். 32

அந்தஞானிக ளிடத்திற்சொல்வா யழகாமகளைநீ காபி
ருக்குச் சொந்தமாய்க்கலி யாணஞ்செய்து சுகங்கொளச்
சேர்த்துவைப்பாயென்று, மந்தமிலாக்காலியினங்கள்போலே
யான உடையன்றிவுரியானாக, எந்தவிதத்தாலு மிருந்து
கொள்ள விணக்கமுடனாகுமோவென்றுமே. 33

இன்னமுஞ்சொல்வா யவனுடனேயெல்லாஞ் சரியென்று
சொன்னபோதே,யுன்னின் பெண்ணைமணஞ் செய்யும்பேர்க்
கங்குவப்பா மகளொடு தாய் தன்னையும், நன்னயத்தோடு
மணஞ்செய்திட நாயேயுனக்காகுமேவெனவே, வின்னமிக
வாகிவழி கெட்டோரை விரைந்து சினந்து நீயகற்றுவாயே.34

உள்ளாற்றொழுகிறேனென் றுரைக்குமூடருடன் சொல்
வாயுன் சங்கையை, யுள்ளாற்சேர்ந்து கொண்டேனெனவே
யுன்னினாற் சுகந்தீர்ந்திடுமோ, வுள்ளாற்சேர்க்கையை நினைத்
ததினா லுவப்பாமகவுண்டாய்ப் பெறுவாள் கோலோ, வுள்
ளாற்சோறுண்டாற் பசிதீருமோ வுள்ளால் நெயிற்றுணியா
மோவென்ற. 35

துனியாக்கருமத்தி லிந்தப்படி தொலையாதிருந்தால்தீன்
கருமத்திலே, யினிதாய்த்துணிவாக வுறுப்பாவம் லேற்றமாய்
வெளிப்படச் செய்யார் பார், கனியாம்கறாதத்தைக்கண்டா
லுமாம் கனத்தவொளிவுகள் கண்டாலுமாம், சனியாமவர்கள்
நேர் வழியைவிட்டுச் *சக்கறில் விழுவார்கள் முனிவாகவே.36

இந்ததீன்பயிர் விளைத்தநபி யிருகால்சுரக்கவும் வணங்
கில்லையோ, பந்தம்போற்றவ முள்ளஷைகு பஃறுமுஹியத்
தீன் றொழுகிலையோ, சொந்தத்தொழுகையை விட்டோருடன்

* சக்கறு என்பது ஓர் நரகமென்று கொள்க.

றுய்யநபிவெட்டிப் பொருதிலையோ, இந்தப்பொல்லாதஞானி
யொடு மிணங்கிக் கூடினோர் வழிகேடரே. 37

அல்லாஹூயாஹூயாஹக்குஹூ வானதிக்றுகும் ஹக்
கிடத்திற், பொல்லாஞானி சொல்யாவுமது பொருத்தக்
கேடுண்டாய் வழிகெட்டோர்கள், சொல்லாய்ச் சேர்த்துமேற்
படுத்திவைத்துச் சொந்த முரீதான பேர்கடமை, யெல்லா
மிதற்குள்ளே யடங்கிபோயிற் றென்று சொல்லியே
கெடுத்துப் போட்டார். 38

அல்லாதனில் ஹூவை முஹம்மதினில அவ்வல்மீமான
வெழுத்ததனைக், கல்லாதவர்கடா னென்றுய்ச் சேர்த்துக்
கணத்ததிக்றென்றேய டக்கியதை, நலலோர் பெரியோர்க
ளெவர்கடானுநயமென்று சொல்லாச் சொல்லதாகும், எல்லா
மூமினு முஸ்லிம்களுமிதைவிட்டகன்று நற்றிக்று செய்வீர். 39

முஸ்லிம்தனக்கு ஞானியர்கடமை மூனிவாய் ஹலாக்
காக்குமுதல்வனே, குஷியாய்த் தினமஞ்சியைந்துந் தொழுக்
கொற்றவா துணைசெய்தருள்வாய், பசியைத் தாகத்தை நீக்கி
வைத்துப் பண்பாயீமானிற் கலிமாத்தனை, விசுவாதம
தாகச் சொல்லும்படி மீளும்ஸக்கறுத்திலருள்வை ஆமீன். 40

தொழுகை யியல்புப் படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 4-க்குத் திருவிருத்தம் 60.

---

## ஸக்காத்தியல்புப் படலம்

எக்காலமுமுள்ள ஆதிநாயனெம்மைப் படைத்துத்தானி
ரணமீந்து, தொக்காய்ச்சில முகற்றனையுந்தந்து தோஷம்
வராமனுற் பஃதிலொன்று, ஹக்காகவேதான் கொடுக்கச்
சொல்லிக் கனத்த பறுலாகச் சுமத்திவைத்த, ஸக்காத்துக்
கொடாப் பேர்களெல்லாஞ் சாதிதனிற்கெட்ட காபிரென்றார். 1

இஸ்லாமார்க்கப் பங்கைத்தானிலேற்றமானது ஸக்காத்
தீதல், முஸ்லிமானவன் கொடுத்தானாகில் முழுதுமிஸ்லாமா
யிருப்பானவன், குசலம்பேசியே கொடுக்காதவன் கோமான்
தீனுக்கு மாறுகொண்ட, கசலைமொழி பேசுங் காபிரெனக்
கனத்தவுலமாக் களுரைத்தனரே. 2

அஞ்சுபறுவினி னடுப்பறுவிங்கதிக ஸக்காத்தாமதை
நன்றாக, வஞ்சமில்லாமற் கொடுத்தானாகில் வாழ்வும் பறக்
கத்தும் பொலிபுமுண்டாம், நஞ்சுமொரு பேச்சுமில்லையென்று
ஞளைக்கியாமத்தில் நடுநடுங்கிக், கொஞ்சுஞ் சுவர்க்கத்திற்
புகுதாமலே கொடிய நரகத்தில் மடிய வீழ்வார். 3

பக்கீர்மிஸ்க்கீன்கள் ஆலிம்கள்நற் பலன்பெற்றிடவந்த மௌலாகளும், பிக்கீர்மிகப்பட்டே யுருமைச்சீட்டுப் பேசிக் கொடுத்தோனுங் கடன்காரனும், திக்கீறுடன்கூடிப் பீஸபீ லிற் றிரிந்துசெல்வோருமுஸா பிறுமே, ஷக்கன் றியிந்தப் பேர்களெல்லாம் ஸக்காத்தீவதற் குரியராமே. 4

எட்டுப்பேருக்குப் பிரிவுசொன்ன வெளியாருடமையைக் கொடுக்காதவன், எட்டுச் சுவர்க்கத்திற் புகுதாமலே யேழா நரகத்திற்றாழ் வானென்றூர், கெட்டுப்போவதின் முதலில் நீங்கள் கிருபையுடன் ஸ்க்காத் தளித்திடுங்கள், தடடுப்பாடு கள் வாராமலே தரணிதனிற் காப்பா னிறையவனே. 5

கொடுத்த மூகலெல்லா மெடுத்துக்கொண்டு கொஞ்ச முதற்கேட்டாற் கொடுக்காதவர்க், கடுத்தமுகமுள்ள பகீல னுக்குக் கத்தன் றிருபள்ளக் கேடுண்டாகிப், படுத்தகபுர்தனி லவனுடைமை பாம்புந் தேளுமாய்க் கடிக்குமப்போ, தெடுத்துக் கொடுக்கத்தான் விடுங்களென்றே யேங்கிற் றிடுக்கிட்டங் கெழுந்திருப்பான். 6

எழும்பும் போதந்த நாகஞ்சொல்லு மௌியோ ருடமை யைக்கொடுக்காமலே, கழிம்புத்துனியாவி லெடுத்துக்கொண்டு கைச்சவடங்கள் தான் செய்துமாறுய், எழும்புமனியாயங்கசடு பண்ணியெடுத்தே யடக்கமாய் வைத்ததெல்லாந், தழும்புற் றாவினைத்தேடி வைத்தீர் தாண்டிக்கடிக்க நான் வந்தே னென்னும். 7

கேட்டவுடனப்போ தழுகழுது கெட்டேனையகோபட்டே னென்பான், நாட்டுத்துனியாவி லசலுடமை நயமாமென் றெடுத் தாசரித்தால், மீட்டுங்கபுரினிற் பாம்புந்தேளு மிகவு மதாபுகள் படுத்துமென்றே, நாட்டமுடனறி வாளர்கடா னயமாயுலகத்தோர்க் கெடுத்தோதினூர். 8

உடமைதனைக்கூட்டித் தங்கரித்தே யுடையோன் விதித் தஸக் காத்திறுமற், கொடுமையனுகியே யிருக்குகின்ற குற்ற முளபொல்லார் தங்களுக்குக், கொடிய அதாபுகொண்டச் சமாதக் கூடுங் கியாமத்திலதனைக்காய்ச்சி, நெடிய முதுகிலும் நெற்றியிலு நெறியாங் விலாவிலுஞ் சூடுவைக்க. 9

படுமென்றிறை குறன்வேதத்திலே பகர்ந்தான் திடனுக மூமின்களே, மடியா வுரையான தப்ஸீர்களில் வரிசையுல மாக்கள் வகுத்தனரே, படிமெற்பயந்தஞ்சிப்பார்த்திபர்க்குப் புங்கும்படி கொடுத் திருந்திறந்தாற், கடியவும்பர்வந் தடித் திடாமற் கத்தன் காப்பாற்றிக் கொள்வானென்றூர். 10

இரங்கு வாரென்றே யெளியோர்வந்தங் கேதாகிலுங்
கேட்டாயியாதவன், குரங்குமுகம்போலே திரும்பிக்கொண்டு
குறைவும்பல பலவெளிமைசொல்வான். துரங்கள் மாறியே
பணங்களெல்லாஞ் சோக்கியமதாகப் போனபின்பு மரங்கட
வறியே கொம்பிழந்த மந்திபோலவே திரிகுவானே. 11

மிஸ்க்கீனானபேர் தம்மைக்கண்டால் வேட்டை நாய்
போலே விரட்டாமலே, பசிக்குவஜீபன மெவ்வளவும் பணங்
காசாயிலுங் கொடுக்க வேண்டும், நசிக்கி மொழிபேசி யில்லை
யென்றா னைமவுத்தாகு நேரத்திலே, பசிக்கும் பசியையும்
படும்பாட்டையும் படைத்த நாயன்றானறிகுவானே. 12

எல்லா நன்மைக்கு மேற்றமான வினிய நன்மைகள் பல
வகையில், அல்லாவுவந்திடு நன்மையென்றே யறிந்தபேர்
களிற் செய்வார் கொஞ்சம், எல்லா நாளைக்கும் பசித்தபேருக்
கிரங்கிப் பசிதீர்த்தேயிருக்கிறது, பொல்லாப் பாவமா
நெருப்பை நூற்றுப் போக்குங்கடலாகும் பசிதீர்ப்பதே. 13

பள்ளிதனிலொரு மிஸ்கீனாலும் பட்டணந்தனிலொரு
வராலும், அள்ளியுண்ணவே வகையில்லாம லவர்கள் மவுத்
தாகும் போலிருந்தாற், கொள்ளு மீமானி லுள்ளபேர்கள்
குடிக்கு மிரணத்திற் பகிர்ந்தாகிலும். அள்ளியவருக்குக்
கொடுத்துண்ணாம லவர்களுண்பது ஹறாமாகுமே. 14

உந்தன் பெண்சாதி பிள்ளைகளு முங்கட்குப் பின்ன
ரிருந்தமுதற், றந்தன் முதலென்று கையாடியே தன்மஞ்
செய்யாமற் கன்மஞ்செய்தா, லந்த முகவினாற் செய்தபாவ
மாகிறத்திலுங் கட்குக்கேடாய், வந்துபிடிக்குமென் றுரைத்
தார் லைல்லவரிசை யறிவாளரடங்கலுமே. 15

இந்தத் துனியாவி லுனக்கு முந்த எத்தனைப் பேர்கள்
சீமான்களாய்க், கந்த மனுகாமற் பகீல்த்தனமாய்க் கண்ட
விடமெல்லாமடமாகவே, வந்த வுடமைகள் மிகத்தேடியே
வாராவுடமைக்கும் வழக்குப்பேசிச் சொந்தநமக்கிதென் றி
ருந்தோரெல்லாந் தூக்கிக்கொண்டோடிப் போனார்களோ.16

அழியுந் துனியாவி லாபனைக்கே யாயந்தீருவைப் பகுதி
களும்,வழிகள் விலகாமற் பயந்தஞ்சியே வலியக்கொடுக்கிறீர்
வருத்தத்துக்காய்த், தெளியு நாயன்றானுகிரத்திற் றிருமுன்
வரச்சொன்னால் ஸக்காத்தியா, ரொளியுந் தலமுண்டோ
வவனைவிட்டு மோடியொளிக்கவுந் தலமில்லையே, 17

உனக்கிங் குடமைகள் தந்தநாய னுன்றன்பெண்சாதி
யொடும் பிள்ளைகள், தனக்கு மிரணங்கள் தாராவென்றே
தம்பி ரானுக்காய் ஸக்காத்தியாமற், கனத்த வுடமைகடன்

கீனத் தேடிக் கத்தன் றனக்குத்தான் குற்றஞ்செய்தாற், கினக்கு நரகத்தி னுன்னுடலம சீறும் பாம்புடன் தேளா மென்றார். 18

ஞாய மாகவே முதல்கள்தேடி நாயன் றனக்காகச் செல விடாமல், ஆயம் போலவே கொடுமைசெய்தே யனியாயமாகத் தேடித்தேடி, மாயனிபுலீஸ் கலையினுலே பகிலாயனந்தரம் வைத்தபேர்கள். காயமகீ தெல்லாம் புண்ணுகவேகடிந்தேயர வந்தேட்பிடுங்குமென்றார். 19

ஹஜ்ஜிற் குப்போக வொருமனுடன் கனமாய்ப் பொற் காசு தேடியதை, யெய்ச்ச இஸ்லாமானவர்களுக்கே யிரக்க மாகவே யிந்ததினுல், மிச்ச மாகவே யிவர்தான் ஹஜ்ஜு விருப்பின செய்தாரென்று சொல்லி, அச்ச மானவரவர் பொருட்டா லடங்கலுக்கும் ஹஜ்ஜு கபூலானதே. 20

பெற்ற பிள்ளையைப் பிறவிதனைப் பெண்டாக வைத்த நசுறனிகான். மொத்த விரக்கமா *இஸ்லாமான மிசுக்கினுக கன்ன மீந்ததனுல், கத்தனவர் பிழை தனைப்பொறுத்துக் கனகப் பதிசொர்க்கங் கொடுத்தானென்று, மூத்தினெளிநபி சொற்றெறளிந்தோர்மொழிந்த வகைதனை யறிந்திலீரோ. 21

வெளியில் கயிர்வாங்கு மிசுச்கீனுக்கு வேண்டும் ஸதக் காக்கள் கொடுப்பதிலும், தெளிவின்முனமுள்ள ஆணும் பெண்ணுந்திரிந்தே யெவர்பாலுங் கேளாமலே, தொழுதே யிருக்கின்ற பேரைப் பார்த்துத்துய்யோன் றனக்காக ஈவது தான், ஒளியார் முஹம்மது நபியிறஸூலொன்றுக்கு நூறு நன்மையென்றார்.

தந்தை தாய்கிளைதன் பிச்சளந் தனக்குமுடுகின வுற முறையார், சொந்தவெளிமையா யிருக்கையிலே தூரத்தா ருக்குக் கொடுக்கிறது, தந்தன் றலைதிறக் கொண்ணுதெனத் தானெணியுடுத் திருக்குகின்ற, அந்த வுடைகொண்டு தலை மறைத்த லாகுமானிசங் கெட்டோரென்றார். 23

புருஷ னிழந்தகோர் பூவையர்க்கும் போற்றும்புக்கருக்க ளெத்தீம்கட்கு, முரிசையுணவுக ளுடுமானங்களே தோர்வகை யிலா வெளியோருக்கும், பிரிசமுடன்மன மிரங்காமலே பெரு மைத்தன மாகவுதாசனித்தோ, அருஷு நிழலிலே முடுகா மலே யாழுநரகிலே தாழ்வாரென்றார். 24

ஈமானுளமூமின் சீமான்கடா மிருக்குமூர்தனிற் பெண் குமர்கள், ஆமாநிக்காகுடன் வாழ்வதற்கே யருளக் கைக்கூலி

---

• * இஸ்லாமான மிசுக்கினுக் கன்னமீந்ததலுலென்று இவ்விடத்திற்சுட்டிக் காட்டிய கிஸ்ஸாவைத் தருமஷுபா அசதுமாலைபிற் காண்க.

வகையில்லாமற், கோமான் விதியென்று சலித்திருக்கிற் குறிக்குஞ் சீமான்களுக்குமரை, மாமனத்தோடு முடித்து வைக்கில் வழுத்தும் சுவர்க்கமுண்டவர்க்குத்தானே. 25

குமர்தா னிருக்கையிற் றூன்வாழ்வது கொடியபகிலன் றன் கலியாணத்திற், கமரும்பசியாளி பார்த்திருக்கக் கலியா விருந்துண்ட பழிகாரனுய்க், *கமறுபோலான வவன்வாழ் வுக்குக் கனத்தபெலனது மெலியுமென்றுங், குமரு முடித் தோர்க்கு மகர்க்காயினுங் கொண்டோர்க்குஞ் சொர்க்க மனந்தரமே. 26

முன்னல் நபிமூசா காலத்திலே மூதிர்ந்த குமரொன்று பெருமூச்சிட்டுப் பன்னுள்மணமிலாத்கோஷத்தாலப் பதியின் சுல்தான்றன் மாளிகைதான், பொன்னுலெடுத்தாலு மிடிந் ததைப் போகுமூசாவை யவனழைத்தே, யென்னுபுதுமை யீதிடியிதென்றே யிறையோன் றனைக்கேட்டு வாருமென்றான்.

அன்னமொழிப்படி மூஸாநபி யாதியிடங்கேட்க வவன தற்குச், சொன்னதாவது மூஸாவேயிச் சுல்தான் சீமையி லொருகுமரு, கன்னியவள்விடும் பெரு மூச்சினுற் கடிந்தமா ளிகை யிடிதந்த. மின்னைமணமுடித் தாலொழிய மேவுமவன் வீடு படியாதென்றான். 28

பன்னுமிவ்வுரை கேட்டுமூசர் பாராள் சுல்தானிடத்தில் வந்தேயன்ன, நடைமின்னுள் பெருமூச்சினு லழிவிதுதரண் மனையிப்போ நீ, மன்னன் றனக்காகப் பெருங்குமரை மண வாளன்றேடி முடித்துவைக்கில், ஜென்னத் தும்பெற்றும் வாழ்வதோடு செழிப்பார்மனையதுமிடியா தென்றூர். 29

இந்தமொழிகேட்டுச் சுல்தானந்த வேந்திழையாளை யழைத்துவந்தே, அந்தமுள நல்ல கணவனுக்கே யழகாய் நிக்காஹுதான் செய்து வைத்தார். பிந்தவரண்மனையிடி யாமலே பெலமாய்வாழ்ந்திருந்தாரெனவே, யிந்தவறிவதை யுலகத்தோர்கட் கெடுத்து விளம்பினர் நபியிறஸூல். 30

ஊரார் குமரொன்றைத் தங்குமர்போ லுவந்து கலியாண முடித்து வைத்தால், நூறுகுமர்களை முடித்தநன்மை நூரும் பெரியவன்கொடுப்பானென்றுஞ், சோறு கொடுத்தறும் பசிதீர்த்தோர்க்கும் சுகமாங்குமர்களை முடிப்பித்தோர்க்கும், பேறுகிடைக்குமப் பரிசுபோலேபெரிய நன்மைகள் கிடை யாதென்றூர். 31

உடுமானமில்லா மிசுக்கீன்களுக் குடுத்தப் புடவைகள் கொடுத்தபேர்க்கு, வடுவாம் பாவத்தைக் கறையாடையை

* கமறு, என்பது-சக்திரனென்றும் கொள்க.

வடிவாய்க் கழிப்பபோற்கழிக்குமென்று, மொடுவாய் நன்மைகள் புடவையாலே முழுது மவுத்தாகி யெழும்புநாளில், நடுவாமிறையவனகத்தைதானடிவராமலே மறைப்பானென்றார்.

பிச்சைவாங்கிற மிசிக்கிகடான் பெரியோன் றனைநித்தம் வணங்காமலே. எச்சிலுணுநாய் போலோடியாடி யேங்கிவாங்கிபே தின்றுதிரி, யுற்ச வாணவத்தாலெவையு மோட்டி மவுத்தாகி யாகிரத்தின், மிச்சமானதோர் நன்மையற்று மிஸ்க்கீனகவே திரிவாரென்றார். 33

ஸக்காதியல்புப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 5-க்குத் திருவிருத்தம்-93.

---

# நோன்பியல்புப் படலம்.

வரிசைறமலானின் பிறையைக்கண்டால் வண்மையுடனேன்பு பிடிமென்றே, யரியோன்குறுஆனி லுரைக்கலுற்றன துபோற் பிடித்துவங் கோர்களைத்தான், பிரிசமுளகுறுஆனு நோன்பும் பெரியோனிடத்திற்கொண் டுனும்யானுமே, யுரிசைச் ஷபா அத்துஞ் செய்வேனென வோதினர் துய்ய நபியிறஸூல். 1

நன்மைமிகவுள்ள நோன்புதன்னைநலமாய் பிடித்தோர்க்குந் திறப்பித்தோர்க்குந், தின்மையடங்கலுந்தீருமென்றுந் தீவிட்டுரிமையுங்கிட்டுமென்றும், வன்மையுளநோன்பு பிடித்தவர்க்கு வாகாய்ப்புனல்கொடுத் தோர்க்கெனது, மேன்மைஹவுலல்நீர் கொடுப்பேனென்று வேதாம்பர்நபி பிறஸூல் சொன்னர். 2

மஸ்தார் வெறியாரைப்போல்விடாமல் மனதுமகிழ்ச்சியாய் நோன்புவைத்தால், கஸ்திதான்படா தாகிரத்திற் கனகபதிவிஸ்திற்புகுவாரென்றும், கஸ்தூரியின்வாசத் தினுமணமாங் கனதியுளநோன்பு பிடித்தோர்கள்வாய், விஸ்திரணமுள்ளோ பக்கலெனவிளம்பினாருணபியிறஸூல். 3

உண்ணுதிருப்பதே யாண்டோன்குண முண்டுகளிப்பதே யடியார் குணம், எண்ணுவிறையவன் குணந்தனையே யெடுத்தோர் பாவத்தைக்கெடுத்தோரென்றுங் கண்ணுல்கலபினலாண்டவனின் காட்சிகாண்பார்களென்றுமுயர், வீண்ணார்ப் பதவியுங்கிடைக்குமென்றும் விளம்பிநபிநோன்பு பிடியுமென்றார். 4

ஊண்தீன் குடிப்புகள் சேர்க்கைவிட்டே யுடையோன்றனக்காக நோன்புவைத்தோர், காண்பார் சுவர்க்கமுந் திருக்

காட்சியுங்காந்திநரகத்தைக் காணாரென்று, வீண்பேச் சில்லாமனோன் புவைத்தோர் வெல்வாரிபுலீஸைக் கொல்வாரென்று, ஆண்பெண்ணலியிலாநபியுரைத்தாராத லாற்பேணிநோன்புவைப்பீர். 5

உரிசையுடனோன்புவைத்தபின்ன ரோர்மையுடனைக்கை வயிற்றைப்பேணிப், பரிசமுடனிருந்தோர்க்குச் சொர்க்கப் பதிக்குநான் பிணை யென்றுமின்னும், வரிசை மிகவுள்ள நோன்புவைத்து வாகாய்த்துயில் செய்தோர்க்கத்துயிற்றான், பரிசமணுகிய இபாதத்தெனப் பேசினார் வேதநபியிறஸூல்.

ஆதிதனைநாடி நோன்புதனை யஞ்சியலங்காரமாய்ப்பிடித்தால், நீதமணுகாமுன் பிழைகளெல்லா நித்தனுபொறுப்பானென்றோதியினைஞ் சோதிறமலானினோன்புவிடல்சேர்ந்த மிடை சபறிரண்டினுக்காம், ஓதுமோராண்டிற்பிடித்தாலந்த வொன்றுக்கெதிரில்லை யென்றார்நபி. 7

குணமாயுளநோன்பா லிறைவனருட் கொண்டு சொர்க்கத்திலாக்குமென்றும் பிணமார் யெரிகின்ற நரகம்விட்டுப் பேணிக்காப் பானென்றும் மோதிப்பின், கணவனுரையன் றிநபில்நோன்புகள் கனவிபிடிக்கலாகாதெனவு, மணமாமுஹம்மதருரைத்தாரென மதியாரிமாம்புஹாரீயுரைத்தார்.8

நோன்புபிடியாத பாவிகளை நோகுமாகிற மானதிலே, பாம்பு நடிக்குமவன் தேள்கள்கொட்டும் பசியாலதிகமாய்த் தாகமாகும், வேம்பின் கசப்பிலுங் கொடிதாகவே வெறியாலெரியுமே வயிறுதானும், சோம்பி நோன்புகடனைவிடாமற் சொகுசாய்ப் பிடியுமென்றாரிறஸூன். 9

பாவம் வருவதும் வாயினாலே பாவம்போவதும் வாயினாலே, ஆயுமறிவாள ரெல்லோருந்தா னல்லாவென்பதும் வாயினாலே, காயமுறுப்பெலாம் வாயைப்போலே கண்ட வரிசைக ளொன்றுமில்லை, நாயன்றறுக்கஞ்சி வாய்பேணினால் நன்மையுள்ளநோன் பழகாமென்றார். 10

நோன்பியல்புப் படலம் முற்றிற்று.

ஆ படலம்-6க்குத்-திருவிருத்தம்-103.

## ஹஜ்ஜியல்புப் படலம்.

அல்லாதனைநாடி ஹஜ்ஜுசெய்த வவர்செய் குற்றங்கள் பொறுத்தின்னமுஞ், சொல்லாற் செவினார் பாவமில்லாச் சொகு சாம்பாவகன் றன்னைப்போலே, நல்லாவாக்கியேபின்

பவர்க ணண்ணுங்கியாமத்திலிறைநட்பாகிப், பொல்லார்
புகும்வன்னிச் சுடரைக் காத்துப்பொன்னார்ப் பதியினிற்
புகுத்துவிப்பான். 1

மக்கங்கனிற்சென்று ஹஜ்ஜூசெய்ய வழுத்துமுதலோடு
முடற்பலமு, மிக்கவாகன மேறிப்போக வினையிலாததோர்
பாதைகளுந்தொக்காயிருக்கிற நாளிலேதணிந்த ஹஜ்ஜூக்
குப் போகாதவர், சக்காமெகூதிக னசுருனிகள் சாதிதனிற்
கெட்ட காபிர்போலாம். 2

காபாதனைக்கண்டோ ரிறையைக்கண்ட கருமமாம்நரகத்
தைக்காணார், போவா ரெனின்மதி னவுக்கவர் பென்னார்
நபியையுங் கண்டுவந்தோ, ராவர்ரவரெட்டாஞ் சுவர்க்கத்தி
லே யழலார்நரகத்திலாகாரென, நாவாலுரைத்தார்க லறிவா
ளர்தா னல்லமுஸ்லிம் களானோருக்கே. 3

நாயன்றிருக்காட்சி சொர்க்கத்திலே நமக்கு முன்காட்சி
மக்கத்திலே, மாயனிபலீசுகண்போனதும் வரிசை நபியுல்லா
விண்போனதும், ஞாயமானதோர் மதீனத்திலு நலமான
மக்கமதிலுமென்றும், ஆயுங்குறு ஆன்வந் திறங்கினது மழி
யுங்குபிர்கள்போயுறங்கினதும். 4

நல்லமுஹம்மது பிறந்ததலம் நான்குயார்களு மிருந்த
தலம், கல்லின்புத்துகள் கஃபாவிட்டுக் கணடதேசத்திலெறிந்
ததலம், வல்லோன் றஹூமத்து மிறங்குந்தலம்வரிசைமூமின்
கள் வணங்குந்தலம், எல்லாவறிவுமேயுண்டாந்தல மினியதல
மது மக்கந்தானே. 5

சொர்க்கமாராயம்பெற்றதலம் துஷ்டனபூஜகி லிறந்த
தலம், வெட்கமிகவுள்ளோ ருண்டாந்தலம், வேசைமாரில்லா
வரிசைத் தலம், ஹக்காறிருவுளப்படி யெல்லோரும் காவி
னெழுதியே வாழுந்தலம், வர்க்கம் பெரிதான குறைஷிக்
குலம் வாழுந்தலமது மக்கந்தானே. 6

பொழுதுநிலவுமே விளங்குந்தலம் பூமிதனக்கெல்லாம்
பொதுத்தலமாங், களவுதிருட்டுக் காய்த்தறிக்குந்தலங் கன்
னிமார்மிக நாணுந்தலம், எழுதுங்கணக்குகள்பார்க்கும்போதி
னியஞாயமாயிருக்குந்தலம், அழுதுதொழுதுதான் ஹஜ்
ஜூசெய்தோரவர்கள் பிழையெல்லாம் பொறுக்குந்தலம். 7

பிறையைப் பிரித்திட்டுக் கூட்டுந்தலம் பெரியபுதுமை
களுண்டாகுந்தலம், மறையைகடந்தோரை யோட்டுந்தலம்
வந்தமுஸ்லிமைக்காக்குந்தலம், சிறையினடுமையை யுரிமை
யாக்கிச் சீமான் றஹூமத்திலாக்குந்தலம், அறையில்மங்கை
யிர் வெட்குந்தல மதிகதலமது மக்கந்தானே. 8

நம்புநபி மகளருள்பாத்திமா நாச்சியாருக்குக் கலியாணந் தான், தம்பிரானிக்கா ஹெழுதிச்சபா அத்துக்கொடுத்திடப் பெற்றதலம், அம்புலிபோலே ஹஸனுஸைனு மலியார்க் கிருகண்ணுயைப் பிறந்ததலம், கம்பர்பின் முன்னே அலிபு மாகக் கண்டதேசங்கள் வென்றதலம். 9

தீனுக்குதவியாய் மதீனத்துக்குச் சேர்ந்ததலமான மக்க மென்று, மானுக்குதவிசெய் நபியுடைய மக்கந்தனக்கான மதீனமென்றுங், கோனுக்கு வந்ததோர் நன்மார்க்கத்தைக் குவலயந்தனில் வெளிச்சமாக, வானுக்குவந்ததோர் நபி தமக்கு மறையுமிறங்கின மக்கந்தானே. 10

எங்கோன் முஹம்மத ரிருந்ததல மெல்லாபறக்கத்து முண்டாந்தலம், பொங்குங்கஃபாக்கு மேல்வானத்திற் புகி யோனவன் பைத்துல் மகுமூறெனுஞ், சங்கையுளபள்ளி தனக்குமேலாந் தலந்தக்கோன்குறுஷருசுமாக, அங்கனுள புதுமையாவையும் அல்லாவறிவித்தபெரியதலம். 11

ஆகநபிமுதநபிமார்களு மவுலியாக்களு நாடுந்தலம், நீத முளநபி தமக்குவந்த நெறிசேரறிவாளர் கூடுந்தலம், பூதலம தாண்ட சுல்தான்களும் புகழ்ந்தேயாதியை வணங்குந்தலம், பேதகமதானபேர்கள் செய்தபெருத்தபாவத்தை நீக்குந்தலம்.

கடலானதை யுடையாய்க் கொள்பாரிற் கண்டவூரினி லொரு நன்மைக்குக், கொடையாகிய நன்மையிலட்சங் கொண்டுகொடுக்குமூரில்லைமக்கமன்றிக். கடனாந்தொழுகையி லொருதொழுகை கல்புபயங்கொண்டு தொழுதுகொண்டாற், றடையானஃதின்றி யிலட்சந்தொழு தானென்றிறையெழு திடுவானெனரூர். 13

அல்லாதனை நாடி மக்கந்தனுலன்பாயொருநோன்புபிடித் தாலட்சம், நல்லபடிநோன்புபிடித்தானென்றும் நாடியொரு வெள்ளி ஸதக்காசெய்தால், அல்லலற லட்சந்திருகம் வெள்ளி யழகாய்க் கொடுத்தவனு வானென்றுஞ், சொல்லும்மறை யொரு விடுத்தமோதிற்றெருக்கும் லட்சமென்றுஞ் சொல்லினுர்.

நாட்டமுட னொருதசுபீஹினை நயமாகும்படி சொன்னு லட்சக், கேட்டமுடனல்ல கஃபாவதுதெரிந்தால தவாபெழு விடுத்தஞ் செய்தாற்பூட்டும், பாவங்களெழுபதல்பு போயங் கெழு பஃதல்பு, நன்மை கூட்டப்படுமேழு பஃதல்புமேற் கூடுந்தறஜாத்தை யுயர்த்தப்படும். 15

அரசர்க்கரசான நபிமுஸ்தபா வமைந்து பிறந்த வூரெல் லாத்திற்கும், வரிசையுளமக்க மகுபுருயில்வருந்திச் சஹீதாகி லெழுபதல்பு, பிரிசமுட னுண்டாய்ச் சொர்க்கமதிற் பெருகு

மதாபின் றிப்புகுவாறென்றே, யுரிசையுளகளிவழுதவாயாலு
வந்தேயுரைத்தார் கணபியிறஸூல். 16

பதினேந்து தலந்தனில் துஆவைப் படைத்தோன் கபூல்ச்
செய்வான் மக்கத்திலே, மதியுடன் செய்தபாவமதைமக்கத்
தில் ரட்டிப்பாக்கப்படும், அதிகவழகுள்ள வொருவருக்கே
யடர்ந்த மோகத்தாலொரு பெண்டனைக், கொதியாய் மூத்திக்
கொண்டாதனலவர் கொண்ட சூறத்தை மாற்றப்பட்டார். 17

மங்கைகாயிலா ஆசாபுடன் மயங்கியிருவரும்வினைச்செய்த
தாற், சங்கைகெட விருகல்லதாகச் சாகான்மாற்றியே
வைத்தசெய்தி, எங்குஞ்சீர்த்தியா யிருக்கவினு மிடறுயொரு
வன்றான் பெண்ணின் மேலே, பங்கப்படக்கையை வைத்த
போது பற்றிப் பிடுத்துத்தான் சேர்ந்ததுவே. 18

சேர்ந்தவுடன் மக்கந்தனி லெல்லோருஞ்சென்று கூடி
யேவிடுக்கும்போது, சேர்ந்து போனூர்கள ணுவாகிலுந்
தொடர்ச்சியதுவிட்டு நீங்காத்ததாற், சாந்தபெரியோரிலொரு
வர் சொற்போற் சங்கை பெறவந்தவிருவருந்தான், சேர்ந்து
தெள்பாவை மனதச்சமாய்ச்செப்பி யிருவரும் பிரிந்தார்களே

ரொக்கமுகலொரு தலந்தனிலே நோட்டமாகவேயிருக்கு
தென்றால், கக்கிசமதமான வெளிமையாலுங்கனத்த வருத்த
மாம் நசவினுலும், துக்கப்படாமலும் போவீர்களேற் றுய்ய
பெரியவனருளுண்டாமோ, மக்கந்தனிற்சென்று ஹஜ்ஜு
செய்தால் வரிசைப்பதி சொர்க்கங்கிட்டுமே. 20

மக்கந்தனிற் சென்று ஹஜ்ஜுசெய்து மனதுமகிழ்ச்சி
யாய் மதீனத்துக்குச், சக்கதின்றி வந்தென்கபுறைச் சங்கை
யுடன் கண்டால் ஹாயத்திலென்னைக், கக்கிசமதின்றிக் கண்
டோனைப்போற் காட்சிபெறவே தானுமென்று, மிக்க
ஷபா அத்துக் கடனுமென்று மேலாமறுஷினிற் சென்றோர்
சொன்னூர். 21

ஏற்றமாமக்கத்தளவில் வந்தங்கியல்பாய் ஹஜ்ஜுதான்
செய்தபின்பு, மாற்றமில்லாம லென்னைநாடி மகிழ்ந்துவரா
மற் போனவன்றான், போற்று மஃதன்றி யென்றனையே
பொருத்தமிலாமலே வெறுத்தானென்று, காத்தி முல்லன்பி
யாவாவெய்யிற் கஸ்தூரி வாசமுடையோர் சொன்னூர். 22

ஹஜ்ஜியல்புப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 7-க்குத் திருவிருத்தம் 125.

---

## குபிர்பெரும் பாவம் விலக்குப் படலம்.

ஈமானிஸ்லாமாம் பதினொன்றையு மின்பமாய்ச்சொன்ன
படி நடந்து, கோமான்விலக்கின பெரும்பாவங்கள் கொலை
யுங் கள்ளையும் ஸினாவதையும் சீமாநபிக்கேருக்கள வதையுங்
திருவிளக் கேடாம் பொய்யாணையும், ஆமாகாதென்ற வட்டி
யையு மசடாங்கு பிறையுந் தவிர்க்கவேண்டும். 1

கோளும்பெருமையும் பகீலினையுங் கொடியஹசதையுஞ்
சதியையுந்தீன், வாழுமுஃமினைத் திட்டுவதும் வாயாற்றப்
பிதம்புறம் பேசலும், அவளும் புருஷனைப் பெண்சாதியை
யன்பாய்த்தாய் தங்கை முஸ்லிம்களும், தேளும்பாம்பும்
போற்கொட்டு நரைத் திரிபோலெரிபார்கணரகத்திலே. 2

ஆண்டோனே வினபறுவுகளை யழகார் முஹம்மது நபி
ஸுன்னத்தை, வேண்டுமிமாம்கள் தம்சொற்படியே மேலா
மாலிம்கள் சொல்லக்கேட்டு, நீண்டோன் றனைநித்தம் வணங்
காமலே நீலனிபுலீசுக் கிணங்கினோர்கள், தாண்டி விழுவார்
கணரகிலென்று சங்கையறிவாள ரெடுத்தோதினார். 3

சாத்திரம் குறிகேட்கும் பேர்கள் தம்பிரானபி மார்க்கத்
துக்குக், கோத்திரந்தம்பிக் குப்ரினாலே கொடியநரகத்தின்
மடியவீழ்வார், மூத்திரங்கொண்டு துப்புரவாய் முழுகிக்கழுவு
வாரவர்கள் போலே, பார்த்த சாத்திரம் பலன்கொடாமற்
பாவியாகவே சாவார்களே. 4

மாரியம்மைக்கு நேரும்பேரும் வந்துகூடியே பாக்கும்
பேரும் வீரியமதாகப் பாடியாடி வேண்டும். பிச்சைகள்
கொடுக்கும்பேருங், காரியமதான நன்மைகளைக் களைந்து
கிளைந்துவிட்டுரியானாகச், சூரியனைப்போல கோடிப் பங்கு
சூடாம்நரகத்தின் மடிய வீழ்வார். 5

சன்னதம்வந்து தொட்டதென்றுஞ் சன்னியாள் துள்
ளுககுட்டியென்றும், பின்னாச்சியாச்சி யண்ணனென்றும்
பெலத்த தேவுகள் தானாமென்றும், வன்னம் பொருத்த பேய்
மருட்களாலே வந்தநசல்பீத் தந்திருமென்றும், என்ன கேட்
டாலுஞ் சொன்னபடி யீந்தோரீமானை யிழந்து போவார். 6

அப்பச்சி யென்றுமையனென்று மதிகதுரைக்காரன்
காத்தானென்றுங், குப்பைதனிலெச்சி காட்டேறியுங் குறி
காரன்வீரன் பிடாரியென்றும், இப்படிச்சில பேய்கள்பேரை
யேற்றிபோற்றியே வணங்கும்பேர்கள், தப்பிதமதாக
ஈமான்மாறிச் சாவார் நரகத்தில் வேகுவாரே. 7

வெள்ளைச்சாவல்கள் கருங்கடாய்கள் வெட்டியே தலையி
ரத்தந்தனை, எள்ளுபோலேதான் தொட்டிசுற்றி யெதிர்த்து
நெற்றியிற் பொட்டிடுகிற, கள்ளநசல்பித்தந்திரு மென்றோர்
காபிருகவே சில மனுட, ருள்ளுக்கிழிக்கிறது ஈமானும்போ
யெடுக்க நரகத்தில் வீழ்வார்களே. 8

குமஞ்சான்புகைப் போட்டுமணங்காட்டியே குடிமித்
தேங்காய்களுடைத்துவைத்துச், சமைந்த சிலைகற்போற் சுரு
பங்காட்டிச் சந்நிதிமுன்னே விளக்குமேற்றிக், குமிந்தபால்
பழஞ்சோறுகறிகூடவே பலபுட்பம் பொரிகள் தூவி, அமைந்த
குமரிகள் மானமில்லா தவாழுமக்குத் தான் பித்தந்தீர். 9

அசைந்து முடிவிரித்தாடிப்பாடி யனேகமந்திர மோதி
யூதி, யிசைந்ததேவுகள்பேரைக்கேட்டங் கீனமாகவேபார்த்
துப் பார்த்து வசந்தசன்னதம் வந்தாடியே வாழும்வீடுகள்
பாழுமாகிக், கசந்தநரகத்துக்காபிருகக் கடிந்தபலாய்
கொண்டு சாகுவாரே. 10

கர்ப்பந்தனிற்பிள்ளை கருமாரியுங் கருணையுளநாய விறங்கு
மட்டும், அற்பமாகினும் வெளிப்படாதே யதிலே சிலபேர்கள்
குபிர்கள் செய்து, தப்பிதமதாகப் பணங்கள் வாங்கச் சகல
மந்த்ரதந்தரங்கள் செய்வார், ஒப்பியதற்குத்தான் சம்மதித்தே
யுடமையீந்தோருங்கபிருவார். 11

மனுடர்க்குணவான பலவகையு மலமாயெரித்திடும் வயிற்
றைக்குட், பனியின் றுளி போலவிந்தானதைப் பகரமாகவே
யுருவமாக்கிப், பனியாதம்மக்கள் தனைவளர்த்து வரவிட்ட
வல்லோன்றனை யன்றியே, சனியாம் ஷைத்தானை வணங்கும்
பேர்கள் சாவார்நரகத்தில் வேவார்களே, 12

மீருன்ஸாகிபா மொலியிடத்தும் வேணவொலிமார்கள்
தம்மிடத்தும், நேராகநேர்ந்த கடனீவது நிலையாமுறைமை
கள் தவிராமலே, ஆராய்ந்துசொல்லும் ஆலிமிட மறிவித்த
வர்களின் சொற்படியே, பூராயம் தான் நாயனுக்காய்ப்
புசிக்குமிசுக்கீனுக்களியுமென்றோர். 13

பித்தமுதலான நசற்பிடித்தாற் பேணிமருந்துக்கள்
செய்திட்டாலும், சுத்தறிவாளர் தஆவினாலும் சுகமும்வருத்
தமும் நமக்காக்கிய கத்தனிவைகளைத், தீத்தானென்று
கருத்தினிர்ணயங்கொள்ளவேண்டும், அந்தநாள் வந்துமுடிந்த
தென்றா லாரேபார்த்தாதுந்தீராதென்றோர். 14

மனுடர் மவுத்தாகப் போறாரென்று மார்க்கந்தனைவிட்
டுக்குபிர்கள் செய்தாற், கனதியுளமூச்சைத் திருப்பலாமோ
கத்தன்றனக்கது பொருத்தமாமோ, பனியர்தம்பாவாநபியா

முதல்மற்றவொலிமார்கள் மவுத்திலையோ, தனியாமிறையவ
னருளல்லாமற் சகலபடைப்புமே மவுத்தாகுமோ. 15

நம்பிராட்டிமார் மவுத்திலையோ நல்லபாத்திமா மரித்தி
லையோ, தம்பிரானீசாநபியுமவர் தாயாமறியமுமவுத்திலையோ,
வும்பர்பல பேருமவுத்திலையோ வுள்ளபடைப் பெல்லாமுற
வறுத்த, வம்பரிசுறுயீல் மவுத்திலையோ வலியாம்ஜின் பரிம
வுத்திலையோ. 16

உங்கள் தாய்மார்கள் மவுத்திலையோ வுவப்பாந்தகப்பன்
மார் மவுத்திலையோ, சங்கையுடனுங்களுடன் பிறந்தார் சகல
ராண்பெண்கள்மவுத்தில்லையோ, மங்காமாமன்மார் மாமிமார்
கள் மக்களாண்பெண்கள் மவுத்திலையோ, எங்கள் தாய்
தந்தை பேத்திபேர னெடுத்து வளர்த்தபேர்மவுத்திலையோ.

மங்குப்புழுதிகள் கூட்டிவிளை யாடும்பிள்ளைகள் மவுத்தி
லையோ, தங்கும்வேத நால்வழிகாட்டிய சங்கையுஸ்தாது மவுத்
லையோ, மங்காதுயர்த்தியாய் வளர்ந்துநிற்கு மரங்கள் கடல்
மலைமவுத்திலையோ. எங்கோனவனல்லாலவன் படைத்த
தெல்லா மவுத்தென்றே யீமான் கொள்வீர். 18

நாட்டுநடைப்படி குபிர்செய்யாமல் நல்லவறிவுகள் சொல்
லப்போனாற், கேட்டுநடவாமல் மாறுசெய்து கீர்த்தியால்
முன்னா லறிவாளர்தான், பாட்டனார் காலமிருந்தபேர்கள்
பார்த்தேவிலக்காத செயலெனவே, யோட்டைக்குடங்
கொண்டுமேட்டுக்குத்தானூற்றுந் தண்ணீர்போல் வார்த்தை
சொல்வார். 19

முன்னால்முஹம்மது நபிநயினார்மொழிந்தஹதீ தொன்று
தெளிந்துகேளீர், பின்னால்வருங்காலம் ஆண்டவனின்பெலத்
தகை பாவிலிருந்தோரையும், அந்நாளினில்மதீனத்தோலையு
மாய்ந்து பார்த்து நல்லமல்செய்யவே, சொன்னாரதின்படி
நடந்துகொண்டாற்றுய்யோன் றஹ்மத்திலாவீர்களே. 20

இஸ்லாமார்க்கத்துக் குதவியாக விசைந்தகாபிர்க ளிஸ்
லாமா, கார்பிசகாங்குபிருக்கே யுதவியாகப் பேசமூமின்கள்
காபிராவார், வசையாங்குபி றக்கே யுதவியாகப் பேசுமூமின்
களுடைய பீந்தாற், பிசலாய்க்கு பிர்தனை வளர்த்திங்கீமான்
பேணுந்தோணியைக் கவிழ்த்தோராவார். 21

இஸ்லாமானபேர் தங்களாலே யேலாதகூலி வேலை
தனைக், காலாயுளகாபிரானுலுமாங் கற்றவேலைகள் கொள்
வதற்கு, முஸ்லிமான பேரிருக்கையிலே முழுதுந்தனதாக
நம்புதலாய், இசலுங்காபிர்களானவரை யினியனுக்கினுற்
சனியனுமே. 22

ஈமானாளமூமின் றனைக்கூடிக்காமென்றேயுரைசெய்தா
னின் வேதத்தில், நாமாகாதென்றே காபிர்களை நம்பியேமிக
வுவந்துதானே, ஆமாமவரென்று காரியத்திலன்பாகச்
சேர்த்துநம்புடுகிற், சீமான் றனமான ஈமானெல்லாஞ் சிறுக்
காம் குபிர்தனிற் பிரியுமென்றார். 23

கணக்கப்பிள்ளையென்று காபிர்களைக் கனத்தசீமான்
கள் வாயிலிலே, இணக்கமுடனே தானவர்களுக்கே யிசைந்த
சம்பளமு வந்தீந்திடிங், குணக்குங்குயிருக்கு முகவியாகக்
கோயில்தனில்பூசை செய்வித்தவர், கணக்காம்பிழையா கிரத்
திலெனக் கத்தனறிவாள ரெடுத்தோதினார். 24

வயிற்றுப்பிழைப்புக்குப் பலஜாதியும் வலியவுறவாக
விருக்கவேணும், கவுத்துமதில்லாமூமினுடன் கலந்தேயுறவாக
விருக்க வேணுமவுத்துவருமட்டுங் காபிருடன் வாக்குமன
மொன்றாய் நடந்தோர்கள்தான், சவுத்துப்புவிட்டுக் கியாம
மானாற் றாங்கள் வருவார்களுவந்தோருடன். 25

பொங்கன்திருநாட்கள் கோயிலுக்குப் பூசைசெய்யத்
தளவாடமீந்தோர் தங்களீமானைக் கொடுத்துவிட்டுத் தாழ்ந்த
குபிர்களை யேற்றதாகு, மங்குங்குபிர்தனக் கொத்தாசையாய்
வார்த்தை மொழிந்தோருங் குபிராவரென, றங்கொளமுஹம்
மது ஹதீதின்படி யறியவறிவாள ரெடுத்தோதினார். 26

ராமேசுரத்திற்போய்க் குபிர்கள்செய்ய நடக்கமாட்டாத
காபிருக்கு மூமின்வாகன மேற்றிவிட்டோர் மூதேவியான
பாவியென்றார், காமமிகவுள்ள நசற்காரன்றான் கலந்து
வினைச்செய்ய நடையற்றோனைத் தாமதமில்லா மற்சுமக்குந்
தையூதாகவே குபிரிலாவார். 27

கப்பலொடுபத்தா மாலுமிக்க கனத்தபடவுகள் சிற்று
ருக்கள், செப்பமுடன் வைத்து வேலைசெய்து தீர்ந்தபின்ன
தைக் கடலிறக்கத், தப்பிதமதாக வேயதனிற் சுந்தன மஞ்
சட்பாலூற்றியே, அப்பியதிலொருதேங்காய்தனை யடிக்கக்
கொடுத்தோருங் காபிராவார். 28

ஓடாவிகொல்லன் வைத்தவோட மோட்டப்பவிசெய்தி
ரத்தங்காட்ட, மேடம்வாங்கியே கொடுத்தபேர்கள் வீழ்வார்
நரகத்திற்றாழ்வாய்ப்பின்னும், கோடாப்பல்லக்கி தவனை
யேற்றிக்கொண்டு நடப்பது மாகாதென, ஏடாங்கித்தாபுகள்
படித்தபேர்க ளேசிவிலகாதார் தோஷியாவார். 29

இஸ்லாமாகிய பெண்ணிக்குப்பெண் ணாண்டுமுன்கையு
முகமுமல்லால், வசையாயுடல் காப்டொண்ணாதெனவே
மார்க்க விதிப்படியிமாம்கள்சொன்னார், திசையாமிஸ்லாத்

தின் பெண்கள் சிலர் தேசங்கனிற் காபிர்ப் பெண்கள் தனை, நசையாம்வேலைகள் வேணுமென்று நாடிமுடிகிடிற் பாவியா வார். 30

வெள்ளாட்டுத்தலைபோற்லேயும் விளம்புமதின்படிபோன் முலையு முள்ளபறைச்சிக ளிடைச்சிமுத லோதும்பலஜாதிப் பெண்களையே, விள்ளும்வீட்டுக்கு ளழைத்துவைத்து வேலை கள்யாதுங்கொள்ளாமலே தள்ளிவெளியிலே போகச்சொல் லித் தருந்தோரால் வேலைகொள்ளுமென்றூர். 31

உங்கள்மானிபமுறுப்புகளை யொளியா வெளியாகத் தான் காட்டினுற் சங்கையுள்ளவள் சரீரமதைத்கானும்வெளி காட்டக்கூசாளதா, லெங்குந் திரிகின்ற பன்றியோடு மேற்ற முளகன்றுங் கூடிமேய்ந்தாற், பங்கப்பழிப்பான நரகலினைப் பன்றி போலவே கன்றுமேயுர். 32

கோவில் நிலத்திலே குடியிருந்து கொடுக்குந் தீர்வையும் வாரங்களும், தேவி தனைவைத்துப் பூசைய்யுஞ் செலவுக்குதவி களாமெனவே, பாவி முஸ்லிமவ் வூரைவிட்டுப் பயந்து மறு வூரிற்போகவேணும், போகமாட்டாத பேர்களெல்லாம் புண் ணியமெத்தச் செய்யுமென்றூர். 33

அல்லா முஹம்மதரேவற்படி யழகாரிமாம் கடாமுண்டா கின்ற. நல்லார் கித்தாபினிற் பிக்குகுதனில் நாலாவிதமான அறிவுசொன்னூர். வெல்லாநிற்குமக் கித்தாபின் சொல்லை விரும்பா திஃகில்லையென்றபேரும், இல்லாத சொல்லை யுண் டென்றுமே யேற்றி மொழிந்தோருங்குபிரிலாவார். 34

நாயன் முஹம்மது மார்க்கத்திற்கு நயமாபொரு மார்க்க முண்டென்றாலும், காயசரீரத்தை யழித்தெழுப்பிக்கணக்குக் கேட்பதையிலையென்றாலும், ஞாயமானதோர் ஹலால் ஹறா மும் நய ம நஷ்டமுமிலையென்றாலும், அயுமொருவனே நாய னவன் னவனும்கினை வைத்தாலுங்காபிராம். 35

குபிர்பெரும்பாவம் விலக்குப் படலம்-முற்றிற்று.

ஆகப் படலம்-8க்குத் திருவிருத்தம்-160-

---

## வட்டி விலக்குப் படலம்.

வட்டி பலிசைக்குக் கொடுத்துவாங்கும் வண்டன் முனு பிக்குக் காபிரினுங், கட்டி யணைந்துதான் பெற்றதாயைக் கலந்தஸினுச்செய்த பாவியென்றுங், கெட்டியாகவந் திருக்கு மென்றும் கித்தாபுகளிலுள்ள வறிவையெல்லா, மட்டி மனு டருக்குரையுமென்று வரிசையரிவாள ருரைத்தனரே. 1

அளவு நிறைதனிற் கடனிதனிலதிகங் குறைவாக்கி நயம்
பெற்றோர்க்குங்; களவும் வட்டியு மாமென்றோர்க்குங் கடந்த
கியா மத்துநாளினிலே, இழவுஞ் சலிப்புமாய் வருத்தங்களு
மேகன் லகுனத்து முண்டாமென்றும், தொழுதிங்கிருந்தாலு
மதாபுண்டெனத் தொல்லையணுகாத நல்லோர் சொன்னார். 2

ஆகாதவட்டி தின்போரையுமதற்கேயுதவியாய்க்கொடுப்
போரையும், வாகாய்ப் பேசிய சீட்டுகளை மதிப்பா யெழுதியே
வரிவோரைய, மோகாந்தரசாட்சி யானோரையு முறுஸல் நபி
மாருக்கேற்றமான, தாஹாநபிஹாதி முனிந்தாரென்று
சங்கைச் சாபிறுசொல்லுளதே. 3

வட்டிப் பொருள்வாங்கித் தின்பதுதான் வல்லோனிடத்
திலே முப்பத்தாறு, மட்டிப்பயல்கள்செய் ஸினாவதிலும் வலிய
கொடுமையாமெனவிறசூல், கெட்டியாகவே சொன்னாரென்று
கீர்த்தியப்துல்லாவெனும் ஸஹபி திட்டமாகவே சொல்லினது
தீங்காம் வட்டியைத் தவிர்ப்பீர்களே. 4

வடுவாம் பலிசையைத் தின்றபேர்கள் வாடிக்கலக்மாய்க்
கியாமத்திலே, கடுவாம் ஷைத்தான் ஜின் பிடித்தவரைக் கடுப்
பமஜ்னூனா யெழுப்பப்படும், நடுவாமிறையவன் வேதத்
திலு நல்லநபியுல்லா வார்த்தையிலு, நெடிதாய்வருகின்ற
திவையறிந்து நிலத்திற் கெடும் வட்டியினைவிடுவீர். 5

ஏறும் பலிசைக்கு வாயில்தானு மெழுபதொடு மூன்று
வாயிலாகும், கூறும்படியதி விலேசாகிய குற்றமுளவாயில்
தாயைச்சினாத், தேறச் செய்தபோ லென்று ஹாக்கீந்
தெரிந்து சொல்லிய ஹதீததனை, நாறு தனைவிட்டே யகன்
றிடவே நலமா யெடுத்துரைத் தாருளதே. 6

வட்டிதனிற்கீலாச் செய்தோர்களை வடுவாம் கின்சூறும்
நாயும்போலே, திட்டமுடனாளை யெழுப்பப்படுந் திடனாக நபி
சொன்னதினால், மட்டில்லாத பேறுள்ள இமா மாலிக்கஹமது
இபுனுஹம்பல் வட்டிதனிற்கீலா ஹறாமாமென்று வண்மை
யுடனோதி னாருளதே. 7

வகையாய் வட்டியைத் தின்றவர்கள் வயிறு பெறும்
வீடாய்க்கிடக்கிறதிற், பகையன் பிறவூனின் கிளையாரெல்
லாம் பாய்ந்து முதித்துக் கொண்டே போறதைச், சகல
படைப்புக்கு முந்துநபிசாகான்றனைக்காணப்போ மிரவிற்,
புகலாய்க் கண்டேனென்றுறைத்தசெய்தி பாவிகாள் நீங்கள்
கேட்டிலையோ. 8

கனதியுள இமாமபீஹனிபாமழறே றெஹூதிக்குக் கடனுய்மிகுதனமாம், பொருள்கொடுத் திருந்தாரைத் தங்கள் மனத்தி னிற்றேற்றாதன்னேன், தனதாகிய வீட்டுச் சுவர் மணுள்ளித்தங்கள் கித்தாபுறக்கிக்கிட்டதா, லெனதுபொருள் வேண்டா மெனவவற்கண்டேங்கிப் பயந்துதான் கொடுத் திட்டாரே. 9

கல்ல துடைந்தாலுஞ் சொல்லுடையாக் கனத்த இமாமி புன்ஹாஜறென்போர், நல்லபடி சிறுவயதனில் நாடித் தகப் பனார் கபுறுதனை, வெல்லும்படிகண்டு குறானோதையில்வேறே கபுரினிற் கடினமகச், சொல்லி வாய்கொண்டங் கந்தோ வென்று சேர்ந்த முளக்கத்தைக் கேட்டாரப்போ. 10

திட்டமாயந்தச் சத்தங்கேட்டுத்தெளிவாய் விடிந்தபின்னொ ருவர் தம்மை மட்டுப் படவேதான கேட்டளவில் () மாலைக் கொடுத்துப்பினதிகமாக, வட்டிவாங்கியே தின்றவனும் வருத் தப்படுவதிங்கென நவின்றார், கெட்டுப்போகாமல் வட்டி விட்டுக் கேட்டிங் கொழுங்குபோல் நடப்பீர்களே. 11

கத்தனபியுல்லா மிகுறாஜினிற் கண்ட விசளம ததனி லொன்றி ரத்தவாற்றினில் வட்டிதின்றோ னேங்கித் தயங்கி நின் றழுகின்றனன், மற்றவொருவர்தாங் கரையினின்று மாறுமற கல்லைக்கொண் டெறியச் சத்தனவனவாயிற் போய் விழுந்து சாடகினறிடம் போய் விடுவான். 12

தீங்காகியவட்டி தின்றவனின் றெளிவாந் தொழுகையை ஹஜ்ஜதனைப், பாங்காம் ஸதக்காவை ஜிஹாத்தனைப் *பாரி யெனுநாயனகபூல்ச் செய்யானென, ருங்காரமற்றநபி சொன் னாரென றணணவிபுனப்பாசென்பவர்தா, மோங்கியுறுதியா யெடுத்துரைத்தாருண்மை முஸ்லிம்க ளறிவதற்கே. 13

அறுநூறைந்நூறு முளநீளமா யவனிதனிற்றிற மாயி ருக்க, இறமெனுங்கூட்ட மாந்தர்மனை யிடித்தேயறமதா லொடுக்கி வைத்த, இறைவன் றனையஞ்சியவனுறசொன்ன விதியின்படியமல்ச் செய்வீராகில், மறுவிலாச் சொர்க்கம் புகுந்துவாழ்ந்து மாதுஹூறுடன் சுகிப்பீர்களே. 14

வட்டிவிலக்குப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 9-க்குத் திருவிருத்தம்-174.

---

() மாலென்பது-அறபுப்பாஷையிற் பொருளென்றறிக.
* பாரியென்பது-படைக்கிறவனென்றறிக.

# கோள் விலக்குப் படலம்.

அழிவாங் துனியாவில் நடக்கும் பாவமனேகம்பேர்களைக் கெடுப்பதாகும், எழுவான்முதற் பலதலங்களெல்லா மெரியில் கொள்ளியாற்கருக்குமாப்போற், றெழுகே பல தன்மை செய்வதெல்லாந் தோஷக்கோளினலழியுமென, வழுவா நெறியீமா னுள்ளோரெல்லாம் வடுவாங்கோள்தனை விடுவீ ரென்றார். 1

கோட்சொல்லிக் குடி கெடுக்கிறது கொள்ளிவாய் புகை சுற்றுமாப்போல், நாட்சென்ற யெல்லாங் கருக்கிப்பின்னர் நல்ல வுதட்டையுஞ் சுட்டுப்போடும், தேட்சென்று கொட்டுங் கடுப்பதுதான் சிறிதுநேரத்திற் றீர்ந்துபோகும், கோட் சொன்ன பாவமாகிறத்திற் கொடியகடுப்பாக கடுக்கு மென்றார். 2

மூசாநபிநாளி லொருவன் றன்னின் மூத்த தகப்பனார் முதலுக்காகக், கூசாதவன் தலைமேற் கற்போட்டுக்கொண்டு பிறர்களு மறியாமலே, பேசாதவனந்த மையித்தினைப் பெலத்தா லெடுத்துப்போய் மறுவாசலி, லாசாத்துடன் மைத்தவ் வீட்டினேனை யாகும் பழிகாரனுக்கினனே. 3

பழிசெய்த மூன்றாஞ் சாமமவன் பதைத்துத் துடித்துத் தானெழுந்திருந்து, வெளியிற் புறப்பட்ட தகப்பனைத்தான் வீட்டில் வரக்காணேனென்றழுது, வழிகள் பலவிடந் தேடி யோடி வந்தான் மையித்தைக்கண்டு சொன்னான், தெளியு நபி மூசா வாழுரரே தீங்காம் பழி ஞாயந்தீருமென்றே. 4

அப்போதூரவர் நபிபாலிற்போ யல்லா வுடன்கேட்டீ தருளுமென்றார், செப்புமிறையிடங் கேட்கவவன் திருவுளமா னென்னபியே, யொப்பமுள வேதமெல்லாத்திலு மொண் ணுதெனச்சொன்னேன் கோட்சொல்வதை, இப்போதெனை நீர் கோட்சொல்லெனவே யெப்படிக்கேட்பீ ரெனக்கோபித் தான். 5

வசனம்.

இந்த அதபுமாலையைக் கோட்டாற்று மூசாபிர் அப்துல் காதிறுலப்பை ஆலிம் அச்சிட்ட புத்தகத்தைக் கொண்டு-ஈ-நசிக்கினன் ரயிட்டர்கதையாகவே பலபேர்கள் பலவாறு பிழைகளாக ஒன்றைப்பார்த்தொன்றாக, அச்சிட்டு வெளியாக்கின புத்தகங்களே இதுநாள்வரையும் வழங்கிவந்தன. இப்போது நாமப்புத்தகங்களைப் பரிசோதித்ததில், இந்தப் பாட்டு நான்சையுஞ் சரித்திரப்படிக்குப் புதியதாகப்பாடிச் சேர்த்ததுமன்றி மற்றப்பாடல்களையும் வேண்டுமுறைபோலே திருத்தியச்சிடப்பட்டதென்றறிக. 6

ஆதிபெரியவனிவ்விலந்தா னருளமூசாநன் னபியப்
போது, நீதி தவிராதநாயகனே நிகழ்த்துமிக்கொலை செய்
தவர்க ளோதுமிகனுரென் றறிந்துசொல்ல வுற்றசாட்சியுமில்
லையதா, லேதென்றறிந்து நான்றீர்ப்புச்செய்வ தென்றூர
தற்கிறை யருளிச்செய்தான். 7

நாட்டும்புகழுள்ள மூசாவேநீர் நாடினவையெல்லாந் தரு
வதற்குப், பூட்டுஞ்சித்தமாயிருக்குகின்றேன் புகலுமையித்தை
நீரடுத்துக், கேட்டாற்கொலையுற்ற விழப்பமெல்லாம்கிழற்று
மென மூசாவுவப்பாய்ச்சுலர், கூட்டத்துடனே தானெழுந்து
கொலை கொண்டமையித்தின் பாலேகியே. 8

அந்தமையித்திப் பார்த்துனையில் வவனிமிசைகொன்
றோரின்னாரென, இந்தச்சபையோர்களறியும்படி பியம்பென்
றூரப்போமையித்துத்தான், பிந்திடாமலே யெழுந்திருந்தென்
பின்னவன் மகனெனதுசொத்தை, விந்தையுடன்கொள்ள
வென்னைக்கொன்றிவ் வீட்டுவாயிலிற் போட்டானென்றே. 9

துலக்கமாகவேயுரைத்துப்பின்னர் சோர்வாய் மையித்து
விழுந்ததப்போ, நிலக்கணுள்ளவரறியமூசா நீதிப்பிரகாரம்
பழிசெய்தோனைச் சொல்லற்குநிகரிலா தேமுனிந்து சுறுக்
கில்வெட்டவுமையித்தினை, நலக்கமின்றியே யடக்கிடவு நவின்
றூரேவலர் செய்திட்டாரே. 10

ஆண்டவன் சொல்லப் போகாதென்றே ஐபரங்கோ
ளுக்குப் பயப்படாமற் றூண்டியுரைப்பது கொடியபாவந்
தானுகும்புவிதனையிழந்து, மாண்டமனுடாக நரகத்திலே
வடுவாங்கோளாலேவரும்பிழைக்கித், தூண்டில்தனைநாக்கோ
டுதட்டில்மாட்டித் தூக்கிக்கட்டியே தாக்குவாரே. 11

**கோள் விலக்குப் படலம் முற்றிற்று.**

ஆ படலம்-10-க்குத் திருவிருத்தம் 185.

---

# ஸினா விலக்குப் படலம்.

எல்லாப்பாவமுஞ் செய்யாதீர்க னளெவுமேயின்ன ங்கெ
டுதியான பொல்லாச்சினாவுக்கு முடுகாதீர்க ளென்றுபுறுக்
கானி விறைசொல்லினன், கல்லார்சினாச்செய்தார் பலஜாதி
யிற் கருவாய்த்தரிபட்டுப்பெற்றபிள்ளை, யெல்லாப்பிசகாத்
தாய்குலத் திலிவர்கள் பிச்சளம்பெருகிடுமே. 1

இஸ்லாமானவள் ஸினாவிற்பெற்றூ லீடேறூதென்று மிரு
பதியில், வசையாம்வெள்ளாட்டி ஸினாவுற்பெற்றூள் வண்டர்

தனக்கெல்லாந் தொண்டுசெய்யும், இசையாக்கீழ்ஜாதி ஸினா விற்பெற்றா லெல்லார்பாதமுங் கும்பிட்டிடுந், திசையாந்தாசி கள் ஸினாவிற்பெற்றாற் றிருநாட்கோயில்கள் சேவிக்குமே. 2

தந்தன் பெண்சாதியானவளைச் சங்கையதபாகவைத்துக் கொண்டு, கந்தைச்செயலான ஸினாத்தனையேகருதிப்பலரிடஞ் செய்துவிட்டுச், சொந்தந்தனையெணிமறுபடியுந் துணிந்து மனையிடந்தோய்கிறதா, லந்தமனைவியையூற்றைவடு வாக்கிப் போட்டவனாவானென்றார். 3

நாய்ச்சட்டியிற்போட்ட அகப்பைதன்னை நல்லபாற் சட்டி யதனிற்போட்டுத், தோய்ச்சிட்டாலந்த பாற்சட்டியுந் தொல்லைநாய்ச் சட்டியாமதுபோற், காய்ச்சிட்டவன்னி யுகுது கின்றகன்னிவேசைக் குப்புணப்பற்றினாற், றோய்ச்சிட்டதோ விற் பிடித்துப் பின்னர் துய்யமனைவிக்கும் பிடித்திடுமே. 4

கெட்ட துனியாவில் வேசையர்க்குக் கீர்த்தியாய் வந்து பிடித்த புண்தான், தொட்டபுருஷன்றன் பெண்சாதிக்குந் தொடர்ந்து பிடிப்பதேயுள்ளதாற், றட்டர்தனை யெல்லா மடக்கியாளுந் துய்யோன்றனக்கேருப்பாவமாகும், எட்டியி னையும் பிடித்த பின்னரிசைந்தபெண்ணையுந் தொடரு மென்றார். 5

சங்கைநபிசொன்னார் மகுஷரிலே தாழ்மையுளபெரு நாற்றமுண்டாம், பங்கமுள் நாற்றமேதெனவே பகர்வார் படைப்புகள் தொணியுண்டாகு, முங்கிற்சினாவிலே தரிப் பாகவே மோசமணுகிய பேர்களுட, லங்கந்தனிலுள நாற்ற மென்பா ரல்லாதனக்காகச் சினாவிடுவீர். 6

நன்றி தனக்காகச் சினாச்செயலை நாடாதேபயந் தஞ்சி விட்டேனென்று முளநாய னறுஷின் கீழே யேகியொதுங்கி நிற்பாருலகில், நாரரியாகவே யிருதாளுக்கு நடுவாமுறுப் பினைப் பேணினோர்க்கங், கென்றும் சொர்க்கத்திற் குப்பி னையா னெனமானொடு பேசிவென்றோர் சொன்னார். 7

தன்வீட்டுப்புப் போலாருபோதும்பிற் றணலாயறிந்திடு மதிற்சிலபேர், வன்னியுயரும் போதுயருகின்றார் வாசாயொ டுங்கும் போதொடுங்குகின்றார், என்னையழைத்தேகின் றோரு டனே யியம்பினேனிவராரெனவே, யன்னோரிவர் ஸினாச் செய்தபெண்ணு மாணுமென்றாரென்றி றஸூல்சொன்னார்.

நாக்கும் ஸினாசெய்யு மூக்குஞ்செய்யும் நல்லகண்காதும் கல்பும் செய்யும், வாக்கும்வடிவான கால்கைதானு மற்று முறுப் பெல்லாம் ஸினாச்செய்யுமே, காக்குமிறையவனேக்கிப்

பார்த்துக் கணக்காயெழுது மென்பான் மலக்கைப், போக்குக் கிடமுண்டோவதனை விட்டுப் புறப்பட்டோவுந் தலமில்லையே. 9

வாயுமபத்தையுங் காத்தபேர்க்கு வழுத்தும் யான்பிணை சுவர்க்கத்திற்கென், ருயு நபியுல்லா சொன்னுரென்றே யழகாங்கித் தாபிலேயெழுதின தால், மாயனிபுலீ சுகலைவிதத் தான் மனையாள் தனைவிட்டுச் வினைச்செய்யாமல், நாயன் றனக்கஞ்சி மூமின்களே நாவுமபத்தையும் பேணுமென்ருர். 10

வாலிபமதான பலத்தைநீங்கி மகாராஜன் அல்லா முகத்துக்காக நீவினைத், தனைச்செய்யாமலே நெடியோன் றனை நித்தம் வணங்கினேர்க்குக், கூலிகொடுப்பது போலேயிந்தக் குறைந்த துனியாவில் மானுடரிலே, ஸாலிஹான பேராருளரோ சங்கையறிவாளரெடுத்துரைத்தார். 11

மிடுமைத்தனமான பெண்குமர்கள் வீணுந்துனியாவில் வருத்தப்பட்டே, யடிமைத்தனஞ் செய்யுமிரவுபகலல்லாதனை நித்தம் வணங்கியே தான், கொடுமைத்தன மான சரீரவிச்சை குற்றம் வாராமனித்தங்காத்தால், மிடிமைதானின்றிச் சுவர்க்கம்பெற்ற பீவிபாத்திமாஷபா அத்துண்டாம். 12

அற்பநேரத்துச் சுகத்துக்காக ஐபாம் வினைத்தனைச்செய்தீரெனிற்கற்புமழிந்துதான் பிள்ளையுண்டாய்க் கனத்தகுடிக்குத் தானனத்தமாகுந், தப்பிதமதாகச் செய்தோமென்று சவிப்புநசலுடன் பணச்செலவும். அப்பினரையாப்புக் கரந்தியுண்டாயனேகம் பேர்க்கெலாஞ் சினேகம் போமே. 13

மனத்தால் வினைத்தனை நினைப்பதுவும் வண்டக் கருத்தாக நோக்குவதும், அனத்தம் விளைக்கின்ற நாவுகொண்டே யன்பாய் விநோதங்களருளுவதும், கனத்தபெரும் பாவம் வினைத்தனக்குக் காணுமிதுபோதும் வினைவுண்டாகில், இனத்தோரடங் கற்குங்கடும்வடுவா நியல்பாய் மணமுடித்திருப்பீர்களே. 14

ஆணுமாணுமாய்ச் சேர்க்கைசெய்யும் ஐபாம்பெண்களுமப்படியே, பூணுமுடிகிளை படுக்க ஹறாம் பிறந்த குழந்தையும் புருஷனல்லால் வேணி முறவுள்ளோ ரெவராகிலும் விலகித்தூரவே படுமெனவே, ஆணும்பெண்ணுக்கு மதமாகவே யறிவாளர் சொன்ன வறிவுதானே. 15

கந்தத்துனியாவின் மனுடர்களே கனத்தபாவங்கள் செய்தவரிலிந்தவைபான பாவஞ் செய்வோரெறியும் நரகத்

திற் படுவதுபோ, லெக்தப்பாவியும் படுவதில்லை யிவர்க்குத் துனியாவி லாகிரத்திற், கெந்தமுள நாற்றம் பலீ ஹத்துண் டாய்க் கேட்டபேரெல்லாம் லகுனத்தென்பார். 16

ஸினுக்கள் செய்வீட்டில் கியாமமட்டுந் தேவன் லகுனத் தங்கிறங்குமென்றும் பனுவாம் ஸினுவதின் பாவத்தாலே பக்க மெழுவது வீடு பாழாம், வினுவாயறிந்துதான் ஸினுவைவிட்டு மேலோன்றனக் கஞ்சி நிக்காஹு செய்வீர், குனுவாம் ஸினு வாசை மறந்தவர்க்குக் கொண்டாடுஞ் சொர்க்க மனந்தரமே.

அசலார்பெண்களை யழிவுசெய்தா லவன்றன் குடும்பமு மழியுமென்று, நசலாந்துனியாவிற் கடன்வாங்கினு னுளைக் கொடுப்பது போலதாகும், கசலாம் ஸினுச்செய்த பேர்கள் தனைக் கல்லாலெறிந்து தான் கொன்றுபோடப், பிசகா வேதத் தீர்ப்பதனிற்ருனே பெரியோ நபி சொன்னுர் திடனுகவே. 18

கள்ளுக்குடிப்பது போலத்தோஷங் கனத்த பாவங்க ளொன்றுமில்லை, யுள்ளுக்குறவான வினங்களிலு மோதுந் தாய் தந்தை யுவப்பாகிய, பிள்ளையவர் பாலுந்தெரியாமலே பேயாமஸ்தினுற் கைபோடுவா, ருள்ளபடி சொன்னுரறிவா ளர்தா னெழியுங்கள் மஸ்தைப் பழியுமென்றுர். 19

பெட்டிகளைக் கையால் முடைந்தொடுத்து பெருமையுடன் விற்கத் திரியும்போது, கெட்டியுள மன்னன் கிட்டனுளைக் கிருபையுடன ழைத்தென் னுடனே, கட்டியணைந்திட வேண்டு மென்று கழறியழைத்தபின்மேல் வீட்டினின், றெட்டிக் குதித் தனளச் செய்தியை யியம்ப வொருக்காலுங் கேட்டிலீரோ. 20

சரக்குக் கௌவாவென் றெருருவர்தமைத் தையலழைத் தெனைச் ஸினுச்செய்யென, வுருக்கத்துடன் சொன்ன போதவர்தாமுடையோன் றனக்கஞ்சி யொருசா அத்தும் தரித்த விவ்விடத்தாகாதென தன்மைச் ஸினுத்தவிர்த்தோர் ஜடலம், பெருத்த மணமாகக் கஸ்தூரிபோற் பெற்றுரோர் விசேடநீர் கேட்டிலீரோ. 21

வண்மையுளமன்சூ றெனு மொலிதான் மங்கையுடன் சிற்றுயொருவன்பேசித், தன்மைச் ஸினுவுக்கென் றழைத்த போது சடத்தம் சொல்லிப்பின் னழைத்தவனைச், செம்மைத் தொழுகைமேற் பராக்காவே சிறப்பாயிருந்தபின்சிலமசலா, வுண்மையுளசொற் கேட்டவளிறந்தவுறுதி விசேடநீர் கேட் டிலீரோ. 22

அசுவர் தனிற்கெட்ட வினைச்செயலை யழகார் பனியிஸ்
ராயீல் காலம் *இசுமத்தெனு மங்கை தவிர்த்துகொண்ட
வேற்ற முளகிஸ்ஸா தன்னைக்கேட்டு, விசுவாசங்கொண்டு
பேணுகலாய் விண்ணேழமைத்தோனை யஞ்சிநன்மை, குஷி
யாகச்செய்து நடந்துகொள்வீர் கோதையாடவரனைவோருமே.

மலைமே லிருந்தொரு மங்கையவள் மதிபோல் வதனமாய்
வந்திறங்கிச், சுலைமா னிபுனுமசாறுதமைச் சொகுசாய் மருவு
மென்றோதியபின், கலைசேர் சுலையுமா னென்பக்கலிற் கள்ள
னிபுலீஸிங் கனுப்பினனென். றலைபோற் கரைந்தழும் விசே
டந்தனை யாலிமுரைத்திட வறிந்திலீரோ. 24

வங்க முறிந்தபோ தொருமங்கையோர்மதலை யுடனொரு
பலகைதனிற் புங்கமுடன்வர வொருகறுப்பன் பூசல்விளைக்
கின்ற விழியாற்கண்டு, பங்கச்சிறுவுக்கென் றழைத்தபோது
படைத் தோன்றனையஞ்சி மறுத்தாளப்போ, சங்கைக்
குழவியை யெடுத்தெறிந்து சறுகும்நேரத்திற் றுஆவிரந்தாள்.

இரந்தபொழுதொரு மீனெழுந்தேயினமிகவுள்ள வினைத்
தனக்கு, விரைந்தங்கடுக்கின்ற கறுப்பன்றனை விழுங்கிக்
கொடுபோனசெய்திதனைத், திருந்தவுரைத்திடக் கேட்டிலீரோ
தேசந்தனிலுள்ளவுலமாக்களை, வருந்தி யிதனைக்கொண்டு
றுதிபெற்றேவடுவாஞ் செயல்களை விடுவீர்களே. 26

அழகு மிகச்சேர்ந்த நபியூஸுபை யன்பாய்ச் சிறுவுக்
கிங் கடுமெனவே, யொளியார் திருமேனிச் சுலைஹாமயிலு
வப்பா யழைத்த தற்கவர்களோடி, யிழிவாம் வினைச்செயல்
விடடசெய்தி யேகன் குருனிலேயில்முடையோர், தெளிவா
யுரைத்திடக் கேட்டிலீரோ ஜெகத்திலுளவுடப் பிறப்புகளே.

ஆகாச் சிறுவுக்கென் றொருமடந்தை யங்கத்தனைக்காட்டி
நிர்வாணியாய், வாகார் மதத்தோடு நின்றளவள் வல்லோன்
றனக்கஞ்சித் தலைகவிழ்ந்து, நோகாவிரல்களைச் சுட்டுக்
கொண்ட நுண்மையுளஷைகின் விசேடமதை, மோகா
திகளாகக் கேட்டுப்புவில் மோசமணுகாமலிருந்துவாழ்வீர். 28

மங்கை தனிலொரு மன்னன் மங்கைவரிசை நபியுல்லா
எஹ்யா தம்மைப், பங்கச் சிறுவுக்குத் தரவுகேட்கம் படைத்
தோன்றனக்கஞ்சு மறுத்தாரவர். சங்கையடையதோர் தலை
யறுத்துச்சடுதிதொடு வாருங்காளெனவே, பங்கியுரைகேட்டுத்
தலையறுத்த பார விசேட நீர் கேட்டிலீரோ. 29

---

* இந்த (23 வது) பாட்டில் இஸ்மத்தென்று சொல்லப்பட்டிருக்கிற சரித்திரத்தை, நாமச்சிட்டு வழுங்கும் இஸ்மத்து நாச்சி கிஸ்ஸாவிற் காண்க.

புருஷன் றனக்குவஞ்சகங்கள்செய்து பொல்லாச் சினைச் செய்யும் பூவையர்க்கு, நரகந்தனிலுள்ள அதாபுதனில் நாயனவட்கீவான் பாதியென, விரிவாங் கித்தாபினில் வேதியர்கள் விளங்கயுரைத்தார்கள் பீவிமார்கள், பரிவாய்ப் புருஷனுக்குள் வஞ்சகம் பண்ணுதிருந்திடிற் பலனுண்டாமே. 30

வடுவாம் ஸினைச்செய்யும் போதிலீமான் வம்பாய்க்கழன்று போம் சட்டைபோலென், றுடுவைப்புவிமீதிலழைத்தநபி யுணர்வையுடையோர்க ளோடுரைத்தார், மெடுவாங் துனியாவி லுள்ளவாண்பெண் மோகமாய்ச் செய்யும் ஸினைச்செயலைக், கொடுமை யெனக்கண்டு தவிர்ந்திடுங்காள் கோமான் றனைநாடி வணங்கிடுங்காள். 31

அறுவகாண்டாக விரவுபகலல்லா தனைக்காட்டி வணங்கினதும், சூரிகேடனுங்கியவோர் ஸினைவுங்குறுத்து நிறுத்திடை பார்த்தபோது, வெறியாம் ஸினைத்தட்டுத் தாழ்ந்கதென வெற்றி யாரும் ஷைகிபுனு ஹாஜர், ஷறபா வஸீறினிற் பேசினார்கள் தண்மைச் ஸினைச் செயற்றனைவிடுவீர். 32

பங்கச் ஸினைவுக்கென ஒருருபுருஷன் பாங்கா யழைத்த போதவன் மறுத்தாற், சங்கை யுடையோனைப் பயந்தச்சமாய்த் தணலாயுருகின்ற நாளதிலே, புங்கமுளவறு ஷதனிழலிற் போற்ற லுடளிற்பா ளவளெனவே, திங்களிருபங்கா யமைத்தொட்டின சீமான் முஹம்மது நபி யோதினார். 33

ஸினா விலக்குப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 11-திருவிருத்தம் 218

## நஜீஸு விலக்குப் படலம்.

பாதைமுடுகவே வெளிக்கிருப்போர் பலீஹத்தாகவே துன்யாவிலும், வாதைப்படுங்கியா மத்தினிலும் வழியிற் பெருநாற்ற மாய்க்கிடப்பா, ரேதிங்கிந்நாற்ற மிவாரென வெல்லாமனுடருங்கேட்பர் வானோர், பாதைமுடுகவே வெளிக்கிருந்த பாவியிவரென்பா ரவரேசுவார். 1

நாற்றமானதோ ரூற்றையான நலக்கேடாம் பொல்லா மலந்தனையே, காற்றுபபுறத்திலே யிறக்கினோர்கள் கண்ட பேரல்லாம் பெண்டுபிள்ளை, யேற்றமானதோர் தாய் தந்தையை யெல்லாரையுமிழுத்தேசச்செய்த, வூற்றைக்குணமுள்ள தோழியென்றே யுழலுங்கியாமத்தில் வெளியாகுமோ.

கட்டுப்பட்டதோர் தண்ணீரிலே கழிந்தமலந்தனை யிறக்கின்றது கெட்டுப்போகின்ற பாவமான கேட்டிற்கேடாகும

பாவங்கண்டீர், முட்டுப்பட்டதா விறங்கினலு முழுதும்பலாய்
நஸல் பிடிப்பதாகுமட்டுப் படாதுகாண் வயித்தியனல் வந்த
நஸலுக்கு மருந்துமில்லை. 3

தெருவிற் குப்பையை நஜீஸைப்போட்டாற் சீசீயென்று
தானேசுவார்க, ளருவருப்பாகக் கிடக்குமூரை யானபடைப்
பெல்லா முனியுங்கண்டீர், ரிருளிற் புறப்படும் ஷைத்தான்
கள்தா னியம்புங்குப்பையிற் குடியிருந்து, தெருவிற்புறப்படு
மனுடர்களைத் தீங்கு நோவுகள் செய்திடுமே. 4

ஊற்றைப்பிலா லெண்ணெய் யுருக்குப்வீட்டி லுவந்தே
யதை வாங்கி யெரிக்கும்வீட்டில், நாற்றமிகவுள்ள வீட்டிற்
சொல் நல்லோபெரியோர்கள் முனிவரென்றும், போற்றும்
புகழானவூர்களிலே பொல்லா நாற்றங்கள் மிகுந்ததான,
லாற்றுவரத்தான விரணமெல்லாமந் தக்குணத்தின லழியு
மென்றார். 5

கொல்லைக்கிணற்றடி யடைக்காமலே குளிக்க முழுகவே
பெண்களைத்தான், கல்லையாகவே விட்டவன்றான் கழுதை
தனிற்கெட்ட கழுதையென்றும், சொல்லியறிவித்தா ரறி
வாளர்தான் ஸ்ரீகைமாருக்கும் புருஷருக்கும், நல்லவடைப்
பாக வடைத்துப்பேணி நாணிக்குளியென்றும் விரித்துரைத்
தார். 6

கிணற்றை யுயர்த்தித்தான் கட்டாமலே கிட்டவிருந்து
தான் கட்டுநீரைப், பிணத்தினானம்போற் கழுகிறது பெரிய
பலாயானமிடிமையாகும், குணத்தா லறிவுள்ள பேர்களெல்
லாங் கூசிவிலகியே தூரம்போவார், மணத்த வணக்கங்கள்
பழுதாகாமல் வகையாக வின்னங்கேட்பீர்களே. 7

தண்ணீரெடுக்கிற கயிறுப்பட்டை சுத்திக்கிணற்றடிதன்
னில் வீழ்ந்தால், கண்ணியபாதத்துச் செய்யவென்றே நாடி
யுலுச்செய்ய வந்தபேர்கள், கிண்ணிபோலவே கிணற்றடியிற்
கிடக்கும் கயிற்றைப்பட்டையையெடுத்தா, லுண்ணிபோலவே
சேருன தங் குடலிற்பிடவையிற் பிடித்திடுமே. 8

வணக்கம் பழுதாகும் நஜீஸுபட்டால் வரிசைக் கலிமா
வில் முதற்பறுலு, மணக்குந்துப்புர வாகுமென்றுமஃனவோ
தினராலிம்கள்தான் குணக்குநஜீஸுகள் கூடாமலே குண
மாய்த்துய்தாகவுலுவுஞ்செய்து கணக்கு மறிவுகள் தப்பாம
லே கத்தன்றனை நினைத்த வணங்குவீரே. 9

பள்ளிமுகப்பிலு மேடையிலும் பயந்துகால் நன்றாய்க்
கழுவாமலுங், தள்ளுஞ்சலுகையா லறிவில்லாமற் சண்டித்

தனமாக மிண்டிற்சென்றோர், விள்ளும் சுவர்க்கத்தராகிட்
டாலும் வெட்கிவிலகியே தூர நிற்பா, ருள்ளமையிஃதென்
றெவரு முணர்வாய்ப் பள்ளியிற் புகுவீர்களே. 10

துனியாத்தனிலுள்ள பள்ளிவாயிற் றய்யோன் றனை
வணக்கஞ்செய்யவே, பனியாதமக்கள் ஜின்மலக்கைப் பதி
வாகவைத்தானெக்காலமு, மினியாரும்பாரும் சுவர்க்கந்தானு
மிறைவீடாம் பள்ளி வாயிலதிற், சனியாம்நஜீஸுக டன்னை
நீக்கிச் சங்கையதபாகத் தொழுவீர்களே. 11

வணங்குந்தலமான பள்ளியிலே மனுடர்படுத்துநித்திரை
செய்திடிற், பிணங்கள் நாற்றம்போற் காற்றுத்தானும் புறப்
படுமவ்வாறாகிறது, சுணங்க னுய்ப்பன்றி நஜீஸுபோலாந்
தொழுகடையிடத்துக்குப் பழுதாமதா, வி ண ங் கு ம் பெரி
யோர்கள் மலக்குகளு மிவனைமுனிவர்கள் லகுணத்தென்றே.

காலுமனுடர்கள் பலர்கூட்டத்தி னம்மையறியமாட்டா
ரெனவே, தோலின் றுவாரத்தால் நாற்றக்காற்றை துசிக்கி
நகிக்கியே விட்டபேர்கள், சோலியுடன்பல ரேசிப்பேசத்
துனியாத் தனிலுமே கேட்பதோடு, காலி மிருகம்போற் றலை
கவிழ்த்து கதறி மகுஷறிற்கலக்கமாவார். 13

வணக்குந்தலமான நிலங்களிலும் வரிசை மனூருக்கநிழல்
தனிலும், குணங்கு மலபாதைக் கிருந்தபேர்கள் கொடிய
பாவியாமடிவாரென்று, மணங்கன்மேல் மெத்த பிரியமுமா
மகுஷர்க்குதவியுமுள்ள நபிக், கிணங்கு மும்மத்தி லறிவோர்
சொன்ன ரெல்லாமனுடருமறிவீர்களே. 14

நல்ல மணலாரு நிலந்தனிலே நாளுந் துய்தான நிழல்
தனிலே, வல்லோன் மலக்குகள் மனுடர்ஜின்கள் வணங்கித்
துஆச்செய்யுந்த லந்தனிலே, வல்ல வுலமாக்க ளறிவுசொல்வி
மன்றிலே நஜீ சாக்காமலே, வெல்லுமறிவாளர் வணங்கள்
போலே வெற்றியுள மூமின் வணங்குவீரே. 15

நஜீஸு விலக்குப் படலம் முற்றிற்று.

ஆக படலம் 12-க்குத் திருவிருத்தம் 233

## நிலத்தை அதிகமெடுப்பதை விலக்குப் படலம்.

ஊரிற்றலைவர்கள் மரைக்காயர்க ளுரத்தபேர்களுமட
மாகவே, வாரியெடுப்பார்க ளெளியோர்பொருள் வகையா
லதைச்சொன்னார் பகையேசெய்வார், ஆரு நஸுலுக்கு
மருந்துசொன்னாலன்பாம்பத்தியம் நஞ்சேயென்பார், பெரும்

பெலங்களும் போகாமலே பெலத்தா லடித்துத்தா மிருப்
போமென்பார். 1

உள்ள பாவங்கள் நஸலெனவு மூராருடமைதா னஞ்செ
னவும், கொள்ளை நசல்தந்து தீர்ந்தா லுமாங்குறைந்த நசலா
லே கொல்லுமென்றார், வெள்ளையறிவென்றா நினைக்கவேண்
டாம் விலக்காமுடைமையால் சுவர்க்க மில்லைக், கள்ளன்
றனக்குத்தா னுத்தாருண்டோ ஹறாமா முடைமைகற் கழுத்
தருக்கும். 2

ஊரார் நிலத்திலே குடியிருந்தா லுடையோர் முடுகவந்த
தனைக் கேட்கில், நேரா யிணக்கமாய்த் தயவாகவே நினைத்துப்
பணங்காசு விருந்தளித்துச், சீராய் ஹலாலாக்கிக் கொள்
ளாமலே சினத்துப் பெலத்தாலே தள்ளும்பேர்கள், பூராய
மான மஹ்ஷறிலப் பூமிகழுத்திடப்பட்டலைவார். 3

தெருவை நெருக்கிற பேர்களெல்லாந் தேசந் தனிற்
கெட்டதோஷியென்றே, யரிவை யாடவ ரோடுபடைப் பான
வெவைகளுமுடையு மென்றும், சேருவை யடக்கியே வையா
மலே சீர்ஹலாலலடப்படையுமென்றுங், குருவாம் நபி ஷற
கின்படி நற்குணமாய் நடந்தவரெடுத்துரைத்தார். 4

கணக்கு வழக்குகள் தீர்க்கிறதிற்கதன்றனக்காக நடுச்
சொல்லாமற், பணக்காரர்களினுறவுக்காகப் பழிகாரரைப்
போல யழிவுசொன்னாற், குணக்கு மிவன்பேரி லவனுடைமை
குறையாக் கடனாகச் சுமக்குமென்று, மணக்கு முஹம்மதரும்
மத்திலே வரிசையறிவாள ரெடுத்தோதினார். 5

தகப்பன் தாய்மக்க ளுடற்பிறப்பு சங்கை மனைவிபந்துக்
களிவருகப்பாயிருந்துதான், றனக்குமெத்த வொத்தாசைகள்
செய்தேயிருத்திட்டாலு, மகப்பார்வையுள்ள நாயனுக்கே
யவர்கள் மாறான செயல்கள்செய்தாற், பகைப்பாய் விலக்காத
பேர்களுக்குப் படைத்தோன் முனிவுக ளுண்டாமென்றார். 6

எளிய மனுடருக் கிரக்கமிலார்க் கெல்லாம் படைத்தவ
னிரங்கானென்றார், கனிவாய் மனுடரைப் பாவமன்றிக்
கனத்தால் நமக்குத்தான் சரியல்லவென், றாயும் பெருமை
யாய்க் குறைவு கண்டோரதாபுபட்டிடும் பாட்டைப்போலே,
மொழியு மனுடரிற் பாவியான மூதேவிக்குமவ்வதாபுதானே.

நடக்கும் பாதையிற் றங்கடமாய்நந்தமேடுகள் படுகுழி
கள், முடக்கும் வேருகள் முனைக்கொம்புகள் முள்ளு மரமிப்
போற் பள்ளங்கண்டாற் படுக்கும் நிலம்போலே யொப்ப
மாகப் பணங்காசுகள் விட்டும் வருத்தப்பட்டும், தடையன்றி
நன்றாய்த் திருத்துவென்றே தயவுள்ளவறிவாளர் சொன்னார்.

இந்தப்படியொரு பாதைதனி லிசைகெட்டிடுமரம் வெட்டினதா, லந்தச் சபயினுற் சொர்க்கம்பூந்தே யழியாப்பெரு வாழ்வு பெற்றூரென்று, முந்தப் பெரியவனுவந்ததினல் முற்றும் நபியாகப் புவியில் வந்தே, யிந்தை வகிர்ந்தவர் சொன்னூரென வினிய வறிவாளர் எடுத்தோதினர். 9

வணக்கத் தலமான பள்ளிதனை வடிவாய்த் துய்தாக்கி வணங்காமலே, யிணக்கமுடன் தங்கள்வீடுவாசலெல்லா மலங்காரமாக வைக்கும், பணக்காரர் பொல்லா முனபிக்கென்றே பகர்ந்கா றறிவாளராசையினல், மணக்கும் பைத்துல்லாதனைப்பேணியே வளமாக்கிடுவது பெரும்பலனே. 10

இணக்க மறுந்தொழிற் செய்வோர்களு மியல்பாய்க்கடன் வாங்கிப்பிசகினேருங், கணக்கு வழக்காக வந்தோர்களைக் கைக் கூலிக்காக வலக்கழித்துப், பிணக்கப் படுத்தியே வழிகேடாகப்பேசுமவர்களு முறைக்காகாமற், குணக்குமிபுலீஸைப் போலாமென்றே குறியா யறிவாளர் கூறலுற்றூர். 11

வெட்டுந் துரைமக்கள் முகத்துக்குமுன்வீர தீரமாய்நடுச் சொல்லுவோர்க், கெட்டுச் சுவர்க்கமுண்டாகியேயினிய நபியுல்லாவேவற்படி, கெட்டியாகவே பீஸபீலிற் கிருபை தவிராமல் மவுத்தாகியோர், மட்டில்லாதநல் வாழ்வுபெற்ற வரிசை ஷஹீதுகள் பதவியென்றூர். 12

வாலிபமான மக்களுக்கு வரிசை கலியாண முடியாமலே, காலி கழுதைபோற் பாவஞ் செய்யக் கண்டு காணும லிருந்தோருக்குக், கூலியிருவர்க்கும் பங்காயிறை கொடுத் ததாபுகள் செய்வானென்று, மூலி முனபிக்லக வெறுத்திருக்கு முஸல்லி யானபேருரைத்தனரே. 13

நிலத்தை அதிகமெடுப்பதை விலக்குப் படலம்-முற்றிற்று.

ஆ படலம் 13-க்குத் திருவிருத்தம்-246.

---

# பெண்கள் வெளிக்குளங்குளித்தல் விலக்குப் படலம்

மின்னூர் சிலபேர் கடலை முழுகவீதி வெளியாடிக் குளக் கரைக்கே, இன்னூரினுயாரென் றாராரிய வேகும்போதவர் வடிவு காட்டிப், பொன்னூர் யொழியினற் கலந்துபேசிப் பொருத்தக் குணமாகப் போய்வருதல், கன்னூசவன்கோல மாகுமந்த ஹறாமாம் செயலினை யகற்றுவீரே. 1

குட்டை வெளிக்குளங் குளிக்கிறது கொடிய ஹறாமாம் பெண் பிறந்தோருக்குக், கிட்ட விருக்கிற நாடுதனிற் கிழவர் வாலிபர் சில மூதேவி, முட்டாய்க் குளத்துக்கு வந்தபேர்கள்

முடுகி யொதுங்கியே பார்த்து நிற்பார், கெட்ட செயலிது பெண்பிறந்தோர் கேட்டு வீட்டினிற் குளிப்மீர்களே. 2

குளத்தி னிடத்திலே குளிக்குமந்தக் கோதை மார்களைக் கண்டபேர்கள், பழுத்த மரத்திலே பழமுங்காயும் பருத்துச் சிறத்தல்போற் றெரியுதென்றே, அழுத்த முளவாலிபக்கா ரர்களனேகம்பேரெல்லாம் பேசுவார்க, ளொழுக்கமிகவுள்ள பெண்பிறப்பே யொதுங்கி மனைதனிற் குளிப்பீர்களே. 3

உங்கள் மானிசச் சரீரந்தனையுரிய புருஷர்க்குத்தான் காட்டியே, தங்கம்போற் காத்தே யொப்பியாமற் சங்கைகெட வெங்குந் திரிந்திராகி, லெங்கும் புகழான சொர்க்கத்திலே யிச்சையுடன் சென்று புகுதாமலே, பொங்கு நரகத்திற் போய்விழுந்து புலம்பிப் புலம்பியேயழுவீர்களே. 4

உசந்த விலைபெற்ற மானிசத்தையுங்கள் புருஷன் தன் மட்டலாமற், கசந்த ஹறுமான பலபேருக்குங் கண்ட விடமெல்லாம் வெளிகாட்டினால், வசந்த சுவர்க்கத்தின் மணக் குமந்த வாடை மணர்ந்து கிடையாதென, விசைந்த முஹம் மது ஹதீதின்படி யினியவறிவாளரெடுத்தோதினர். 5

ஆலிம் கூட்டமு சல்லின்கூட்டமு மம்பலமரைக்காயர் கூட்டம், நாலுகூட்டமுங் குளந்தனிலே நாட்டின்படி குளிக் கிறதாற், காலிக்கூட்டம்போலாணும் பெண்ணுங் கண்டவிட மெல்லாங் குளிப்பாராதற், சோலியுளபாவ மாவதெல்லாந் தொகுப்பா யவர்களெல்லோர்க்குமாமே. 6

வீட்டிற் பெண்கள்தான் குளிக்கமாட்டார் வெறுவாய்க் கிலைகெட்டதேசமானற், காட்டின் புறத்திலேயொரு குளத் தைக்கனத்த வூரவர்கூடி வெட்டி, லோட்டுத் தனமாக வாட வர்கள் முடுகிப் போகாம லடைப்படைத்து, வீட்டுக்கோர் பணங்கொடுத்தாலும் வேண்டுமானிசங்காப்பீர்களே. 7

மேவுமானிசம் வெளிகாட்டினல் மேன்மைதா னுண்டோ வாடவர்க்குப், பாவிகாளுங்கள் நலவும்வாழ்வும் பாவைமா ராலெ யழியுமென்றார், கோவில் தாசிகள் வேசையர்கள் குளிப்பில் முழுக்கினி லடக்கமில்லார், தேவிமானிசங் காத்த பேர்க்குத் திமையழிந்து நன்மை யுண்டாமே. 8

நாயன்படைத்திடு மனுடரிலே நாலுவகையான தலைவ ருண்டும், ஆயுதியாயம் பலமரைக்காரறிவுமுள்ளவர் கூடிலதில், மாயப்பா வங்களொருவர் செய்யின் மற்றமூவரும் விலக்க வேண்டும், காயமுளவிருபேர்கள் செய்யிற் கண்டவுபயரும் விலக்கவேண்டும். 9

நாலுபேரிலே மூணுபேர்கள் நாட்டமாகவே பாவஞ்செய்தாற், சோலியிஃதென்றே மற்றொருவர் சொல்லிவிலக்கவே வேணுமென்றார், காளிபோலவே நாலுபேருங் கத்தன்றனக் கேறாக் குற்றஞ்செய்தாற், கோவமாகிய நாலுபலாய் கோமான் விடுவானவ்வூரினிலே. 10

நண்ணுந் தொழுகையை ஸக்காத்தினை நலவைநாடிச் செய்யாததாலு, முண்ணுமசனமு முடுமானமு முற்றசீமான்களீயாதாலு, மெண்ணு தானியங் குறைப்பதாலு மேற்றும் ராஜர்கணெருக்கத்தாலும், பண்ணுங்களவாலுங் கொலையினாலும் பலாயுநசலுமே யதிகமுண்டாம். 11

கண்டகுளமெல்லாம் பெண்ணினத்தோர் ஹயாவா முடுமானங்களைகிறதைக், கொண்டபுருஷனு மற்றுள்ளோருங் கொடிதாய்விலக்காமற் சம்மதித்தே, யென்றுமுளபாவ மிஃதெனவே யேழைத்தனமாக விருந்துவிட்டாற், கண்டமதுநோவப் பெறுமதாபுக்க நரகிலுருகுவார் கியாமத்திலே. 12

அன்றுவிலக்கிய பாவங்களை யாதிகுறானிலே யருள்செய்ததை, நன்றாய்ப்பெரியோர்கள் விபரித்ததை நவிலுமுளிவிம் கடாமறிந்தே, சென்றுவிலக்கியே யிருப்பீரெனிற் றேவன் மவுத்தாக்கி யெழுப்பியபின், துன்றுமழகாகப் படைத்திருக்கும் சொர்க்கபதிவாழ்வுபெறுவீர்களே. 13

கைக்குக்காப்பிட்டே யடைமைபோட்டுக் கழுக்கட்டுயர்த்தித் தண்ணீர்சுமக்க, மைக்கணுடைய நன்மடவார்தமை வாசம் வீசவே விட்டோர்கடை, வைக்கு மதிற் சரக்குகள் விற்றிட வனிதைமார்களை வைத்தகலும் வெட்கமிகக்கெட்ட கோமுட்டி போல வேறு நரகத்திற் புகுவார்களே. 14

பழய வயதான பெண்பிறந்தோர் பருத்தகுடத்தின் கையுயர்த்தி வைத்தா, விளையமடவார்க டம்மைப்போலே யெதிர்த்த பேர்க்கெல்லா மேந்திக்காட்டும், நுழையர்பறையர் பெண் சுமக்குமாப்போ லேக்கமாகவே ஹயாக்கேடாகு, மழையையிறக்கிடு நாயனை வல்லோன்கடு முனி வுண்டாகுமே. 15

புத்தைவணங்கிற காபிரிலே புத்தியுளபேர்கள் பெண்கடமை, மெத்தப்பதனமாய் வீட்டில்வைத்தே விறகுந்தண்ணீருந் தான்சுமப்பார், கத்தன்றனக்கஞ்சி வெளிப்படாமற் மனைவிதனைமண மாகக்காப்பாய், மெத்தவறிவுகள் வேணுமோதான் வெட்கமில்லார்க்குச் சொர்க்கமுண்டோ. 16

குடிக்கக்குளிக்கவே தண்ணீரற்றாற் கூலிவேலையா ளில்லாவிட்டா, லொடுக்கமுடனல்ல மனுடருட னொதுங்கிப்பதுங்

கியே யந்திசந்தி, நடக்கும்வேளையிலாடவர்க்கு நாணிப்பேணியேபோகவேணும் துடுக்காய் வாலிபக்கழுதைபோல தோகைமுகங்காட்டி யேகஹாரம். 17

பெண்கள் வெளிக்குளங்குளித்தல் விலக்குப் படலம்-முற்றிற்று.

ஆ படலம் 14-க்குத் திருவிருத்தம் 262.

## மூக்குத்திபோடும் முறைமைப் படலம்.

மூக்குத்திபோட்ட பெண்களெல்லா முழுதுந் தனைப் பெற்ற தகப்பன்முகம், பார்க்கத்தகாதென் றுரைத்தார் பலபேர்விலக்கின செயலெனவே, காக்குங்கணவனைக் காண்பதல்லாமற் கண்ணின்மணியான தமையனையுங், கூர்க்கப் பார்க்கவே யாகாதெனக் கூறினர் நல்ல வறிவாளரே. 1

ஒட்டுமூக்கத்தி போட்டாலுமா முரியபுருஷனி னாசைக்கனேன், கிட்டவிருந்துபின் வெளிசென்றானேற் கிளற்றுமூக்குத்தி கழற்ற வேண்டும், மட்டுத்தப்பியே மறுபேர்கண்டால் மார்க்கந் தனக்கது பாவமாகுங், கெட்டசையலக்ஷ ததனாற் பெண்கள் கீர்த்தி மூக்குத்தி போடொணாதே. 2

மூக்குத்திமுகம் பார்த்தபேர்கள் முனையாந்தூண்டியிற் பட்ட மீன்போற், பேய்க்கூத்தாகவே யாசைபூண்டு பிரிந்து திருப்பியே பார்த்துநிற்பார், ஏர்க்குமேவுங்க ளாடவர்க்கு மென்று முவப்பான் முகந்தனைத்தான், காக்குங்கணவனே காண்பதல்லாற் கண்டபேர்க் கெல்லாங் காட்டொணாதே. 3

நத்துடனல்ல புலாக்குதன்னை நாடிப்பிரியமாய் போட்டுக்கொண்டே, யுற்ற புருஷனல்லாதவர்கட் குவந்துகாட்டியே திரியுமின்னார், பற்றி யுழல்கின்ற நரகத்திலே காந்தியாந் தூண்டில் மூக்கிலிட்டு மெத்த வருத்தங்கள் செய்யப்பட்டு மிகுந்த பாம்பு தேள் பிடுங்கு மென்றார். 4

மூக்குத்திபோடு முறைமைப் படலம்-முற்றிற்று.

ஆ படலம்-15-க்குத் திருவிருத்தம் 267.

## பெண்களூஞ்சலாடல் விலக்கு படலம்.

ஊஞ்சலாடியே பாடும்பெண்க ளோடைநரகத்திற் சிலவிடத்திற், சாஞ்சதாயாடித் தலைகுலைந்தே தங்கள்முடி யினாற் றூக்கிக் கட்டிப், பஞ்சதாடிய கால்களிலே பாரவெரியினாற் றளைகள்போட்டுக், காஞ்சு காஞ்சுதா னுருகுவார்கள் கத்தன் றனக்கேறாக் குற்றத்தாலே. 1

ஆடுமூஞ்சலிற் றேழிமார்க ளவர்கள் பலருமாய் நரகத் திலே ஜோடுகூடிய பெண்சேர்க்கைபோற் றேஷஞ் செய்த வர் போலாகியே, பாடுப்பாட்டுக ளொப்பாரிகள் பாரவித னங்கள் படுவகோடும், ஆடும் போதுதான் கால்கள் கோர்ந் தவர் நாய்ப் பிணைச்சல்போலாயழுவார். 2

ஆடுமூஞ்சலிற் லுடுபிடவை யார்த்துக் காற்றினுள் வெளி யாகியே, யோடும்படவுபோ லுயர்ந்து தாழ்ந்தே யுரியானுக வே யுட்புறமுங், காட்டுமடவார் கணரகத்திலே கலைகளில்லாத கிளைகள்போலே, நாட்டுமரம்போல நின்றிடுவார் நஷ்டமா மூஞ்சற் றனைவிடுவீர். 3

ஊஞ்சற்கட்டின மாந்தரெல்லா முடையோன் மஹ்ஷறு வெளியினின்று, கெஞ்சிக்கெஞ்சியே யழுதழுது கீறன் முகம் போலேயாக நிற்பார் தஞ்சமாவே மலக்குவந்து தரணிதனி லூஞ்சற் கட்டினோரை மஞ்சுகுடையிடு நபியிறஸூல் மாந்தர லவென்று காந்துவாரே. 4

கொண்டானடிக்கிற பெண்களெல்லாங் கொடிய காபிர் களிழவுகனில், வண்டச்செயலான மாரடிபோல் வல்லோன் லஃனத்தைப் பெறுவாரென்று, குன்றுபோலவே யங்கண் மார்பிற் குடியாயிருக்கிற வடிவான தங், கென்றும் நரகத்தில் வேகாமலே யேறும் விளையாட்டைத்தவிருமென்றூர். 5

ஊஞ்சலாடல்-விலக்குப் படலம்-முற்றிற்று.

ஆ படலம் 16-க்குத்-திருவிருத்தம்-173.

---

# பெண்கள் வளையற்போடும் விபரப் படலம்.

நறையாமணவறை மாப்பிள்ளைதா னண்ணிப் பெண் கையைப் பிடிப்பதுபோற், கறையாங் கறைதான் வளைய லேற்றக்கையைப்பிடிக்கவே கொடுக்குந்தையல், நிறைவாய்ச் சினுச்செய்தாளிவளெனவே நிக்காஹூ துரிஸ்தல்லவென்று சொல்லி, மறையானவை யோதிமறிஞர் சிலர் வசையாய் விலக்கினுர் பாவமென்றே. 1

பற்றிக்கை பிடித்தேகவறை பார்த்துப் பார்த்துதான் வளையலேற்றல், மெத்தச் சுகமாக விருந்தாலுமாம் வேண்டா வருத்தமா யிருந்தாலுமாம், குற்றமிகவுள்ள வினுவெனவே கோதைமார்களை விலக்குமென்று, நித்த மிறையருள் பெறு மீறிஞர் நீதியார்ஹதீதெடுத் தோதினுர். 2

இட்டவளையல் களாசையினு லேற்றுங்கவறைக்கு மின்ப மாகக்கட்டுந்தாட்கச்சை நனைவுதட்டி ஹறாமாயழியுமே பெண் மானிசம், கெட்டபேர்களே வளையல்வாங்கிக் கிருபையுள பெண்களொன்றுக் கொன்றங், கிட்டுமறைவாகக் கணவ னுக்குங் கிணங்கி வணங்கு வீரிறைவனையே. 3

வளையலிருகையிற் கலகனெ வாக்கு மூக்குத்திப் பீலி பூண்டு, வெளியில் ஹறாமான பேர்கள்காண வேடிக்கை யதாகக் காட்டும் பெண்கள், துளைகளென்பது துவாரத்தி லுந் துன்ப நரகத்து நெருப்புச்சென்று, நுழையும் போதை யோவெரியிதென்றே நோவாயாகிறந்தனி லழுவார். 4

பெண்கள் வளையற்போடும் விபரப் படலம்-முற்றிற்று.

ஆ படம் 17-க்குத் திருவிருத்தம்-277,

## கந்தூரிப் படலம்.

ஒலிமார் பேரிலே சீமான்கடா னுவந்த கந்தூரி செய்ய லாகும், வலியவெவராலுந் தந்தையும் வாங்கி கந்தூரி செய் யலாகும், மெலிவா மெளியோர்க்கு வெண்சோறீந்து மேலாங் கறிசோறு வலியர்க்கீகி, லலியார் மாமனூர் தம்பொருத்த மல்ல வெனச்சொன்னூர் நல்லோர்களே. 1

வலியோர் கூடியே வெளியோர்களை வருத்தப் படுத்தியே பணங்கள் தண்டிக் கலியா விருந்துடன் வெண்சோற்றினைக் கனத்தமிடாக்கலி றச்சியாக்கிச், சலியாப் பசியில்லாப் பேர் களெல்லாஞ் சந்தோஷமதாக வுண்கிறதிங், கொலியாமறி வாளர் பதுவாவினு லுடையோன் குருவுளங் கிடையா தென்றூர். 2

மிடிமை யுளவீட்டி லரிசிதண்டி வியந்து கந்தூரி யாக்கி றதை, மடிவா யெண்ணுமல் பறக்கத்துள்ளோர் வந்துகூடியே யுண்றது, கடுமையுடன்மேயுங் காளியுடன் கசப்பு மாடுகள் கூடிமேய்ந்தாற், கொடுமையாகவே நசற்பிடிக்குங் கோலம் போலவே மிடிமையாமே. 3

ஊரில் வரும்பலாய் போகவென்றே யுவந்து கந்தூரியாக் கிறதை ஆரும்பசித்தோரை முஸ்கீன் களை யாராய்ந்து தேடி கொடுக்க வேண்டும், பேரும் பெலங்களு முள்ளபேர்க்குப் பெலத்தாற் கறிசோறு கொடுப்போர்கள்தா, னூரில் பலா யெல்லாந் திருப்பிவிட்ட வூரிற் பழிகார ராவாரென்றூர். 4

அனியாயஞ்செய்யப் பார்த்திருந்தே யறியாதவர்களை விலக்காமலே, தோனியாய் நடக்கட்டும் நமக்குச்சில சுகிர் தங்கிடைக்கு மென்றேயிருந்தாற், றனியாயிருக்கிற ஆலிம்களைத் தம்பிரானுளே கேட்பா னென்றே, பனியாதம் மக்களினில் முஸ்லிம் பாவிலறிவாளருரைத்தனரே. 5

நேர்ந்தநீயத்து கந்தூரிகள் நீத்தம்பசித்துறு மிஸ்க்கீன்களை, யாய்ந்துதேடியே யவர்களுக்கிங் கன்னமளியாத வின்னர் சிலர், போந்தமனுடர்கள் முகத்துக்கீந்து புண்யமுறுபவர் தமைத்தள்ளினுற், காய்ந்தநரகத்தி லவர்க்கடமமைக் கவிழவேதள்ளி விடுவாரென்ருர். 6

கந்தூரிப் படலம்-முற்றிற்று.

ஆ படலம்-18-க்குத் திருவிருத்தம்-283.

---

# பெண்கள் கபுறுகாணப்போகிறதை விலக்குப்படலம்

ஒலிமாருலமாக்கள் கபுறன் றியே யுள்ளகபுறுகளைத் தேடியோடிப், பெலமாய்ப்போறது விலகலெனப் பெரியவறிவாளரெடுத்துரைத்தார், நலமாயிருக்கின்ற பேர்களெல்லாம் நல்லவுலமாக்கள் கந்தூரியில், விலைமாதவர்களும் வாராமலே விலக்கிகந்தூரி செய்யுமென்ருர். 1

வடிவமிகவுள்ள மடவார்கள்தான் வாலிபக்காரர் பலர் கூடியே, கொடிகள்கூடுகள் வேடிக்கையாய்க்கோயில் நடத்தைபோல் மேளதாளங், கொடியனிபுலீஸ் கலைப்பதினுற் கூத்தாடிடுமிடந் தேடிப் போதல், செடியோனபியுல்லா ஷறஜுவிட்டு நீதிகெட்டதோர் பாவியாவார். 3

கொடிகள்தனைக்கொண்டு தெருக்கள்சுற்றிக் கோதைமார் வாசலினிலாடவர், முடுகவேவந்து நிற்கவதை மூப்பிலாப் பெண்கள் சந்திப்பதும், வெடிகள்சுடுமந்தக் கந்தூரிக்கும் வேண்டும் பணங்காசு தாருமென்று, படிறுசொலிப் பறிப்பதும் விலக்காய்ப் பகர்ந்தாரறிவாளர்பல பேர்களே. 3

பழையகபுறுகள் பள்ளிவாயிற் பந்தர்ச்சோடித்து விளக்குமேற்றி இளையமடவார்கள் பலபணியு மிணக்கமுளபட்டுப் பொற்சேலையு, மழிவுடோமவர்கள் பாலாகவே யணிந்தங்காளோடு கலந்தொன்ருக, வளவு தனைவிட்டு வெளியிலாகி வருமப்பெண்களும் பாவியென்ருர். 4

உறட்டி பார்சோரேறடிறைச் சிவக்கயூரிற்பெண்களை வரவழைத்துப், பிரட்டியறிவெல்லா மறைத்துப்போட்டுப் பெரு

நாளாகவே திருநாளாகிக், குருட்டி னிபுலீஸ்கலைப்பதினற் குற்ற மிகவாச் செய்தோர்கள்தா, மிருட்டு நரகத்திற் குரு டாகவேயிடறி விழுவாரென் றறிவோர்சொன்னர். 5

படித்த வறிவதை வெளியிடாதபழிபாதகஆலி மவர் களைத் தான், முடிக்க கியாமத்து நாளதனிற்றுய்யோ னேவ லாற் பிடித்திழுத்துக், கொடுத்த வறிவுகள் சொன்னபடி கொடாமற்கொடுவந்தீரென் றுவான, ரடித்துநெருக்கியே நர கத்திலேயதாபுப் படுத்துவாரென்று சொன்னர். 6

நாகூர் கந்தூரிக் கூட்டம்போலே நல்ல தலமான கூட் டத்திலு மேகவேஹறாம்பெண்கள் நியத்தினிய சீரணியுள தேலதைப், போகத்தகுமான வாடவர்கள் புறத்திற் கொடுத் தா லுமா மல்லேயே, லாகமுடனந்த வூர்தனிலே யழகா மிஸ்க் கீனுக் களித்தா லுமாம். 7

பெண்கள் கபுறுகாணப் போகிறதை விலக்குப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 19-க்குத் திருவிருத்தம்-290.

## கலியாண பிதுஅத்துப் படலம்.

பந்தற் கால்தனிற் பலருங்கூடிப் பாலூற்றி மஞ்சட்சந் தற்பூச அந்தச் செயலுக்குபேதைமாறு மதிலும்விசாலமாய்த் தலைவன் மாரும், விந்தையுடன் சென்று பிஸ்மிற் சொல்லி விலக்காஞ் செயலுக்குப் போய்க்கைதொட்டாற், கந்தச்செய லான ஹறாமெனவே கத்தனுல மாக்களுரைத்தனரே. 1

கலியாணந்தனினடக்கும்பாவங் கலிகாலந்தனின்மெத்த வுண்டு, மலிவா மூலமாக்கள் கலியாணத்தில் வளர்ந்த பாவங் கள் செய்வதாலே, சலியா மற்சில பேர்களெல்லாஞ் சந்தோ ஷமதாகப் பாவஞ் செய்வார், வலிதாய் விலக்காமற் பார்த் திருந்த மரைக்காமார்க்கு மப்பாவம் பங்காம். 2

தொளுகை விடுவார்கள் களவுசெய்வார் துய்யோ னபிக் கேருக் கூத்துப்பார்ப்பார், பழுது குறையாத வினைத்தனக் குப் பயப்படாமலே புறப்படுவார், பொழுது பட்டபின்னு னும் பெண்ணும் பொலியுங் கலியாணக்கூட்டத்திலே, நழுகி டாமலே தொடர்ந்து செல்வார் நரகமிவர்கட்கே பதியா மென்ருர். 3

சண்டை வருத்தமுந் தொழின் முட்டாகும் சலிப்பு மதிக மாம் புணஞ்செலவாம், கண்டதெருவிலே பலபேரிடங் கனக மணியாடை தளவாடங்கள், கொண்டு வாங்கியே கடிசெய்வது

கொடிய கியாமத்திற்கனக்குபாவ, முண்டுமென் றறிவாளர் சொன்னொரொழுங்காய் நிக்காஹுதான் செய்வீர்களே. 4

கலியாணத்தின் வீட்டுப்பந்தலில் ஹறுமாம் பிடவை வண்ணான் போட்டதி. லொலிமா ருலமாக்கள் முதலெவரு முவந்தப் பந்தலின் கீழிருந்து, சலியாமற் பெண்மாப் பிள்ளைக்குமே சங்கை நிக்காஹுதான் செய்கிறது, வலிதாயவர்களைப் பாவத்திலே மாட்டிவைத்தவயென்றார். 5

கோவில்தனிலுள்ள புத்துக்களைக் கோதைமார் சீலை மாலைசூட்டித், தேவி பலருமாய்க் கூடியாடித் திருநாள் நடப்பிக்கு மாறுபோலப், பாவி முஸ்லிம்களாணும் பெண்ணும் பந்தலில்தனிற் கூடிப்பாவஞ்செய்தோரைக், காவியாவெனு நரகமோடிக் கடித்து வந்துதான் பிடிக்குமென்றார். 6

கொட்டுக் குழலூதும் பறையரெல்லாங் கூடிக் கலியாண வீடு தனில், லெட்டிப் பார்த்துத்தான் பெண்கடமை யின்பமாகியே மனதில் வைப்பார், தட்டிக்கொட்டியே குழலூதென்று சங்கை மடவார்கள் செங்கைகொட்டிக், கெட்டியாகவே சொல்லல் ஹறாம்கெணிப் பினகத்தஞ்சி நடவுமென்றார். 7

பறைய ருருகுவார் பார்த்து பார்த்து பாவை யுருகுவாள் நரகத்திலே, குறையுஞ்செயலென விலக்கினதைக் கூட்டி முடித்தோருமாடவரு, நிறையவுருகிடுங்கியாமத்திலே நின்றே யுருகுவாரென்று சொல்வி, மறையையோதின வறிவாளர் தான் வண்மையுடன் சொல்லி யறிவித்தனரே. 8

கலியாணத்தினிற்கண்ட பெண்ணைக் கனவுதனிற்கண்டு ஹாரிஜாம் போல், மெலிவாய்க் கூலிக்கு மேளங்கொட்டு மிலச்சப்பறையர்காண் பெண்ணுடைவர், வலிவாய்க்கட்டியே கனவுதனில் மருவி ஹாரி ஜாய் நடக்குமென்றே, யொலியாமுலமாக்கள் சொன்னபடி யுண்மையறிவாளரெடுத்தோதினர்.

மாப்பிள்ளைதனைக் கோப்படித்து வாயாற் றப்பிதஞ் சொல்லும் பெண்ணுங், காப்பிட்டிருகையு முகமுங்காட்டி கண்ட நாய் போலே முடுகும்பெண்ணும், மாபபிள்ளையினை ஹறாம்தனக்கு வலியவரச்சொல்லுமாறுமென்றுங், காப்பான் றனக்குத்தான் பிழையாமென்றுங் கவலு மறிவான ருரைத்தனரே. 10

முகத்தைக்காட்டியே கையுங்காட்டி முந்தாங்கிபீலி கால் காட்டினு, லபத்தைகாட்டின பாவம்போலே யப்பெண்கணக்கிலே யெழுதப்படு, மவுத்தைக்காட்டினநாயனுக்கு மாறுமச் செயலாகாதென்றே, தவத்தைக் காட்டின ஆலிம்கள்தான் தகுதியாகவே யெடுத்துரைத்தார். 11

வாழ்த்து நற்பாடுங் களரியிலே வனிதைமாரவந்து நெருங்கியுற்றாற், பாழ்த்தபிது அத்தாமதைவிட்டு நீர்பாவைகளைக் கலியாணஞ் செய்வீர், வாழ்த்திமறைவிளையைப் பந்தல்வைக்கில் வந்தோராடங்களுங்காண்பாரதாற், றாழ்த்தியுடனிறை முனிவும்பெற்றுத் தண்மைக்குணமுள்ளதையூதாவீர். 12

நல்லோர்கனவினிற் கண்டனர்கள் நாற்றமுளபந்தற் றனிற்கூடின, பொல்லாமனுடரை காபீர்போலும் புழுத்த நஸாருக்கள் போலாகவும், கல்லாமூடர்களானும்பெண்ணுங் கலந்தபாவர்பாதிரிகளிடம், நல்லாயணைவது போலனைதல் நலக்கேடெனநல்லோர் விலக்கினரே. 13

சந்தனக்காலை நாட்டிப்பின்பு தகுத்தும் பந்தலும்போட்டதனிற், சந்தோஷமதாக விருந்துவாழ்த்துத் தையல்தனைக் கண்டேன்சுவால்ச் செய்யவே, பந்தற்சோடித்தேதயூருலாவிப் பயஹூாம் பர்பெண்கொண்டாரெனவே, யந்தமில்லாதசொல்லுரைப்போராகப் பொய்யரிற் பொய்யராமே. 14

உயிர்போய்விடக்காணுங் கிழவிகளை யூடுங்கபுற்தனிற் மூடிவைப்பார், கயிறுகிய பெண்ணைப் பந்தமேலேற்றிக் காட்டக் கடவதோ ஹறாமல்லவோ, கபுறுதனிலவள் தன்னைப்பார்க்கக் கடினமுள ஹறாமாயிருந்தால், அபுரூபமதுள பெண்ணைப் பந்தலி லமைத்துப்பார்ப்பது கடுவிலகே. 15

தப்பாய் வீணிலேயுடைமைகளைத் தான்விற்றுச் செலவிடுபவர்கள், குப்பாயி புலீஸ்க்கிகுவாளென்றே கூர்க்கவே தத்தி லுரைத்தாரென்று * கப்பால் மண்ணள்ளிக் குப்பார்களைக் கண்மூக்குனிற் செல்ல வெறிந்தோரின்னு, மப்பாற் கடந்தப்பா லறுஷ்மீதி லாதிதனைக்கண்டோ ரருளிச்செய்தார். 16

பெய்ப்பாய் வீணிலே பொருளையெல்லா மிறிச்செலவழித்தவர்களெல்லாம், சப்பாய்நிற்கின்ற கியாமத்திலே தான் சாளயப்பட்டு மிடிமையாவார், துப்பரவெனுங் கனிதன்னைத் தின்று துகக மிகப்பட்டோர் செய்திகளைத், தப்பாமற்பேசு மூலமாக்கள்பாற் சந்தோஷமதாகக் கேட்டிலீரோ, 17

கோணைத்தின மஞ்சிவணங்கிக் கொண்டு குணமாய்மார்க்கம்போல் நிக்காஹு செய்தால், மானைப்பிணையாகக் காத்துக் கொண்ட மவுலாநபி யுல்லாக்கிருபையுண்டாம், யானைதனிலேறி யூநலாவியழகாய்க்கலியாண மூடிந்தவனைப், பூனைபோற்றாழ்மை படவென்கண்ணுற் பூமிதனிற் கண்டேனறிவீர்களே. 18

* கப்பா லென்பது-கையென்று கொள்க.

சிறைச்சாலைகளெனும் பதிதனிலே சீராட்டிங்கேதுசிறப் பிங்கேது, குறைநோய்மிகுந்திடும் பதியிலிங்கக்கொண்டாட் டமேதது கொட்டேதுக்கோ, நறைசேர்நபியுல்லா ஹதீது கேட்டு நயங்கள்பெறவழிப்படுவதுடன் மறைநற்புறுக்கானின் சொற்படியே மவுத்துவருமட்டு நடந்தோர் நல்லோர். 19

வடிவாயொப்பித்த மங்கையரை மனுடர்பலர்காண நமக் கென்னச், சடைவாயிருப்பவன் வண்டனாகுஞ் சாற்றுகிறந் தினிலவடனக்குப், படி மீதவள் தந்தை யினத்தோருக்கும் பார்க்கப்போயிருந்தவர்களுக்கும், நெடியோன்லஃனத்தும் நபிமுனிவு நீங்காதுற்றிடு மிதுநிசமே. 20

பந்தல்தனிற் பெண்ணை மாப்பிள்ளையைப் பலருங்கூடி யே வைத்துப்பின்ன. ரந்தமூடரிற்சிலபேர்கற்ற ஆலிம்களைக் கொண்டும் பலரைக் கொண்டு, சந்தோஷமதாகிச் சிரிப்புண் டாகச் சடத்தமாய் வேஷங் கொண்ட பேர்கள், மூந்தவுள நாயன் முனிவு பெற்று மூதேவியதான காபிராவார். 21

ஐயாரங்காட்ட வேணுமென்றே யந்தக்களரியி லிருந் தோர் சிலர் ஒய்யாரமதோடுமெழுந்தாடிய யுள பெண்ணுடைவர் சிரித்திடவே, கையாற்பெண்ணைத் தான் றாக்கிக்கொண்டு காணவோடு வோர்பார்ப்போர்களு. மெய்யாகிய அல்லாமுனி வினாலே மெத்த வருத்தமாய் நரகிலாவார். 22

கதைகள் போட்டுத் தான் கோப்படித்தத் கண்டபல பெண்கள்மாரூட்டலாய்க், கதவைச்சாற்றியே மூக்கும்பொற் றிக் களித்து வாயினால் தப்பியங்கள், மகத்தகொழுப்பினால் மவுத்ததனை மறந்து பேசுவோர் கியாமத்திலே, கதறிக்கத றியே வாயினாலே கானாமூனத்தால் நாறுவாரே. 23

சங்கையுளநல்ல முஸ்லிமான ஷறகின்மனுடரேயிங் வீணெல்லாஞ், சங்கையிலை யென்று கண்டே யிங்கத் தன் மைக் குணங் கண்டுவிடு வீரென்று, மங்கைதனைச் சிறைமனை யில் வைப்பீர் மாடாடுகள்போலோடிட விடாதீர், நங்கை தனக்கு நற்புத்திசொல்லி நாணம்வருத்துவீர் றஹ்மத் துண்டாம். 24

தன்னையறிந்தவோர் பெண்பிள்ளையைச் சங்கையதபாக மறைத்துவைக்கா, தின்னதலத்திலேரத்தக்குறி யெங்கள் பெண்ணுக்குக் கண்டதென, வன்னமுறச் சொல்லிவண் ணாத்தியால் மஞ்சள் தெளித்திடவைக்குமந்த, அன்னநடை யாருமாடவரு மதாபுபடுவார்களென்று சொன்னார். 25

பெண்ணைப் பிறந்தோர்க்குத் துனியாவிலே பேசும்வடுக் களிற் பெரியவடு, வண்ணானிடத்திலே யழுக்குடனே வடுவா

யுடுமானங்கொடுக்கிறதே, யொண்ணுதே நீங்கள் கழுவாமலே யுடுத்த பிடவையை வெளுப்பதற்கு, வண்ணானிடத்திலே கொடுத்தாலவன் வடுவைக்கண்டிடிலேசுவானே. 26

வண்ணானுவிதன் கூலிகொடார் வாரியவர்வீசுமுத்தை யெல்லாம் நண்ணுய்த்தின்றவர் போலாகுவார் நாவிதன்வண்ணானே சுவானே, யொண்ணுகிய கூலிக்காரருக்குமுண்டான கூலி கொடுக்கவேணும், எண்ணலவர்க்குச் சந்தோஷமாக ஈந்தால் ஸதக்காவைப் போலாமென்றார். 27

பெண்ணுய்ப் பிறந்தவரா னோர்சிலர் பிந்திக்கலிகாலம் வந்ததிலே, மண்ணுய்ப்போனவிம் விசாரமில்லை வலியத்தொடரு வாராடவரை, எண்ணலதற்குத் தானடையாளங்களின்னதெனச் சொல்லக்கேட்டிடுங்காள், வண்ணான்பறையர்கள் கலியாணத்தை மாதருவகையாய் வந்து பார்ப்பார். 28

தோவிலடித்திடுஞ் சத்தங்கேட்டுத் தோகைமார் சிலர் தடுமாறியே, மேலின்புடவையும் பாராமலே விரித்தலையுமாய்த் தெருவதனில், பாலிபக் காரரா ராயவும் வன்கணளர்களெங்கேயென்றும், கோலம்பார்ப்பார் சணுய்போலவே கூடித்தொடர்பரவி யிவளாமென்றார். 29

அழுகைதவிலடிட்டவுட கேனதபுகேடாகக்கு மரிகள் தான், தாமும் மிருகம்போற் புறப்பட்டோடிக் காட்சிபார்ப்பார்கள் மீட்சியற்றோற், கழுகுபிணங்களைத் தேடுமாபோற் கலந்துபார்ப்பார் களாடவர்கள், தொழுதபேர்கடானுகிலுமாந்தொடர்ந்த பாவையாச்சினுவாகுமே. 30

நிறையுங்குடம் வைத்தகலியாணத்தை நீங்கள் பார்ப்பது விலக்கலாகும், குறைபுங்குடம்மது, குயவன்குடம் குற்றம் வருவது மெத்தவுண்டே, மறையுமிடம் நின்றவெளியில்வந்து மங்கைக்குடமான தங்ககுடம், நிறையுங்குடப்போலே நிற்கு தென்று நெஞ்சினினைப்பது நஞ்சாகுமே. 31

மண்ணின் குடங்களைக் கீழேவைத்து மாறு பாகமாய் வன்னமிட்டுப், பெண்ணின் குடமெல்லாம் நீராகவே பெரிய கூட்டமாயாணும் பெண்ணும், கண்ணும் பகரமாய்ச் சந்திப்பது கலந்து வினைச்செய்யுமாலசயிலு, மெண்ணுந் தீராதே யிவர்களிச்சை யிருபேர்களுமிச்சையாகச் சார்வார். 32

தரையிலிருக்கின்ற நிறைகுடத்தைச் சங்கைமணவாளர் நோக்கிப் பார்ப்பார், மறையவிருந்துதான் வெளியில்வந்த மங்கைகுடமான கொங்கையின்மேற், பறையர் பள்ளர்கள் பலர் கூட்டமும் பாங்காக நின்று பார்த்தேங்கியே, யுறையும் படுக்கையிற் கனவுதனிலுவந்தமடவார்மேல் ஹறக்கத்தாவார். 33

மறுமுகம் பார்க்கப் பெண்சாதியை மனது பொருத்தமாய் விட்டவனானன், தறுகணன்னை யூவதன்றனையே சங்கையலி வெட்டினாரப் போக, மறுபடி ரத்தமேலிற் பட்டால் வசையாம் நரகத்தில் வருத்த மென்றுங், கெறுவிதமதாகத் தூரப் பாய்ந்தே கெட்டியலியதின் படியேயென்றார். 34

தெருக்காட்சிகள் காணநாடும் பெண்கள்சீமான் சுவர்க்கத்திற் சென்றங்குறுந், திருகாட்சிகள் காணவேணுமென்றாற் சிறியகாட்சிக்கு நாணுமதால், மருட்காட்சிகளான சூதர்காட்சிக்கு மனதுவிலகியே தவிருமென்றே, யருட்காட்சிகளான பேரின் பத்தி லானவறிஞோர்கள் சொல்லினரே. 35

கலியாணஞ்செய்யு முஸ்லிம்கள் தான் ஹலாலாகிய பெண்ணு மாப்பிள்ளையுஞ், சலியாகே மார்க்கம் படிக்கவேணும்ஷர்ருகியல்தனை விலகிப், பொலிவாய்ப் பணங்காசு மிருந்திருந்தாற் பொல்லாச்தனை விலகிப், பொலிவாய்ப் பணங்காசு மிகுத்திருந்தாற் பொல்லாச் செயலிலே யழியாமலே, யொலியா முலமாக்கள் மிஸ்கீனுக்குமுவந்த கிளைஞர்க்குஞ் செலவிடுவீர்.

அல்லாதனக்காய்க் கந்தூரியிலுமகுமதாம் நபிமௌலீதிலும், நல்லாராலிம்களுற முறையார் நாட்டமிகவுள்ள மிஸ்கீனகளைச் சொல்லா லழைப்பித்தே யெல்லவர்க்குஞ் சோறும் கறியும்பால்பழமூயீந்தா, லெல்லாபறக்கத் தோடிறைரிவப்பு மிம்மைமறுமைகது முண்டாகுமே. 37

கலியாண யிதுஅத்துப்படலம்-முற்றிற்று.
ஆகபடலம்-20-க்குத் திருவிருத்தம்-327.

---

## பெண்களிழவு வீட்டுக்குப் போகுதல் விலக்குப் படலம்.

கலியாணக்கூட்டமிழவு கூட்டங் கந்தூரிக் கூட்டங்கூத்துக்கூட்டம், வலியாற் புறப்பட்டும்போய்ப்பெண்கடா மார்க்கந் தனைத்தப்பிப்பார்க்கஹறாம், கெலியாய்ப் பயந்தஞ்சி நரகத்திலே கிட்டிமூடுகா மனன்மைசெய்து, சலியர்மல் நல்ல சுவர்க்கம் புகச் சந்தோஷமதாக அமல்ச் செய்வீரே. 1

மார்க்கந் தனக்காக மவுத்துற்றோர்க்கு வயகானோர் சென்றுமினவிவர, ஆர்க்குபோதுங் காணரவன் றியே யழகாகியநல்ல விளமங்கையர், தீர்க்கமுடனந்த விழவுக்கேனுஞ் சிறப்பாங் கலியாணவழுக்கேனும், பார்க்கப்போவது ஹறுத்தோ டொக்கும் படைத்தோன் முனிவதுமுண்டாகுமே. 2

இழவுதனக்குத்தான் போவதற்கே யிசைந்தகடவி மாரில்லாவிட்டா லழகாயாண்பிள்ளை யொருவரேனு மறிந்துபோனு

லும் போமென்றுக் கணவாய்நான் போறேனென்று சொல்
லிக் கன்னிகொடார்ந்துதான் சென்றாளெனில் இழவாமாகிற
மவள் தனக்கே யிப்போ தழப்போருளென்று சொன்னர். 3

கட்டியழுவார்கள் தலைதிறப்பார்ஹறாமா மொப்பாரி
தனைச்சொல்லுவார் குட்டி குழந்தைகள்தான் தொடர்ந்த
கொடியாளிவளெனுமடையாளமா யெட்டிப்பார்ப்பார்
களாடவர்தானெதிர்த்தபார்வையாற் சினைவாகுமே மட்டி
மனுடரேமடவார்களைடியுமிழவுக்கு விடாதீரென்றார். 4

குப்புறவீழ் வாரறைந்தழுவார் குலையுந்தலைகளை தானும்
பாராரிப்படியாகா தென்றுடவ ரெட்டிப் பார்த்துத்தான்
பேசுவார்கள் செப்பிடுவித்தைசெய்வது போற்றிருடனி புலீஸ்
கொடரினலே கற்புள்ளமங்கை யாகிலுமாங்கடந்த பார்வை
யாற் சினைவாகுமே. 5

அந்தப் பெண்பிள்ளை பிழைக்கமாட்டாளறைந்து வீழ்
கிறாள் தரையிலந்தோ சொந்தமனுடரே நீங்கள்வந்து தோகை
படும்பாட்டைப்பாருமென்பா ரிந்தவயதிலே சாகலாமோ விப்
படிவைத்துப்போகலாமோ, மூந்தக்கொடுத்ததோர் மருந்
தினலே மோசம்போச்சென்போர் பாவிதானே. 6

அந்தவயித்தியன் மருந்தினலே யழிவுவந்ததேயவர்க்கென
பதும், பிந்தவரும் நல்ல மருந்துதின்றால் பிழைத்துப்போவா
ரேயென்பதுவுஞ் சொந்தமனுடருமுறவுள்ளோரும் துய்யோன்
விதியிதென்றறியாமலே, யிந்தப்படி சொல்லி தீனைவிட்டே
யிபுலீஸவனலே குபிரிலாவார். 7

இழவார்வீடுதானிபுலீஸ்க்கே யினியகலியாண வீடதாகுங்,
களவாய் வருவார்கள் சிலபேர்கள்தான் கலந்தபார்வையாற்
சினைவாகுமே யுளவாயறிந்து நீர் மடவார்களை யொதுக்கி மனை
தனிலிருக்கச்சொல்லி யழகாம்பெரியவன் றனக்காகவே
யானவிழவுக்காற் விடுவீர்களே. 8

மவுத்தாமிழவுகள் கேட்டமங்கை வல்லோன் றனக்கல்
ஹம்தலிது சொல்லிச், சவுக்கா மொப்பாரி சொல்லாமலே சங்
கைச்சலாஞ்சொல்லியிருக்கவேண்டும், ஷெய்த்கான் பிறப்
புப்போற்புறப்பட்டோடிச் சிலுப்பித்தலைகளைத் திறந்தழு
தாற், கவுத்துவமதான நரகில்விழ்ந்துகதறியழுவார் களிழவுபோலே.

உயிரைப்படைத்தவ னுடலபடைத்தோ னுவப்பாய் மனு
டரைமவுத்தாக்கினல், வயிரமாவே சலிப்பு வைத்து வணக்கந்
தனைவிட்டுத் துக்கங்காத்தோர், கயிறும்நன்மைகடனையிழந்து
கத்தன்றனக்கேறாக் குற்றமாவார், பயிராமனுவுயிர் போகும
போது பகையாமடையாள மிலதேயென்றார். 10

எளியமடவார்தங் கணவர்செத்தாவினவாழு றமுறையி ரக்கமுள்ளோர், வெளியிலிவள்போகா தித்தாவைத்து மேலோன்றனையவள் வணங்கவென்று, மொளிவாந்தாலிங்குப் பிடவைப்பண மூடுக்கவண்ண வேகொடுக்கலாகுந், தெளி வாஞ் சீமான்கள் கொடுக்கப்பெற்றூற்றீங்கா மிடிமைகள் வாராதென்றூர். 11

பெண்க ளிழவுவீட்டுக்குப்போகுதல் விலக்குப் படலம் முற்றிற்று.
ஆக படலம் 21-க்குத் திருவிருத்தம் 338

# கட்டைப் பக்கீர்ப் படலம்.

கண்டகோடாலிக் கசையாது றுங் கட்டைப் பக்கீரின் கா ரணத்தைப், பெண்டுகள்கேட்டு மறிந்திலீரோ பெரியோன் றிருவுள மறியாமலே, பண்டுவடக்கின கபுறைத்தோடிப் பார நசற்றீரப் புள்ளை கோட்டுச், சென்று நீயத்தைக் கெடுத்து வந்தசில பேர்விசளங்கள் சொல்லக்கேளீர். 1

முன்னுளொருவூரின் காட்டினிலேமூடிவெளியான கபுறு தனிற், கள ஞசவன் குடி கொண்டுகின் று காட்சிகாட்டிய வித மதனைமின்னூர் சிலபேர்களறியாமலே மிண்டுபோயோடிமார் கையேந்தி, பின்னாள் நசல்தீர்த்துப் பிள்ளைதந்தா லின்னபடி தந்து வாறோமென்றூர். 2

ஆண்டவன்லவள் நசலுந்தீர்ந்தே யவளின்புருஷனை யடுக்கச்சொல்லி, வேண்டும் பிள்ளை தான் கொடுக்கிறதுவிதியி லுண்டாலுற்பதியில்வரும், நீண்ட பெரியவன் கொடுத்ததல் லால் நேர்ந்த கபுறினுற் பலனில்லையே. தோன்றுமிஸ்லாத் தின் பெண்கள் நீவீர் தொல்லைக்கபுறடஞ் செல்லொணுதே. 3

இந்தப்படியே தானடக்கிறதை யிலப்பை மார்கவுநங் கலை வர்யாரு மெந்தப்படியாலு நமக்குக்கொஞ்ச மிரணம்வருவது வாட்டமென்றுங், குந்தமாகவே கூடிக்கொண்டு குற்றங்குறை கண்டால்விலக்காமலே, பிந்தப்படும்பாடவ் வாகிறத்திற் பெரியோனறிவானென் றறிஞோர் சொன்னூர். 4

இப்படித்தானே நடக்குங்காலத் திஸ்லாமானவரொருமீ மிலுர்மை படுங்கண்ணுரீமானெல்லாம் விழுவிச்சறுகியே போகுதென்றுசெப் பிடுவித்தை செய்வதுபோற்றேசத் தொருவருமறியாமலே, யொப்பியவர் மடடுமறிந்ததாக வொதுங்கியொரு கபுறடக்கம்வைத்தார். 5

மண்கள்தின்னுத வயிரமாக வளர்ந்தமரங்கனி லொருகட் டையைக், கண்கள்தெரியாத விருட்டிற்காணிற் கடிதிற்போய்

வெட்டிச்சுமந்துவந்து, விண்கள்படைத்தோனுமவருமல்லால்
வேறேயொருவருமறியாமலே பெண்கள்மாயையைத்தீர்க்க
வென்று புதைத்துக்கபுற்கூட்டிக்கொடியும் கட்டி. 6

அங்கேகபுறுதனைக் காத்திருக்க வழகானபக்கீரொரு
வரைத்தானிங்கேயிருமென்று வீடுகட்டி யீந்தே யிபாதத்துச்
செய்யிரும்பா, லெங்கே யிருந்தேனும் பெண்கள் வந்திங் கே
துகபுறென்றுசேட்பாராகிற், சங்கையுள கட்டைப் பக்கீ
றென்றுசாற்றும் பலத்தையும் போற்றுமென்றார். 7

ஒற்றைக்காலிலே வணங்கினவரொருவருடனேயும் பே
சாதவர், மெத்த வடித்தாலுமேசினாலும் வெட்டிக்காயங்கள்
படுத்தினாலும், குற்றமாகவேதிரும்பிப்பாரார் குறைகள் பேச
வேயறியமாட்டார், கத்தனி வர்தம்மையில்விடத்திற்காட்சி
காட்டவேயமைத்துவைத்தான். 8

பிள்ளைகேட்டாலு முள்ளபடிபெரியோன் றருவான்
காணசனுந்திரும், கள்ளனிபு லீசிங்கொருகாலமுங் கட்டைப்
பக்கீரைககலைத்ததில்லை, யுள்ளபடிசொன்னேனவர் சரீர
மொன்றுந் தின்னாதுசென்றுபாரும் பள்ளிதான் கட்டவேணு
மென்று பற்பலசெய்தி சொல்லலுற்றார். 9

கேட்டபேரெல்லா மூரிற்சென்றே கீர்த்திபெறப்பலன்
பேசிடவே யோட்டம் நடையாகவாண்பெண் சிலரோடி முடு
கியேயாடிவந்து, மோட்டுத் தலத்திலே சபுறுமாக மூமினடை
யாளங் கொடியுங்கட்டிப், பாட்டனார்போலே காத்திருக்கும்
பக்கீர்தனைக் கண்டேயடிபணிந்தார். 10

இப்படிச் சிலநாட் சென்றபி னிதிலேசிலபேர்கணேந்து
கொண்டார், கற்பனைபடி யாண்டவனுங் காரியமதாக நடத்த
லுற்றான், செப்புங்கபுறல் வாராதென்று தெளிந்து நிண்ண
யம் பழுதாகவே தப்பிதமதாக நாயன்றனைத் தள்ளிக்கபுறி
னைத் தேடிக்கொண்டார் 11

கட்டைப்பக்கீறுக்குச் சிலநாள் கழுத்தே சயறுபட்டகிடாய்
கண்மெத்த, முட்டையிடுங்கோழி சாவல்களும் முழுதுங் காய்
கறிபாலபழமுங் கடடுப்பாடாக உறட்டி சோறு கலியாவிருந்
துடன்பாற்சோறுகள் தட்டுப்படாமலே வரநாடொறுந் தண்
மைக் கூட்டத்தாற் றிருநாளாச்சே. 12

இந்த மாயத்தையறியாமலே யிஸ்லாத்தினிலுளர் சில
பேர்கடான், வந்துமகிழ்ச்சியாய்மதிமயங்கி மார்க்கந்தவறியே
போகுதென்று, முந்தயடக்கிய மூமினவர்முழுதும் கபுறினை
வெளியாக்கியே, யந்தமாகிய நீனோர்களை யதபுவருத்தியே
தவுபாக்கொண்டார். 13

அடக்கம் வைத்தவர் கபுறடியி லனேகக்கூட்டத்தைப்
பார்த்துச் சொல்வார், நடக்கைபத்தாதுபள்ளிக்கட்டி நல்லகந்
தூரிகொடுக்கவேணு மொடுக்கமானவர் சிலரைக்கண்டே யுங்
கள்கல்புகள் தெளியவேணும், படுக்கைதனை விட்டிங்கெடுத்
தவரைப்பார்த்து மருவிடமடக்கு மென்றார், 14

அப்போதவரைத் தானடக்கினப்போ லழியாச்சுரூபமா
யிருக்கக்கண்டாற், செப்ப முளவொலியி வரெனவே தேசமறி
யவேநடக்கு மென்று, மொப்பியெல்லோருந்தான் கூடியே
யொளிப்பாயிருந்ததை வெளியாக்கியே, தப்புதல்வில்தாரை
கூட்டத்துடன் றூங்கியெடுத்துத் தான்வெளியிற்போட்டார்.15

கட்டைப்பக்கீறவர் காரணத்தைக் கண்டபேரெல்லாந்
தலைகவிழ்ந்தார், வெட்டுங்கோடாரிச் சத்தமெல்லாம் வெண்கலம்
போலே வீறிடுமே, முட்டுப்பட்டார்கள் ஷரஜவிட்டு மூதேவிக்
கோலமெடுத்தபேர்கள், தட்டுப்படாமலே யாலிமிடந் தவுபாச்
செய்து நேர்வழியின் மீண்டார், 16

நல்ல பாம்புகளாடுகென்று நாங்குளுப்பாம்பைநாடி
நீங்கள், வெல்லுமொலி கடங்கபுறுபோலே வேறே கபுரெல்
லாஞ் செல்கிறீர்கள், கல்லின் பிறப்பொன்றுகிடினு மெல்லாக்
கல்லுமாணிக்கக் கல்லாகுமோ சொல்லுமொலிமார்கள் கபுறு
கினுந்தோகைமார் போதல் ஹறாமாகுமே. 17

மையித்தைக் கண்டாற் பதுங்காமலே மனுடரில்லாம
லெளிமையானாற், பையத்தான் கூடிநின்று கொண்டு பணங்
காசுவிட்டும்வருத்தப் பட்டுந், துய்யகுழிவெட்டிக் குளுப்பாட்
டியே துய்யகபனிட்டுத்தொழு தடக்கவையந்தனிலுள்ள
மனிடர்பேரில் வரிசைக்கடனான் பறுலாகுமே. 18

எளியமையித்துக் குதவாமலேயேற்றுமையித்துக்குதவும்
போர்கள், கழிவாய்த் திரிவார்கள் கியாமத்திலே கத்தன்றனக்
கேறுக்குற்றத்தினா, லொளியார் முஹம்மது நபிக்கவர்களோ
ரஞ்செய்தவாதாரமென நெளிவாஞ்சிறுத்தெனும்பாலந்
தனில் நேரேகடக்காமல் நரகில் வீழ்வார். 19

மையித்துகள் மேலே நடப்பதுகான் வயிறுநிறையவே
கெற்பனையார், தையல் வயிற்றின் மேனடப்பதினிஞ் சாற்ற
வரிதான பாவமென்றும், பையப்பையவே நடந்தாலுமாம்
பாரச்செம்பூசி தலையினிலே, நையப்பலமாக அடிப்பதாரு
நாயன்றனக கேறுவருத்தமாமே. 20

கட்டைப் பக்கீர் படலம் முற்றிற்று.

ஆக படலம் 22-க்குத் திருவிருத்தம் 358.

## முரீதுப் படலம்

ஒலிமாருலமாக்களிடங்களிலே யுவ்ப்பாய்றிவுகள் படிக்க
வென்று மெலிவாய்ப் பயந்தஞ்சித் திரைகள்கட்டி பீவி
மார்கள்தாஞ்செல்வதாகுஞ் சலியாமனதுகள் சந்தோஷ
மாய்த் தனித்துமுடுகியே செல்லுகிற தலியார்மாயனார் ஹதீ
தின்படி யகீதமாகியசெயலாகுமே. 1

தைக்காதனைநாடி வெட்காமலே தையலர்பைய நடந்து
சென்று, பக்கீர்முகம்பார்த்துப் பேசினாலும் பகர்ஹறாமென்
றுமறிவாளர்கள், திக்கீர்சொன்னாலும் பிக்கீறெல்லாஞ்
சேர்ந்துகொளுமென்றுந் தெரிவையரே, மிக்காய்விளங்கி நீர்
கணவனுக்கிங்கிணங்கியிறை தனைவணங்குமென்றார். 2

மிச்சமாகவே மகருவைத்துமேலோன்விதிப்படிநிக்கா
கெழுதி, வைச்சபுருஷனைக் குருவுமாக வரிசையறிவாளர்
பீருமாக, அச்சமாக வேயதபுகெட்டே அல்லாதனைநித்தம்
வணங்காமல் நீர் பிச்சைவாங்கிற பக்கீர்களைப் பிடித்துநடப்
பது மடிப்பாகுமே. 3

கண்கள்காணாத காட்சிதனைக் கண்டபேர் சென்று கவலு
மாப்போற், பெண்கள் கிடையாமற் பெருமூச்சிட்டுப் பிச்சை
வாங்கியே தின்னும் பேர்க்கே, யுண்கவஹீ பனந்தனையவந்தே
யுடல்கள் பெருக்கவேகொடுக்குமந்தப் பெண்கள்தனையவரு
வந்துபார்த்துப் பெருமூச்சிட்டுத்தானமல்கள் செய்வார். 4

ஷறஹின்படி நடவாச்செய்கிடந்கையல்கை நீட்டியறிவு
கேட்டால், விறகும்நெருப்புப் போற்பிடித்தவளைவேண்டுங்
கருமங்களவர் செய்குவார், பறவைபடுங் கண்ணிவைத்த
வேடன் பாய்ந்தேயமுக்கும்போல கப்படுவாள், முறைமைதப்
பிப்போமாதலினால்மொழியும்பெண்களை யடக்கியாள்வீர். 5

தனித்துப்பெண்கள் தான் கிட்டவந்தால் ஷறஹுதவறி
யவைஷகுமார்கள், நினைத்தநினைவுகள் தவறியந்த நேசிகோலத்
தைப் பார்த்துப்பார்த்திங் குனித்தப்பா தெனவள்தனையே
யெட்டிப் பிடித்துத்தான் கட்டிக்கொள்வார், கனத்தகோழி
யைச் சேவலது கண்டமுறைமைபோலிணக்கமாவார். 6

மஹரிபத்தான மாணிக்கத்தை வண்டரறியாதமட
மாதர்க்குப்பகரமாகவே யறிவித்தப்பின் பழக்கிக் குணக்
கேடால் மயக்கமாக்கி, யகத்திலிருவரும் ஒன்றிலாவா ரழகாம்
நிலைபெற்ற வாண்பெண்களே, வகையின் ஷறஹுள்ளவை
கைத்தேடி வடிவாய்ப்போய் முரீதாகுமென்றார். 7

மந்திரவாளா மஹரிபத்தை வகையாயறிந்த பேரெடுக்க
வேணுந் தந்திரமில்லாப் பேரெடுத்தாற் றவறிக்காயங்கள்

பட்டுச்சாவார், அந்தரமான வறிவதுகானமுகாமொலிகளுக் காகுமல்லா, லிந்தக்காலத்தின்மூட்ப்பெண்களெல்லார்க்குஞ் சொல்லலாகாதென்றார். 8

ஆணிமுத்தான மாணிக்கத்தை யறிந்தபேரிட மடக் காமலே, தோணிதனிலேறிமீன் பிடிக்குந் தொல்லே நளை யர்க்குக் கல்லேயிந்தாற், பேணியொளிக்கவுந் தெரியாமலே பெரியகடைதனில் விலேகூறுவார், காணிக்கையான மாணிக் கத்தைக் களவாண்டெடுத்தாரென்றடிபடுவார். 9

தொட்டபேர்களுங் கெட்டுப்போவார்தொடமலடுத்தோ ருங் கெட்டுபோவார், திட்டமறிந்தபேர் லட்சத்திலே தெரிந்த வொருவர் தான்காட்சிகாண்பார், வெட்டியிபுலீஸை வெல்லு கின்றமெய்ம்மைமுஹிபித்தீன் வழிதனேயே, மட்டில்லாப் பேருமிக்காவுக்காகவருந்தித்தேடியே அமல்செய்வீரே. 10

ஆதியிறக்கின வேதந்தனேயறிந்தமுஹம்மதாமவர்க்குப் பின்னரோதித்தெளிந்திடுநல் ஆலிமா புண்மைஸாலிகாயிருந் தாலுமாம், பேதைமடவார்கள் தனிச்சொல்லாமற் பெலமாய்ப் பலருடன் கூடிச்சென்று, காதுநலே முகம்கால்கையுடற் காட் டாமற்பேணிப் போய்வருவீர். 11

கடிய குபிறெது பாவமெது கத்தன் விலக்கேவளெஃ தனவும், நெடிய பறுவுகளெஃதெனவு நீண்ட நபிசுன்னத் தெஃதெனவும், அடியார் செய்கைகளெஃதெனவு மாகுமக் றூகு பலவகையும், வடிவுக்குருவிடங் கேட்டறிந்து வணங் கினல் நல்ல முரீதாகுமே. 12

முரீதுப்படலம் முற்றிற்று.

ஆ படலம் 23-க்குத்திருவிருத்தம், 370.

---

## அடுமையாளும் படலம்.

அடுமைதனேக் கொண்டு கொடுமை செய்வோராகிரத் திலுந்தனியாவிலு, மிடமைமிகப்பட்டு துஸ்க்கிஞகை மீள்வா ரென்றேயறிந்து நீங்கள், கொடுமைதனேச் செய்யாதடு மைகளேக் குணமாய் மார்க்கத்தில் வருத்திவைத்து, நடுமை யாகவே யாள்வீரெனில்நாளேச் சுவர்க்கத்தில் வாழ்வீர்களே.

கொண்டபயலுக்கும் வெள்ளாட்டிக்குங் குணமாய்க் கலி யாணமுடிக்காததாற், கண்டவிடத்தவர் ஸிஞச்செய்குவார் கனத்தபாவங்களவர்க்குப் பங்காம், வண்டத்தனமான வடு மைகளே வாலிபமதாக வைத்திருந்து, கொண்ட புருஷரும் பூவைமாருங் கூடிவாழ்வது குணமல்லவே. 2

சிறு வெள்ளாட்டியைச் சிறப்பாய்வளர்த்திடிலோ கணவனுக்கு வப்பாமென்று, கறிசோறுகளையே மிகக் குறைத்துக் கருவாடுகள்போலே கருக்கும்பெண்கள், பிறிய முகவுள்ள சுவர்க்கத்திலே பெருமைத்தனம்விட்டு வெளிமையாகிச், சிறியவெள்ளாட்டிகைக்கீழாகத் திரிவாரெனச் சொன்னா ரறிவாளரே. 3

ஊணுந்தீன் குடிப்புகணமைப்போ லுதவியுடை நடைபட்டாய்ச்செய்து, வேணும் வேலை செய்விப்பதல்லாமல் மெத்த வேலைகொள்ளுவது குற்றம், காணற்கரியவன் வணக்கத்துக்குக் கணக்காய் விடைகொடுத்தனுப்பவேண்டும், பேணுமனுடரே யடிமைகளைப்பெற்ற பிள்ளைபோல் வளர்ப்பீர்களே. 4

பெற்றதள்ளைபோற் பயல்கடமைப் பெண்களாள வேண்டுமென்றாலும், நித்தமவனுக்கு நாணவேண்டு நீதிவேலைகள் கொள்ளவேண்டுங், குற்றம் வருத்திடும் பயலுடனே கூசாமற் பேசி யிருக்கொணாது, முற்றுமவர்தனை நம்பாமலேமுகத்தில் விழியாமலகற்றுமென்றார். 5

ஆதநபியுல்லா முதலாமற்றுமண் பியாக்கள் பேரிமாங்களின்பேர், வேதநபிவாயாற் சொர்க்கநகர் மேவு மாராயம் பெற்றவர்பேர், போதமணமுள்ள நபிக்குவந்த பூராயவைசுல்கறனியார்பேர், காதமணம் வீசும் நபிபேரனார் கௌது முஹியித்தீன் மீரானின்பேர். 6

பேதகமதில்லா வொலிமார்கள்பேர் பேணும்பெரியோர்கள் நல்லோர்கள்பேர், ஓதும் புவியுள்ள முஸ்லிமான வுவந்தவாண்பெண் கடங்கலின்பேர், மாதம் பத்திலே பெற்றெடுத்த வரிசைத்தாய்தந்தை பேரிவைகற், ஆதநபிமக்கள் முஸ்லிமானோ ரடிமைகளுக்குத் தான் விட வொண்ணாதே. 7

நம்பிராட்டிமாரவர்கள் பேரும் நல்லநாச்சியா ரவர்கள் பேரும் வம்புக் குணமாக வேவெள்ளாட்டி மார்க்குவிட்டழைகின்றபேர்கள், சிம்புறூத்தெனும் பாலந்தனிற் செல்லப் பயந்துதான் கலங்குவாரென், நம்புவிதனிலறிவாளர்க ளதிஜயமதாக வெடுத்துரைத்தார். 8

நாயனபிமார்கள் பேரினையும் நல்லவுலமாக்கள் பேரினையும், ஆயுமறிவாளர் பேரினையு மடிமைதனக்குத்தான் விட்டழைக்கோர், ஞாயந்தெரியாமற் றலையிற்போட்ட நல்ல முடிதனைக் கழற்றியவர், தேயும் காலிலே போட்டுக் கொண்டு தெருகள் சுற்றிய தோஷியாவார். 9

மாதமதின் பேரைச் சொல்லலாகு மாணிக்கத்தின்பேர் சொல்லலகு, மோதுமணமாம் கஸ்தூரியம்பருலகவூர்ப்பெயர் சொல்லலாகும், ஆதநபிமக்கள் பெரியோர்கள்பேரானமலக்

குஜின் ஷைத்தானின்பேர், போதத்தனமாக வடுமைக்குத் தான்போற்றிச் சொல்வது விலக்காமென்றார். 10

இஸ்லாஞ் சிறைகளை யடுமை ஆண்டோ ரிம்மைதனிற் செய்த நன்மையெல்லாம், வசுவாசில்லாமற் பழுதாமென்று வரிசையறிவாள ரெடுத்துரைத்தார், பசியாற் பஞ்சத்தால் வந்து சேர்ந்தாற்படைத்தோன் றனக்காகப் பணக்கொடுத்தோர், கசியும் நரகத்திற்புகுதாமலே கனகபதி சொர்க்கம் புகுவார்களே. 11

அருமையாகவே நமைப்படைத்தே யாளும் பெரியவனிரணந்தந்து, பெருமையாகவே யுடைநடையும் பெலமு நலமுள்ள பிழைப்புந்தந்து, கருமமாகவே நன்மைதந்து கனத்த குற்றங்கள் பொறுப்பதினா, லுரிமையாக்கினோரடுமைகளை யூழிகாலமு வாழுவாரே. 12

அடுமையாளும் படலம் முற்றிற்று.

ஆ படலம்-24-க்குத் திருவிருத்தம்-382.

---

# மாடாடாளும் படலம்

எருமைமாடுகள் பசுமாடுகளொருகமாடுகள் குதிரையிவை பெருமையாகவைத்துத்தொழிலும் பிழைப்புந்தழைப்புமாயிருக்குமவரருமையாயவை பசியறிந்தே யருந்தீவனமளித்தே வளர்க்கி, லுரிமை யாளராய்ச் சுவர்க்கபதி ஊழிகாலமும் வாழுவாரே. 1

மிருகஜாதிக்குத் தீன்கொடாமல் வேகும் பசிக்குத்தான் புசித்தவரைக், கருமம் வெளியாகுமாகிரத்திற் கழறுமவைகளை யெழுப்பிவிட்டுப், பெருமைகெட மிதித்துதைக்கச் சொல்விப் பெரியோனேவுவானா தவினால், விருதாவாயினுந் தீனி போட்டு மிகுந்த பறக்கத்தைப்பெறுவீர்களே. 2

பெற்றகன்றுக்குப்பால் விடாமற்பெருத மாடாடுகறப்பவர்க, ளுற்றகியாமத்து நாளினிலே யோங்கும் பெரிதானதாகமாகிக், கத்திக்கதறியே யோடியோடிக் கன்றுபோல நின்றழுவாரதா, லுற்றவறிவுள்ள நல்லோர்களே உவந்து பிள்ளைபோல் வளர்ப்பீர்களே. 3

சுமக்குமிருகத்தின் முதுகின்மேலே சுமக்காப்பாரங்களேற்றவேண்டாம், உமக்கிங்காதாயம் வேண்டுமென்றே யுற்றப்பாரங்களேற்றிடில்நீர், கமுக்கமாகவே போகாமலே கடிந்த

கியாமத்துநாள்தனிலே, சுமக்கு மிருகம்போல் நூறுபங்கு
சுமந்துதிரிவீரீதறிவு மென்றார். 4

மாடாடாளும் படலம் முற்றிற்று.

ஆ படலம்–25–க்குத் திருவிருத்தம்–386.

---

## பெண் புருஷர் நடக்குங் கருமப் படலம்

நன்றியுளபெண்ணை விவாகித்துப்பின் னபக்காக் கொ
டுக்காமல் விட்டுப்போட்டுக், கன்றுகனைத்தொடாக் காளிகள்
போற் கைச்சவடஞ்செய்துச் சேவிக்கப்போய், நின்றுநெடு
நாளாய் வராதிருந்தால் நெருப்பாயிருக்குமேயவடனக்குத்,
துன்றுபழிகார னிவனெனவேசொன்னார் மிகநல்ல வறிவாளரே.

அம்மாவயிற்றினிற் பிள்ளையாக அன்பார்புருஷன்
றனில்லாமல் நீர், சும்மாவந்தீரோ புத்திகெட்ட தோஷகுண
பாஸிக்காலோனோர்களே, ஹம்மாலுனுலுங் கூலிசெய்து ஹலால்
பெண்சாதியைக் காப்பாற்றுவான், தம்பாலானமட்டும்
நடத்ாதவர் தவறிப் பாலத்திற்கீழ் விழுவார். 2

நன்றாய்ப் பெண்ணைப்பேணார்தொழுகைநோன்பு நல்ல
ஸக்காத்து ஹஜ்ஜிவைக, ளொன்றுஞ் சபூலாகாதென்றுமினு
முடையோன்முனி விலைவன் றனக்குப். பொன்றுங்கிரங்கி
யுஞ் சூலைமூலம் பொல்லாபலா யொடுபெருநோவது மென்
றும்வரபதுவாக்கள் செய்வாளிம்மைதனிலந்த மடவாளுமே. 3

பெண்ணைக்கொள்வதுசுன்னத்தாகும் பேணிநடத்துதல்
பறுலதாகுங். கண்ணிலுவப்பமான பெண்டனக்குக் கனத்த
*நபக்காவுங்கிசுவத்துவு, மெண்ணுங்கணவன்றான் வகைய
தறிந் திசைந்தசெலவெல்லாங் கொடுக்கவேணுந், திண்ணமா
கவே மறுபேர்களைச்செலவுகொடுக்கவே சாட்டொணாதே. 4

பெற்றதாய் தங்கையுடற்பிறப்பு பிறந்த குழந்தைகளுஸ்தா
திலு, மெத்தவுவப்பாகும்பெண்சாதிதான் மோலோன்றனக்
கவள்ஸாலிகானாற், கத்தன்விதிப்படி நிக்காஹு செய்த கண
வன்றனைப்பேணியுவந்திருப்பாள், சுத்தமில்லாத பாவைமார்
கள் துணையாங்கணவனைப்பேணார்களே. 5

புருஷனெளிமையாய்ப்போனபின் புரூவைதனைமோகங்
கொண்டழைத்தால், வரிசை குறையாகவே பேசிப்பேசி வண்
டத்தனமாகத் தொண்டைகாட்டும், பரிசு மிகக்கெட்ட பெண்
கள்நாளைப்படைத்தோன் முனிவுக்குப் பாத்திரமாய்ப், பிரிச
முளநாயன்றஹ்மத்தை நாம் பெற்றோமிலைக்கெட்டோ
மெனவழுவார். 6

---

* நபக்கா, கிசுவத்து என்பது :—சோறும், பிடவையும் என்று கொள்க,

கணவனார் தனிலிருக்கையிலே ஹலாலாம் பெண்கள் தான்
றுப்புரவாய், மணமாம்பிடவைகள் பலவகையால் வடிவமிகக்
காட்டிவெளிமையாலுங், குணமதுடன் சென்றுமணமதாகக்
கூடியணையாமல் மறுத்தவனே, நிணமதுருகுமங்நரகத்திலே
நெருப்பாஞ் செருப்பாலே யடிப்பார்களே. 7

வன்னச்சேலைகள் பட்டுச்சோலை வகைமுக்காடிடத்துப்
பட்டிகள், சொன்னமணிமாலைபொன் வெள்ளியாற் சொகு
சாருடமைகள் பலவுமீந்த, மன்னன் ஸபர்போனாற்பெண்
சாதியவ் வகைகள் நகைகளைமறைத்துவைத்துப், பின்னர
வன் வந்தாற் கோலஞ்செய்வோர் பெரியோன் சுவர்க்கத்திற்
புகுதுவாரே. 8

புருஷன் பயணமாய்ப்போனபின்புபூணாரம் பலவுடுப்பு
களும், பிரியமாகவேயெடுத்துடுத்துப் புறப்பட்டுப்பலதலங்கள்
சென்றால், வரிசைகுறையவேசை யென்றும் வல்லோன்
ஷனைத்து முனிவுண்டென்றுமருஷிலேறியநபியும் மத்தி
லறிவுளார்சிலரெடுத்தோதினர். 9

பூட்டுமுடமைகளுடுபிடவை புறத்தியாருக்குக் கொடுக்கொ
ணாது, காட்டான் சொற்படி நிக்காஹுஞ்செய்யந் தையல்
தனக்குத் தானீயலாகும், காட்டித்திரியும் பெண்களுக்கீந்
திடிற்கத்தன் றனக்கது குற்றமாகுங்கூட்டிக்கொறித் தவரி
வரெனவேதறியா யறிவாள ரெடுத்துரைத்தார். 10

கணவனுடைமையிலேதாகிலுங் களவாயெடுத்தெட்டேபா
தெவர்கட்கேனும், நிணமாங்கொழுப்பினல்மதப்பினலு நீவி
துணிந்துதான் கொடுத்தாளெனிற், பிணமாய் நாற்றமாய்
நரகத்திலே பின்முன் றுவாரத்தில் நெருப்புச்சென்று, தண
லாயெரிக்குமப்போதிலேயோ தாங்கேன் வருத்தமென்றே
யழுவாள். 11

ஆகாநாற்றமாய் நரகலோடு மைபாந்தலத்தினற் புருஷ
னுக்கு, வாகாய்வஞ்சகஞ்செய்தவட்கு மறுமைநாளதில் மனும
தாபி, லேகால்காதீயீவானென வு மிந்தையழுத்தவர் சொன்
னாரென, மேகாதியினீர்போல்ஹதீது சொல்லும் வீரமுளஹம்
மாதுரைத்தனரே. 12

எந்தப் பெண்களும் புருஷன்மாரை யினிதாயாதரித் தடி
பணிந்தா, லந்தமுளவாதிக்கறுப தாண்டிங் கழகாய்வழிபட்
டோர்போலாமென்று, முந்தமயில்வேஷமாய் மரத்தின் முத
லோன் றனைத்துதித்தேயிருந்த, பந்தம்பயந்திடும் வதனமுள்ள
பயஹாம்பராலநபியோதினர். 13

வல்லவொரு பெண்கொண்டாலவட்கு வாகாய்மஹரீந்து
படியளந்து, நல்லபடியகந்தன்னில் வைத்துநட்பாய்த் தொ

முச்சொல்விநன்மைதனி, லல்லும் பகலுமாய் வருத்திவைத்
தேயதபாயொழுக்கமாய்ப் பொருமையுடன், கல்லையணுகா
மல் நடத்திக்கொள்ளக் கடனாமவள் கணவர்க்குத்தானே. 14

மஹருகுறைய வைத்தெழுதுவது மாதையவன் வீட்டில்
வைப்பதுவு, மிருதிமிஸ்கீன்களினத்திற்பெண்ணை விரும்பி
யெடுப்பதும்புத்தியாகும், பகைக்குணமன்றி மனைவியுடன்
பாங்காய் நடந்துகொள்வீரின்னுமே, அகம்விட்டவள்
வெளிப்புறப்படாமலதபுவருத்த நும்மேறகடனே. 15

தகப்பன்றன்னையுடற்பிறந்தோர் சங்கையுளமாமன்
றன்னையன்றி யுகப்பாமருமானோன்றிமற்றொருவர் தனை
யுநீரிலாதநேரமகத்திலழைக்க வேண்டாமெனவேயருள் வீர
வளோடுமதபாகவே, பகைப்பாய்ச்சினந்துகொள்வீர் நுங்
கட்குப் பாங்கில்லாதவர் வருகிலென்றார். 16

உனதுபயவினையுடற்பிறப்பை யுவப்பாய்மனையினிற்
செலவொட்டாதே, மனைவிசிறு பிதாபெரியபிதாமக்கடமை
யும்வீட்டினில்விடாதே. கனதிசனுகாத கிழவியாரைக் கருவாம
கத்திற்காவல்வையாதே, சினமாய்ஸினைச் செயலணுகாமலே
தேவிதனைப்பேணக் கடனாகுமே. 17

வேஷகபூஆமிர்ஸ—புருணிதாம் செப்பினா ரொருமஸ்வி
ஹத்தை, யேகன்றொழுகையைக்கலாச்செய்வதுமிலான் மண
வாளன் சுகமிறப்பும்புவாகு பெறத்தொந்திப்பானலவள் மண
வாளன்ஹக்கை முதலிறுத்துச். சாகான்றொழுகையின் விருப்
பாளெனிற் சங்கையுடனேவாழ்ந்திருப்பாளென்றே. 18

சுன்னத்துநோன்பாகிலுமல்லது தடக்குதனில்விட்ட
நோன்பாகிலு, மன்னன்சபறன்றி யிருக்கையிலும் வரிசைக்
கலாநோன்புதனக்குகால, மின்னத்துடலுண்டாயிருக்கை
யிலு மேவாவதள் நோன்புவைக்கஹறாஞ், சொன்னபடி
மணவாளனுடன்றொகைமார்பேணிநடப்பீர்களே. 19

நாலுதிரியுடன் அல்படியாள் நலமாயிருக்கையில் நாட்ட
மாகக்கோலமழகான காரியத்தைக் கொண்டுசுக்கூர்செய்
வோர் தனைப்பழிப்போ, ராலந்தனிற் காபிராவாரென
வச்சப்படப்படுமென்றே யிமாம்சில வழகானதகாபியென்
போர் செப்பினார்தபு ஸீர்தனிலே. 20

அன்னம்படியளக்குங்கணவ னன்பா யமதுரிகொள்
வற்குப், பன்னுமனம் குஷியாயிருக்கும் பாங்கிதனக்குச்
சொர்க்கமெனவே, மன்னர்நபி ஹதீதறிந்தோர் சொன்னார்
மனது கேடாகமுனிந்திருக்கு மின்னுடனக்கெரியாகுமென
வேதவுலமாக்கள் விளம்பினரே. 21

மதுநாவகுலாதவறு பாவுங்கள் மனதுகுஷியான மங்கை யரைக்கொதியாய்நிக்காஹூ செய்திருங்களெனக் கோணல் விடவன்றித் தூண்களன்றி, மதிசேர்க் கனமைத்தோன் குரனில் வங்கந்தனிலேற்றியலியுல்லாவை, யதிகசமர்செய்து முகாத்திலினை யறுத்துவரச்சொன்னோர்க் குரைத்தனனே.

அற்பதுனியாவின் வாழ்வுக்காக ஆனாய்ப்பிறக்கோனை யலைமலையில், வெப்பமாயேற வருத்தவேண்டாம் விருப்பும் சபூர் செய்து கிடைத்தது கொண், டொப்பஞ்செய்து கொண்டி ருங்காளில்லிலுடையோன்கலாவுக்குப் பொறுத்திருங்காள், தப்பாதவன் றரும்றிசுக்கெனவே சந்தோஷமதாக நடந்திருங்காள். 23

நன்பூர்பாக்கிலை யில்லையென்றுஞ் சங்கையுளவாடை யில்லையென்று, மன் பாருணத்தா வில்லையென்று மங்கந் தனக்கெண்ணெய்யில்லை யென்று, மின்பாஞ்சுகங் கொள்ள வில்லையென்று மிரவில்ஸிருஜொளி யில்லையென்றும், வன் பாய்வருத்தஞ் செய்மாதருக்கு வரிசைஅமல்கபூலச்செயப் படாதே. 24

கணவன் றனக்குக்கை கருமஞ்செய்காற் கத்தா வணக் கத்துக்கொப்பாமென்று, மணமாய்க் கறிசோறுசமைத்தவர் பால்வைத்தால் ஸீனத்து மிகவுண்டென்றுங் குணமாய்ச்சுஹ்ற பத்துச்செய்துதோய்ந்தாற் குறியாயொருதுள்ளிக் கோர் நன்மைகள், நிணமாய்க்கிடைக்குமென்றுங்கித்தாபில் நிலைசேருலமாக்கணி கழ்த்தினரே. 25

பற்றும்படிகர வில்லையென்றும் பாங்காய்மறு திரிசுர்ரியத்து, வெறியாய்க் கொண்டானெனவுமிகும் வினைய மேற்றுவோர் தங்களுக்குச், சத்தியுளவிறை லஃனத்துடன் ஸாலிஹானோர்கள்முனிவு முண்டாம், புத்தியுடனன்றாய் நடந்துமண்ணிற் புகுவீர்புவிதனின் மடைந்தையரே. 26

தலையிலெழுத்தேகாவென் விதியோவென்று சடைவாய்ப் புருஷனையுதாசனித்தே, யலைவாய் பொருது கொண்டிருக்கிறவ ளரசன்மனமிகச்சலிக்குமதால், மலைபோலலஃனத்துப் பெரு மதாபு மண்ணறைகபுறிலும் நரகத்திலும், குலைவாய்ப்பிடிக்கு மென்றுரைத்தார் நல்லோர்குணமாய்ப்புருஷரோடிருப்பீர் களே. 27

வல்லவொருவன் கீழிநவல்விமார் வாகாயிருந்தக்காலவ நீதமாய், நல்லபடி நடந்தாளில்லையேல் நாளைகியாமத்திலொரு தோட்சாய, அல்லல்மிகப்பட்டு வருவானென அஹ்மதி

றஸூலில் சொன்னாரெனவே, அல்லும் பகலுமாய் விழித்துத் தொழுமாலிம் நசுவியென்போ ருரைத்தார். 28

எக்காலமுங் கலியாணப்பெண்போ லிருக்கக் கடவதா மேந்திழைக்குச் சிக்காய்த்தலைமுடியிருப்பதுவுஞ் செருமியுட னூற்றை தேய்க்காமலும், பற்கொம்பிட்டிடா திருப்பதுவும் பங்கமுளகோலமாகக் கொண்டு, துக்கமணுகியே யிருப்ப தெல்லாம் துசுமனிபுலீஸா குணமாகுமே. 29

மருதோன்றியிடா மங்கையர்க்கு மையஞ்சனமிடா மட வாருக்கும், புருஷன் றனக்கலங்காரங்காட்டாப் பூவைமார்க் கெல்லாம்லஃனத்தெனப், பருகியுதித்தபின் பதியச்சொல்லிப் பாங்காய்ப் பஜிர்த்தவம் செய்தின்னமும், பரிவாய் மஹரிபி லமைந்துபோன பதங்கன் றனை மீட்டுநபியோதினார். 30

ஒருவாதமைக் கொண்டங்கொருவர் ஸாஜுதுவைப்பா யிடலாமென்றுலிவடன், ஒருமைப் புருஷனுக் கடிபணிந்தே யழகாய் ஸாஜாதிடலாமெனவே, அறியோன் றனைமுகக் கண்ணாற்கண்டும் அறுஷாதனைவிட்டம் பாங்களவிட்டும், பிரியம்புவி மீதிற்றுலங்கவந்த பெருமான் முஹம்மது நபியோதினார். 31

ஊனுஞ்சீழுமா யொலித்தோடினு லுச்சிதொடுத்துள்ளங் காலளவுந், தானதுடனேசென்று நாவுகொண்டு சங்கையுட னக்கித் துடைத்தாளெனி, லானபடியவள் புருஷனுக்கே யழகான ஹக்கைத்தானிறுக்கச். சினத்துடனில்லை யென வரைந்தார் செருப்போடறுஷேறி வசனித்தோரே. 32

கண்ணாற்றெறிசித்தஹறாம்புருஷர் காணலலங்காரமாய் நிற்போரும, உண்ணாதுறங்காதான் வணக்கமன்றி யூண்தீன் கனிற்பாபக்கான பெண்ணா, மொண்ணா வருத்தமாங் காரி யத்தை யுவந்து புருஷன்மேற் பூட்டுவோருங், கண்ணாங் கணவனை நோவித்தோருங் கடிந்நரகத்திற் சேருவாரே. 33

காமக்கொடூரத்தா லிசுக்காவே கணவன் றனைச்சுகங் கொள்ள வழைத்தாற், றாமதஞ்சொல்லி மறுத்தாளெனிற் சங்கையுடனவள் செய்தநன்மை, நாமமழிந்துபோங் கணவன் றானும் நாடிச்சினச் செய்தகூலிபோலே, சூமியிவளுக்கே யுண்டாமெனச் சொன்னார் மாயானோர் முன்னாகவே. 34

ஆலமாதத்தைக்கப் புறம்பரிலணங்குசனைவிட்டே யகன்றிடாதே, வீணும் விழுத்தனில் வீழ்ந்திடாதே விரும்பிச் சபர்தனிற் பெண்கொள்ளாதே, பூருபடமங்கை தனையெடி யென்றானவுரை பேசாதவப்பாகவே, தேறும்படி நன்றாய் நடந்துவாழ்ந்து திண்ணமுடனிருப்பாய் பூமியில். 35

பொன்னுர் பதிசொர்க்கந் துறபிடியாம் பூவைமார்பத்து வகையுண்டுகேள் மன்னுனிபாதத்தும் பேணிக்காத்து மன்னன்கிதுமத்தினிற்பவளு மின்னுர் தனிலய லாருடனே மேவிவிருப்பமா யிருப்பவளு, மன்ன மளித்திடுங் கணவன் சொல்லை யன்பாய்க்கேட்டுத் தானடப்பவளும். 36

புருஷன் றனக்காகப் பிறர்க்கல்லாமற் பூணாரம்பூண்டு தலைக்குச் சீம்பும், பரிவா யலங்காரமாகவிட்டுப் பாங்காய் முடித்து நன்மணங்கள்பூசி, மருவுதோன்றியுங் கரத்திலிட்டு வாய்தேய்த்து மன்னன் ஹாஜத்துக்குச், சரியாமடந்தையே மடந்தையெனச் சங்கையுலமாக்கள் சாற்றினரே. 37

அஞ்சாம்வகை சொல்வேன் புருஷனுக்கிங்காகா வஞ்சக மில்லாளுமாய், நெஞ்சமகிழ்ந்திடின்னுமவன் றனக்கு நெறியாய்க்கலியாண முடிப்பாளுமாய்க், கொஞ்சுமவனூரில் வீடுதனிற் குறிப்பாய் தரித்திடில் விருப்புளாளாய்க், குஞ்சு குழந்தைகள் தங்களுக்காய்க குணமாய்கிக்காஹன்றி யிருப்பாளுமாய். 38

கணவன் ஸபர்செய்தபோதவடன் கடியவுடலபங்காப்பாளுமாய், மணமாமுறையன்றிப் பிரட்டுரட்டு வாயா வுரைத்திடாமங்கையுமாய்க், குணமாமிப்பத்துமுள்ளாளெனிற் கோமான்றிருவருட்பதிபுகுவாள், பிணமாம் நரகத்தின் பெண்ணின் வகைபேசி யுரைத்திடக் கேட்பீர்களே. 39

வரிசைக் கணவனைமுனிந்த பெண்ணு மனைவிட்டேகிடு மங்கையருந், தெருவில் வாசலில்நின்றே யெட்டித் திரியுமாந்தரைத் தெரிசிப்போரும், சரியும்படுக்கைக்கென் றழைத்தபோது சாக்கிட்டுத் தற்ளுமடவார்களு, மூரியானுடனின் றுளிக்கும்பெண்ணு மூழிக்கு முதற்குளியாதபெண்ணும் 40

மானிபங்காக்கா மடந்தையரு மணவாளன் றனைத்தூற்றும்பெண்ணும், கோனிபாதத்தில்லாதபெண்ணுங்கொண்ட புருஷனைக்குலைக்கும் பெண்ணும். மீனப்புட்டு பொய்யியம்பும் பெண்ணு மிரப்பார்தமக்கியா வேந்திழையு. மூனப்பலிசையையுண்ணும் பெண்ணு முன்னிச்சினுச்செய்யும் பெண்களுமே. 41

கூட்டிக் கொடுக்கின்ற மடவாளுக்குங் கொண்டான் வினைச்செய்யப் பொருந்தினட்கும், பாட்டுக்களியுரா யூஞ்சலாடும் பாவைமாருக்கும் பதத்திற்கொம்பு, நாட்டிச்செலுத்தவோர் தங்களுக்கும் நல்லகணவனைவெறுத்தவட்குங், கோட்டி மிகவுண்டாங் குழியிலெனக்குறித்தவுலமாக்கள் கூறினரே 42

முகத்திலடிக்கவேண்டாமெனவு மொழியவேண்டா மூதாசனமெனவும், அகமன்றியவடனை வெறுக்கவாகாதெனவுன்ன நபி சொன்னதாய்த் தருதியுள இமாந்தாவூது நற் சங்கையிபுனுக்குபானுமிகு, மகத்தவமுடனுரைத்தாரெனவே வரிசையிபுன் ஹஜர்வகுத்தனரே. 43

கொண்டானிருக்கையிற் குலத்தான்றனைக் கொள்கையுடனேக்குங்கொடியாளான, முண்டைதனைத் தழற்சலாகை கொண்டு முன்னோன் சுடவேவுவானும்பரைக், கண்ட புருஷனைத் தொடுகையிலை கனலின் றழற்சட்டி யெரிக்கப்படும், முண்டிப்புருஷனைப் பறைந்தநாக்கின் முனையாமெரி தூண்டில் விடப்படுமே. 44

என்னைத்தலாக்குச் சொல்லெனவுரைக்கு மொழில் மின்னுளவளினியபதி, ஜன்னத்திலுள்ள வாடைமணஞ் சந்தைக்கியாமத்திற் பெறுளெனவே, வன்னப்புறுவுடன் மலையுச்சத்தில் வாய்மைபகர்ந்தநல்லோர்மகளை, மின்னத்துள விறைவகியான் மணம்விரும்பி முடித்தவர் விளம்பலுற்றார் 45

வண்மையவியுல்லா செப்பினார்கள் மனைவிதனை நம்புதலையாகவே யுண்மைகொளவேண்டா மொருகாலமு முறைப்பாய் மிகவானையிடுகினுமாந், தண்மைக்குணங் கண்டாற்றலாக்குச் சொல்வீர்சங்கையுளம் றுதிரி கொள்வீர், செம்மையுடன் பேணியகத்துள் வைத்துத் தீங்கன்றிக் காத்தங் கிருப்பீர்களே. 46

அடியார்தனைத்தாழ்ந்தோர் தனைவிவாக வணங்குதனை நல்லா சாரஞ்செய்தாற் றடியாய்ப்பெருமையா யுமைவணங் கார் தாழ்த்தியாய்க் காணி லுமைவணங்கி, அடியிற்பணிவார்க ளெனவுரைத்தாரறத் தாரெருமுகிப இமாம்ஷாபியீ, படியுங்குணமாயிம் மூவரையும் பாங்கதாய்ப் பேணி நடத்திக் கொள்வீர். 47

அறவுமிகத் தாழ்மை காணவேண்டா மறவுமிகச்சங்கை செய்யவேண்டாம், திறமதாகநுப் பெண்சாதியைச் சீராயட வாகநடத்திடுவீர், சிறுசோற்றுக்கென்றுங் குளிக்கவென்றுந் தேவிமார் போகவிடா திருங்கள் நெறிகேடனுகிய பங்கலுல்கும் நீங்களவடனைவிடாது காப்பீர். 48

வாகினொருபெண்ணை மணங்கொள்ளவே மனது குஷியாக விருந்தீரெனில் ஏகனிபாதத்துக் காரியுமா யினியகுணமுள்ள மங்கையுமாய்ப், போகமணந்திட வழகியமாய்ப் போர்த்த கிளைக் கொடியுள்ளாளுமாய்ச் சாகு நிலையில்லா வருட்படியே தகுமாயிருப்பவள் தனை முடிப்பீர். 49

மக்கள் தனைமணவாளருடன் வாகாய்மணமாக நடங்க
ளென்றும் ஹறக்காம் புருஷனையாதரித்துக் கைகட்டிவாயை
யதபாய்ப்போற்றிச், சக்கன்றிக் காலில் வீழ்ந்துகையாற்
றயவாய்க்கில்சன்றி* ஜன்சபீலைத் தக்கதாய்ச் சேர்த்துதன்
பூலியைச் சாற்றுவீருங்கள் மக்களுக்கே. 50

தலைவார்த்துகோதிமுகனைபூசிச் சந்தல் நறைமார்பின்
முகத்திற் சாற்றித், தலைவனிடத்திலே மக்கள் தம்மைச் சங்
கையுடன் வாழவனுப்பிடுவீர், நலமாமருமகன் செய்யுங்குற்றம்
நல்மக்களுக்காகப் பொறுத்திடுவீர், கலைவுகனைக்கேட்டங்
குதாசனித்துக் கறுவாயகத்தை விட்டோட்ட வேண்டாம். 51

அன்பாம் புருஷனார் சொல்லைவிட்டே யற்பமாவது சறுக
வேண்டாம், சிம்புக் குணங்களுங் காட்டவேண்டாஞ் செம்மை
யுள() பீருசாமகளின், றுனபக் கருமத்தைக் கேட்டுமிகத்
துய்தாயநடப்பீர்கள் தோகைமாரே, யின்பக்குணமாகக்
கணவனொடு மெல்லாக்கருமமுமியம்பிடுங்காள். 52

வானோரமல்கள்போற் செய்கிலுமா மறியந்தமைப்போ
லாய் நடக்கிலுமா, மீனவுரையாகக்கணவன்றனை யியம்பிடும்
பெண்ணைப்பிறந்தோர்கடான், சீனத்துளசுகலோகம்புகார்
தீ நங்கியாமத்துநாளினிலே, யூனமொளித்தோடவெரி நரகி
லூழிகாலமட்டெரி வதுண்மை. 53

வல்லவொரு பெண்ணைப் பிறந்தவடான் வரிசைக் கண
வனைவெறுத்திருந்தால், வல்லோன் கியாமத்திற் காமாவுடன்
வண்டன்பிறுவூனுநமுறாதுடன், தொல்லை நரகத்தின் கீழ்த்
தட்டிலே துயரப்படுத்துவானென்றுநபி, நல்ல ஹதீதுரைத்
தாரெனவே நலமார்பெரியோர் கணவின்றனரே. 54

உன்னாலொருக்காலு நலவுநன்றியுறுதியுடண் காணே
னென்றுசெப்பு, மின்னாரானவ ரெழுபதாண்டு விரும்பித்
தொழும் பலனழியுமென்று, மன்னு நபியுரைத்தாரெனவே
மருகருதுமானார்வகுத்தனரே. கன்னாசவன்குணங்கொள்ளா
மலேகணவனொடு நன்றாயிருந்துவாழ்வீர். 55

கபுறுதனின்மிகச் சுகமுண்டாகுங் கடிந்தசுவால்கேள்வி
யத்தாபகலும், சபுறிநவிமகளாருலடைய சங்கைச்சபா அத்து
நாளையுண்டா, பவுலந்றகுமத்துஞ் சொர்க்கவாழ்வு மறுமை
தனிலுண்டாம் வரிசைமிகத்தவறுதவனருள மகிழ்வுண்டாகிச்
சங்கைத்திருக் காட்சியுங்கிடைக்கும். 56

---

* கில்சு—சுண்ணாம்பு. * ஜன்சபீல்—சுக்கு.

() இவ்விடத்திற். பீருசாமகளின், என்று சுட்டிக்காட்டிய சரித்திரந் தெரிய வேண்டுமானால், நாமச்சிட்டு வழங்கும் பீர்சா அம்மாள் ஹதீதென்னும் சரித்திர புத்தகத்திற் காண்க.

வண்மைக் கணவனே டிணக்கமாக வாழ்ந்துமவுத்தா
குமடவார்க்குண்டாம், நுண்மைப் பெருவாழ்வு மிகுசுகமு
நுவலவரிதாகுமென்றெண்ணுதே, யுண்மைச் சுவர்க்கத்தின்
ஹூறுல்ஈன்களுவந்து கிதமத்துச் செய்துநிற்பார். தன்மை
யனுகாம லெக்காலமுஞ் சந்தோஷமதாக வாழ்வுமுண்டாம்.

அறுஷுதனிலேறியாதியுட னன்பாய்வசனித்த நபிநயி
னர், துறுபிலமைத்ததே யுண்மையானற் றுனியாத்தனிலிருப்
போர்களுண்டோ, வுறுதிம்வுத்துண்டு மறிந்தகத்தா லுண
ணித்துனியாவையிகழ்ந்துநீக்கி வெறுமைக்குண த்துக்குச்
சபூறுசெய்து வேந்தனுடன் வாழ்ந்திங்கிருப்பீர்களே. 58

விளக்குத்தீயன்றி நாற்பதுநாள் வேதமுஹம்மது நபி
யிறஸூல்தனுக்கவிருந்தாரீச் சப்பழமுந் துய்யதோயமுங்
குடித்தருந்திவெறுக்குமளவுநின் றழுதுதவமேலோன் றனக்
குச் செய்தார் விழி. 59

ஆதநபியெங்கே நூஹ்றெயங்கே, யாசரிபுறூஹீம் நபியை
யெங்கே, நீதமுளமூசாநபியை யெங்கே, நெறிசேரவர்
முன்னேஹாறுனெங்கே, யோதுமறையின் ஜீலீஸாவெங்கே,
யுண்மைஸுலைமான் தாவூதெங்கே, வேதமறைபுறுக்கா
னுடைய வேந்தர் முஹம்மது நபியுமெங்கே. 60

ஆதியுவப்பானவிவர்களெல்லா மமைந்தார் கபுறறை
யாகாதநாம், சோதியுதையத்தால் மவுத்தாகாமற் றுனியா
முநத்தினிலிருப் பதுண்டோ, நீதியுடனறிந்திதனைக்கேட்டு
தெறியாய் விசாரித்துமவுத்துறுமென், றேதும்விசளங்
கொண்டுறுதியாக வுவப்பாய்நடந்துமண்டனிலமைவீர். 61

வசக்கேடுகள் கொண்ட கணவன்றனைமனைவிவருடிப்
பார்த்தவன் றனக்கு, முசிப்பதின்றிவேலைகள் செய்திடில்
முன்னோன்றஹமத்தும் நபிமன்றூட்டும், பிசகின்றி நாளை
யுண்டாமெனப் பேசினர் பெரியோர்கித்தாபிற், குஷியாய்ச்
சடைப்பின்றிக்கை கருமங்குணமதாய்ச்செய்வீர் கோதையரே.

மிடைந்தவறுமைக்குத் தலைவனுடன் விரும்பிநடந்துதுன்
யாச்சுகத்தைத், தொடர்ந்துமணமாகத் தேடாமலே சொர்க்
கப்பதிவாழ்க்கையதனைத்தேடி, யடர்ந்தபகலினு மிரவதினு
மல்லாதனைநாடித்தினங்கடோறும் கடிந்துவணங்கின்ற காரி
கைக்கு கனகபதிசொர்க்கங் கபூலாகுமே. 63

வல்லிமார் தங்கள் புருஷரோடும் வழுத்து நிதமல்லற்பட்
டிட்டாலும், நல்லகுணத்தோடு யிருந்துவாழ்ந்து நாடியவஞ்ச
கஞ் செய்யாமலே, வெல்லும்படியைந்துந் தொழுதுகொண்டு

வெட்கமுடன் பேணியிருப்பாரெனில், நல்லபதிசொர்க்கம்
பெறுவாளென நபிசொன்னாரென்று ஹாக்கீம் சொன்னார்.

தனது கணவர்க்குமகாகனைச் சங்கையாய் நித்தஞ்செய்த
வட்கும், கனதியருளினி னிழல்கிடைக்குங் கத்தன்றஹ்மத்து
மிகுதியுண்டாம், தினமுமவள் பிழைபொறுக்கமாட்டோர்
தேவன் சுவர்க்கமுங் கொடுப்பானதால், மனங்கொண்டுங்
களின் மணவாளர்க்குமகரை நித்தஞ் செய்திருந்துவாழ்வீர் 65

மங்கைமணைளன்றன் மிடைதனக்கு வாகாய்ச்சபுறு
செய்திருந்தாளெனிற், சங்கைநபிமாரில்றுபதுபேர் தவாபுங்
களுக்குமுண்டாமென்றும், தங்கச்சுவர்க்கத்திற் கணக்கன்
றியே ஷறபாய்ப்புகுது வாளென்று நல்ல, சிங்க முஹம்மது
நபி சொல்லினர் ஜெகத்திலுள பெண்காளறிவீர்களே. 66

பெண்கள் தங்களின் செய்திகளாய்ப் பெரியோன்குரு
ணிலுநபியுடைய, வண்மைஹதீதிலுவறிவுடையோர் வரிசைக
கித்தாபிலுமிகுதியுண்டுந், வண்மைக்குணமின்றித் தலைவ
ரோடு சங்கையுளமனமாயிருந்து, செம்மைக்கலிமாவுமுறைத்
திருக்கச் சிறப்பானவருள் செய்வானுமீன். 67

புந்திமகிழவே கணவனொடுபொருந்திமனமாகவடிபணிந்
தே, யந்தமுடனுறுமரிவைமார்க ளழகாஞ்சுவர்க்கத்திலாக
ஆமீ, னந்துகுணமின்றிக்கடுகடுப்பாய் நாவாலுதாசனஞ்
சொல்லும் பெண்கள்வெந்துநரகத்திலிபுலீஸோடு விசன
மிகப்பட ஆமீனுமீன். 68

அறுஷுங்குறுசுவான் புவிமலைநீரமைத்தவிறையானை
நபிதம்மானை, புறுக்கானெனும்வேதமிஞ்சீல் சபூர்போற்
றலுளதவுறாத்திணை, ஹறமாகிய வொலிமார்களானை கண
வனுடன் வெறுப்பாயிருந்தோர், விறகாயெறிந்திடுநரகு
தனில் வீழ்வாருண்மையதாகுமாமீன். 69

பெண்புருஷர் நடக்குங் கருமப்படலம்-முற்றிற்று.

ஆக படலம்-26க்குத் திருவிருத்தம். 455

---

## தாய்தந்தையைப் பேணும் படலம்.

ஆண்ஜாதிகளெல்லாந் தாய்தந்தையைக் கல்லாவழிபடச்
சொன்னான்பின்னும், பேண்சீர் பெண்சாதியானோகளைப்
பெட்பாய்ப் புருஷர்க்கு வழுபடென்றுன், வீண்சாதிகளான
பாவிசிலர்மேல்லான் சொல்லுக்குமாறுசெய்து, மாண்சாய்
வழியாகவேநகுந்துமாதாபிதாமன நோவிப்பாரே. 1

நாயின் வயிற்றிலே பிறந்தாலுமாம் நல்லோர் வயிற்றிலே பிறந்தாலுமாம், பேயின்வயிற்றிலே பிறந்தாலுமாம் பெரியோர் வயிற்றிலே பிறந்தாலுமாம், தாயுந்தகப்பனுங்குருவெனவே சங்கையறிவாளர் சொன்னாரென்று, நாயன் றனக்கஞ்சித் தாய்தந்தையினன்றியறிந்து தானடப்பீர்களே. 2

கண்ணின் மணியான வுமறுகத்தாப் கத்தன்றனக்கேளுக் குற்றஞ்செய்த, வண்ணத் தகப்பனார் தனையும்பெற்றவாகார் மகனையுங்கொன்றாரென்று, முண்மைதனை யறியாதோரெல்லா முடையோன்றனையறியாரெனவே, யெண்ணில் ஸஹாபாக்கள் சொன்னாரென்றே யினிவறிவாளரெடுத்துரைத்தார். 3

நாயன் செயலுக்கு மாறுசெய்தநங்கை மார்களுமாடவரும், ஆயுமுஸ்தாதுமார்களையே யாசையுடன் சங்கியாதவரும், பாயும்புலிபோலேதாய்தந்தையைப் பாய்ந்து பகையாக வெறுத்தவரும், காயமஃதெல்லாம் புண்ணாகவே கடிந்த நரகத்திற்றாழ்வாரென்றார். 4

மார்க்கந்தனக்கான புத்திதனை வரிசைத் தாய்தந்தை சொல்வாரெனிற், றீர்க்கமுடன் கேட்டுநடக்காமலே தேசநடபடி நடப்பேனென்று, மூர்க்கமுடன்பெண்ணின்கீழ்நடப்போர் முழுதுமசல்வயல்தனிலுழுது காக்கும்வேளாண்மைப் பயிரேற்றிய கள்ளப்பயலென்று தள்ளுவாரே. 5

தந்தைதாய் சொல்லை மறுத்தவானுந் தனது புருஷன் சொல்வெறுத்தபெண்ணும், வந்த பிள்ளை தான் குமராச் சென்று வசைகள்கொலியுதாசனித்தபேரு, மெந்தப்பிள்ளையுஞ் சிறுபிள்ளையென்றெளியார் பிள்ளைக்கே யிரங்கிலாருங், கொந்தும் பாவங்கள்செய்தாரெனக் கொதிக்கு நரகத்திற் புகுத்திடுவார். 6

முந்தக் கடன்தந்தோர் வந்துகேட்டால் முழுதுநாய்போலேகுலைப்பவரும், வந்தமிஸ்க்கீனுக் கிரங்காமலே வாயாலஃனத்துச்செய்தவரும், வந்து ஜனங்கள்தான் பசித்திருக்க வலிபேர்க்கன்னங் கொடுத்தவரு, நொந்தபாவிகளென்றிறஸூல்நுவலுவணவாயாலுரைத்தார்களே. 7

தகப்பன்தாயுந் தாம்பெறும்பிள்ளைகள் சங்கையாகவே வளருமட்டு, முகப்பாய்ப் பலபல வருத்தப்பட்டு முறங்குமிரவுகள் கண்வருத்து, நகைப்பார் மலஞ்ஜலந்தூய்தாக்கியே நன்றிசெய்ததைமறந்து பின்னர், மிகப்பாய்நடக்குநாள் தந்தை தாயைவெறுத்தேயிருப்போர்கள் பாவியென்றார். 8

மடியிற் குழந்தையா யிருக்கையிற்றன் வயிற்றுப் பசியினாலழுத நேரங், கடுகியெழுந்துதான் விசாரமிட்டுக் கறந்த

பால்பழம்பலவகையும், நெடியோனுதவியால் நித்தநித்தம் நிறையாய்க்கொடுத்தவர்மனமகிழ்ந்து. வடிவாய் துஆச் செய்ய நடவாமலேமாறாய்நடப்போர் கனரகில் வீழ்வார். 9

அன்னைதனைக் காணப்பெண்சாதியை யன்பாய் வைத்தவர் ஸக்றாத்தினி, லுன்னிக்கலிமாவை யுரைக்காததாலுண்மை நபிவந்தும் ஆச்சுதில்லை, யன்னபோதிறஸூலிவர் செய்யரியகுற்றமேதெனத்தாய்மனங், கன்னத்தம்பெண்டீர் வார்த்தைகேட்டுக் கடுப்புவருத்தினாரென்றார் சிலர். 10

அந்தப்போதிறஸூலொலாரானை யழைத்து நீவிர் போயிவர்தாயாரை, விந்தையொடுகூட்டி வாருமென விண்டாரவர் சென்றுகூட்டிவந்தார், வந்ததாயிடம் நபிபொறுப்பு வழுத்துமெனவவள் பொறுத்தேனென்றாள், சந்தங்கமழ், நபிகலிமாச் சொலத் தாழ மதுபோலே சொல்லியிறந்தார். 11

குணமுள்ள தாயைக்கீழ்ப்படுத்திக்கொண்டபெண்களை யுயர்த்தினோர்க்கும், பணத்துக்காகப் பெண்கொள்வோருக்கும் * பள்ளிதனையேற்றிப் பெண்ணைத்தாழ்த்திப் பிணக்கதாகவே நடக்குகின்றபேயர். தங்கட்கெல்லா முனிவு, மணக்குநபியுல்லா தம்முனிவுமலங்குங் கியாமத்தில்வந்திடுமே.

அல்லாகனதின்பார் நபிஸுலைமானவர்கள்தமை நீவிர் பெருங்கடலினல்லார்கரையிற்போய் நின்றுபார்க்கில் நவிலும் புதுமைகள்காண்பீரெனச், சொல்லவுடனவர் மனுஜின்னொடும் தோயக்கடற்கரை போய்ப்பார்க்கையில், மல்லாரொருவஸ்துங் காணாததால்வருந்திச் சின்னொடுங் குழியோடென்றார். 13

சொன்னவுடனொருஜின் போய்வந்து சோதித்துப் பார்த்தேனொருஸா அத்தாய், மின்னத்துடனென்றுங் காணேனென்று மெலிவிற் சொல் மறுஜின்னைவிட்டார், மன்னர்சொற்படி, யதுபோய்வந்து வழுத்தினது முன் ஜின் சொன்னது போற், பின்னரஜாயிபில்முடையோர் புககிப் பெலத்த குப்பாவொன்றெடுத்துவந்தார். 14

வந்துவைத்தாரக் குப்பாவினை வாயாற் புகழ்ந்திட வரிதாகுமே, அந்தக் குப்பாவினடுவினிலோ ரழகார் வாலிபன் தொழுகானதையந்த முளநபி கண்டுமிக வதிசயப்பட்டுக் கேட்கவவன், எந்தந்தையுமுடமாகி யென்னை யீன்றதாயுமேக யோதினாள். 15

* பள்ளியென்பது—வெள்ளாட்டியென்று கொள்க.

சங்கையுடனவர்க் கெழுபதாண்டு சடைப்பின்றிப் பணி விடைசெய்கதால், மங்கைத்தாயாரும்பிதாவுமொன்றாய் மாயனிபுலீசில்லாத்தலத்திற், றங்கியிருக்கவும் ஹயாத்து நீண்டுதவஞ்செய்யவுந்து ஆவிரந்திறந்தார், பொங்குகடற்கரை தனில் யான்வரும் போதிக்குப்பாவைத்திருக்கக் கண்டேன்.

கண்டவுடனதிற்புகுந்தேனப் போகாறைக்கலங் கொண் டோர் மலக்குதைத்தார், றென்றுசொலநீவிரெக்காலமிங்கி றங்கினீரென நபிகேட்டிடப்பண்டையிபுறா ஹீம்காலமெனப் பகர்ந்தார்காரீக்கிரண்டல் பிறெடு. துன்றுநானூறு வருஷ மாச்சுத் தூக்கியவ்விடம் வைத்து மீண்டார். 17

தெரிசனமுள மூமின்களே திட்னுபிச்சரித்திமறிந்து, பிரிசத்துடனுங்கள் தாய்தந்தையைப் பேணிபணிவிடைசெய் திருந்தால், வரிசைக்கவிமாவை யொடுக்கமதில் வடிவினிலே வாகச் சொல்வதற்கே யறுஷைப்படைத்தவ னுதவிசெய்தங் கமளிவருத்தம்விட்ட கற்றுவானே. 18

தாய்தந்தைப் பேணும் படலம்--முற்றிற்று.
ஆ படலம்–27–க்குத் திருவிருத்தம் 473.

---

## ஸலவாத்துப் படலம்.

சங்கையொடு நபிபேரில் நித்தஞ் சாற்றினல் நூறுஸல வாத்தினை யெங்குமிறையவ னிபாக்கைவிட்டு மெரிதீயினை விட்டுங் கண்ணிடையிற், பங்கப்பழிநீங்கிவிட்டானென்றும பாரகியாமத்தில் ஷஹீதுடனே தங்சம்போற் கூடியிருப்பா னென்றுந் தயவாயெழுவானெனவுஞ்சொன்னர். 1

ஷேகபூ அஸன்புகாரி சொன்னர் செல்லு நாளெல்லாம் நபிபேரிலே, வாகினைநூறுநரமட்டிலும் வரிசை ஸலவாத் தைக்குறைக்காமலே, யேகனுதவியாலெவ்வகுத்து மேத்தமா யோதிக்கொண்டாடியே, பாகமுடன்பற்றிப் பிடித்துக் கொண்டு பகர்ந்தால் நபிமன்றுட்டுண்டாமென்றே. 2

அவ்வல்நபியாதம் சுவர்க்கத்திலே யழகா யிருக்கும்போ தாசையினல் ஹவ்வாவிடஞ்சென்று நெருங்கும்போதி லவர் கள் மகரினைக்கேட்டளவி, லொவ்வாநாயனைநாடிக் கேட்கவு டனே விருபகஸலவாத்தைநீர். செய்வாமதி நபி முஹம்மது மேற் செப்புவீரென்று னுரைத்துப்பெற்றார். 3

தீனிலரைவாசியில்முடைய சிறப்பார் ஆயிஷாஷஹ்றெ குத்திற்றேனேயிருந்து தம்மாடைதனைத்தைக்கும்போ தாசி விளக்குநூரக்கோனும், நபியுல்லாபுகுத்தவுடன் கொளுத்தும்

விளக்குப்போற் றுலங்கிடவே, மனமாழியாதநாயகிதா மண்ணில்விழுமூசிதனையெடுத்தார். 4

எடுத்தபோதங்ஙன்மணவாளரையெதிர்த்துப்பார்த்துத் தான்கேட்டாரதற், கடுத்தநபி சொன்னரென்னைக்காணுதவர்க்குக்கேடுண்டென்றுரைத்தார்பின்னுங் தடுத்துக்கேட்டார் கணபிநாயகிதங்களும் மத்திற்காணுகதார், கெடுத்தபகிலன்றனென்றாரினுங் கேட்டார் பகிலனரெனநபிபால் 5

அப்போ நபிசொன்னர் பகிலனென்று லழகாயென்பெயர்கேட்டவுடன், தப்பானதையோட்டும் ஸலவாத்தினைச் சாற்று தவனென்றே யாதலின, லிப்பாரினிற்றப்பா நினைவுடனே யியம்புங்காணபி ஸலவாத்தையே, சப்பாய்க்கூடுநாளவர்களருட் ஷபாஅத்துடன் சொர்க்கம் புகுவீர்களே. 6

ஸலவாத்துப் படலம்-முற்றிற்று.

ஆ படலம் 28-க்குத் திருவிருத்தம். 479

# வஹ்ஹாபிப் படலம்.

நல்லா ரறிவான வகமியத்தை நாடியறியாத வஹ்ஹாபிகள், பொல்லாபித்து அத்துச் சிறுக்காமென்று புலம்பி மனுடரைக் கலக்கமாக்கிக், கால்லாம்பித்தொடுநபியொலியைக் கலந்து பேசிய சமதியாக்கி, வெல்லோரொளி யீமானிலைமாறியேவேறே ஜாதியாய்ப்போனர்களே. 1

ஒலிமார் நபிமார்கடங்களுக்கே யுவந்துசேர்ந் தொருகோழிபாட்டை, அலியாண் பெண்ணிலா னிசுமுகொண்டேயழகாயறுத்தவை ஹலாலாக்கிமா, பொலிதாயிருப்பதை வஹ்ஹாபிகள் பொல்லாஹறு மென்று ஷிறுக்குச்சொல்லி, வலியோன் பொருத்தக்கேடதனைப் பெற்று வாடிக் கலக்கமாய்க் கேட்டிலானர். 2

கனமர் ஷைகை யன்னவர் முரீது கலங்கும் வேளையிலே தபதுமனதானது கெண்டுநாவன்றியே மகிழ்ந்துகூப்பிட்ட சத்தமதைத்தனது காதினற் ஷைகுகேட்டுத் தயவாய்ரட்சிப்பா ரென்றுநல்லோர், நினைவாய்ச் சொலவிய சொல்லையெல்லா மீக்கும் வஹ்ஹாபிகள் கெடுவார்களே. 3

அகப்பாருவை யுள்ளஷைகவரை யல்புவருஷமாந்தலைதூரத்தி, லகப்பேமிகவுள்ள முரீதிருந்தே யூணிககூப்பிட்டபோதிலுந்தானகத்தியமதாகவறிவாரென்றே யழகாங்கித்

வந்திருக்கப்,பகையாம் வஹ்ஹாபியானவர்கள் பாங்கன
றெனச்சொல்லிக் கேட்டிலானார். 4

முத்திலுதித்திடு நபிபொலிவை மூமினனவன்கண் ஹா
ஜத்தாற்சத்த மாய்க் கூவிக் கேட்கிறது தயவாரிஸ்லாத்தி
லாமான தாங், கத்தியுன்றல்போல்வஹ்ஹாபிகள் கனத்த
ஷிறுக்காகுமென்று சொல்லிப், பத்தியிழந்துநல்லறிவுகலைப்
புகுந்து விளங்காமற் கெட்டுப் போனார். 5

மவுத்தாகிய மூமினவர்களுக்கு மொழியும்பாத்தி ஹா
கத்தமோதல், சவுத்தாரமுகுள நமதுநபி சாற்றினராகு
மென்றாரதாற், கவுத்துவமான பாவமீங்கிக் காட்சிபெறலாகும்
தவாபுஞ்சேரு, மவுத்தைப் படைத்தவனபி சொன்னதை
மாற்றி வஹ்ஹாபிமார்கள்கெட்டார். 6

பெற்றபிள்ளைக்கேயழகானபேர் பேணியிடுவது ஸுன்
னத்தாகுமற்ற அஸ்மாக்களழகன்றியே மாறாயிடுவதுமாற்ற
மாகு, மூற்றவாண் பெண்களிவருக்குமுவக்குநத்தர்சா முஹி
யித்தீன்பேர், பற்றியிடுவது ஷிருக்காமென்று பாரில்வஹ்
ஹாபிகள் சொல்லிக்கெட்டார். 7

அல்லாதனைக்கொண்டும் றஸூலைக்கொண்டு மான
வீமானிலிருப்போர்களைப், பொல்லாவிது அத்தைச் செய்
யேதுவாற்பொருத்தமிலாக்காபிர் முஷ்ரிக்காக்கி, நல்லாரறி
வதைத் தேடாமலே நட்டுமரம்போலே நின்றுகொண்டு,
பொல்லாங் கதுகுடிகொண்டவர்கள் புவியில் முஷ்ரிக்காய்ப்
போனார்களே. 8

ஒளிவாமுஹம்மதுநபியிறஸூலுவப்பாம் ஷபாஅத்துக்
குபுறாவுக்குத், தெளிவாய்த்தனதாகுமென்றிறையோன்
றெறிந்து சொன்னதை விளங்காமலே, ஒளிவாய் நின்று
தான் யாவருக்கும் கொடியோனடினற் கொடுப்பானென்றே,
யெளிய முஸ்லிமைக் கெடுத்துச் சொல்லிவிடரும் வஹ்ஹாபி
மார் கெட்டுப்போனார். 9

ஆதமபுல் பஷறபுற் றாகுமே லன்பாஸலவாத்தை யோ
தினதால், மாதுஹவ்வாவின் மகர்தனக்கு மன்னனுக்கினவ
ரொளியைச் சீதுநபி பிதா விரலிற் கண்டு சிறப்பாய் முத்
தியே கண்ணில்வைத்தா, ரோதும்வாக்கிற் பேர்கேட்டவுட
நுவந்துவிரல் கண்ணில்வைப்பீர்களே. 10

வைத்தவுடன் கண்ணினோயகன்று வாகாயொளியுண்
டாம் வஹ்ஹாபிகள், ஷைத்தான் குணத்தினால் விரல்வைக்
காமற் சிதறிவெறுத்தினும்வைப்போர்களைக், கைத்துப்படித்
தியே விலக்கல்செய்து கழுநெஞ்சினில் வஞ்சம்வைத்து,

னைத்தாரொருமூன்றிற் பயணம்போன பயஹறாம் பர்தமை வெறுத்திக்கொண்டார், 11

கூட்டங்கூடியே நபிமௌலீதைக் குணமாயோதின பேர்களெல்லா, நாட்டமு நபியுவப்புண்டாகி நாளை ஷபாஅத்தைப் பெற்றிடுவார், தேட்டமுள நலல்லபெரியோரெல்லாந் தேடித் தேடியே யோதுகின்றார், மாட்டுமனுடராம் வஹ்ஹாபிகள் மாறிவிலக்கியேகெட்டுப்போனார். 12

கெட்ட பிதுஅத்தங் கருமங்களைக் கேட்டு விலக்கியே வஹ்ஹாபிகள், கட்டுப்பாடான வார்த்தைகளைக் கலக்க வொட்டாமனீக்கிவிட்டு, மட்டில்லா வாழ்வும் பறக்கத்துவு மறுமை தனில்வர அமல்செய்யாத, மட்டிமனுடராமவர்களெல்லா மாறு செய்ததாற்கெட்டுப்போனார். 13

அடியார் நபிபேரில் ஸலவாத்தினை யழகாயுரைத்திடிலவர்களுக்கு, நேடியோன் கறஜாத்தை மேலுமேலு நீட்டியுயர்த்துவான்சொன்ன வர்க்குப், படியிற்பாவத்தைப் பொறுத்து நன்மை பத்தாய்க் கூட்டுவானென்றிருக்கக், கொடிய வஹ்ஹாபிகள் நபிதமக்குக் கொடுப்பதில்லையென்று கெட்டுப் போனார். 14

இந்த வஹ்ஹாபிகள் வார்த்தைகளை யெடுத்து நடவாமல வலியாக்கள், வந்த பாதையில் நாம் நடந்து வரிசைப் பதி செல்க அமலுஞ் செய்து, கந்தமுளநபி மன்றூட்டத்தைக் கண்டு தெரிசனைப்பேரின்பத்தை, அந்த முளநாயன் றந்திடவே யன்பாய் முஸ்லீம்கள் துஆசெய்வீரே. 15

வஹ்ஹாபிப் படலம்-முற்றிற்று.

ஆ படலம 29-க்குத் திருவிருத்தம். 494.

---

## பல ஹதீதுப் படலம்.

மங்கைமார் தங்கள் மனையைவிட்டு மற்று மனைதோறுந் தெருக்கள்தோறுஞ், சங்கை யொடுமாடை யுடமைகளுந் தலைமேல்மூட்டாக்கும் போட்டேகும்போ, தெங்கே போரார்களிந்தமின் னரியாவரெனப் பலர் கேட்டதாக, வுங்கள் பிரியமாய் நடப்பதினலொயிலா நரகத்தில் வீழ்வீர்களே. 1

கண்ணுக் காபத்து வருநோங்கள் கண்ணை நிமைகாக்கும் காரணம்போற், பெண்ணுக்காபத்து வருநேரத்திற் பேணியறிந்துதான் காக்கவேணு, மொண்ணுக் கொண்ணுகப் பெண்ணுக்குப்பெண்ணென்றிப் படுப்பது ஹறாமெனவே, மண்ணும் விண்ணையுமுடையொனன்பு வளரு மறிவாளர் வகுத்தனரே. 2

பெண்ணுக் காதாரம் புருஷமார்கள் பெரியோர் சிறியோர் களாகிலுமாம், கன்றுக் காதாரங் காளியைப்போற் கண்ட விடமெல்லாந் திரியவிட்டோ, ரென்றைக் கும்பாவி யாவதோடுமெல்லோர்க்கும் பொல்லா ராவாரென, மண்ணைக் கொடுபடை வென்றூர் மறைவழுத்து முலமாக்களுரைத் தனரே. 3

உந்தன் பெண்சாதி யானவடா னுன்னை யறியாமற் பிறருடனே, அங்க முளநல்ல வடிவுகாட்டி யழகார் மொழிகளாற் பலகாரியம் விந்தையுடன் பேசியிருக்கிறதை விசாரித்தறிந்து தான்விலக்காமலே, கந்த முறமன முவந்திருந்தால் ஹறுத்திற் செலவிட்ட பாவியென்றூர். 4

புருஷ னறிந்கறியாமலுமே பூவை பிறருக்கு நாணமலே, யுரிசையுடன் பேசி யிருப்பாளெனி லுரைத்த நாகத்தி லரவுங் கேளும், பிரிசமுடன் தேடிப் பிடிக்குமென்றும் பின்முன் பிசகியே போவாளென்றும், வருசை முஹம்மது நபிஹதீதில் வந்தபடி யறிஞோர்கள் சொன்னூர், 5

கணவன் றனையிழந் திட்டகைப் பெண் கழறுந் தன்னுற முறைகளானோர், மணமாம் வாலிபராகிலுமாம் வயதிற் பெரியோர் களாகிலுமாங் குணம தொடுசென்ற ளவர்களோடு கூசாமற் பேசியிருந்தாளெனில், நிணமதார்ச் சென்று நாகத்திலே நீந்திநீந்திபே திரிவாளென்றூர், 6

பெண்ணைப் பிறந்தோரிற் சிலமூதேவி பெரிய முக்காடு சரியாய்ப் போட்டுக், கண்ணுற் பாராம லாடவரைக் கடைக் கண்ணல்நோக்கிப்பார்த்துப் பார்த்த, வண்ணைவிகன் கவறைசெட்டிவருந்துங்கூலியாள் வயித்தியனே, யெண்ணு தேகிட்ட முடுகுதலாயிருப்போர் பெரும்பாவி யாவார்களே.

அகபு நெறியுள்ள மங்கையர்போ லதிர முனிலோடி யொளித்துக்கொண்டு, கதவு நிலைதனி லொதுங்கி நின்று கடைக் கண்தனினற் பார்கொணுது, சதமகார் கித்தாபுரைத்த போலாண் டனக்குக் கன்னியெ நாணச்சொல்லி, யுகிர தாபலா காமல் ஹயாத் துள மட்டிறைக் கஞ்சிப் பேணுமென்றூர்.

அறிந்த முஸ்லீம்க டம்மைக்கண்டா லகன்று தூரத்தில் விரைந்தோடியே, பிறந்த காபிர்க ளறியாதுறும் பிரத்தியாருக்கு நாணமால, மறைந்தங்கிருப்பதுஞ் சிரிப்பதும் பார்த்து முன்பினுய்நடப்பவள்தா, னுறைந்ததீநர முள்ளிற் சென்றே யுழறுக்குழறியேதிருவாளென்றூர். 9

வாலிபமதுளாள் வெளில் நின்று வழியில் வருவோரைப்
பார்த்தாளெனிற், கோனுமவளுநம்மன்ன வனைப் பார்க்குக்
கொடியவாடவரிருவருந்தான், சோலிமிகவுள்ள நரகந்தனிற்
றேந்திப் பாகவேசந்திப்பாயந், நீவினு மெக்காலமு நிலைமை
யாயதி லிருப்பாரென்றார். 10

அறிவையார்முக நெருப்பைப்போலு மாண்பிள்ளை முக
நெய்யைப் போலும், சுருபங் காட்டுமான் மரைபோலுமான்
சூரியனைப்போலுமா மதனு, லிருவர் தமக்குந்தான் பாவ
மொன்று யெழுதப்படுமென வேயறிந்து, மருவும்புருஷனைக்
காண வேண்டு மற்றோர்தமக்கெல்லா நாணவேண்டும். 11

கொண்ட புருஷனி னுசையையுங் குறுக்கே கண்ட
பேரரசையையும், ரண்டுஞ் சீர்தூக்கி வீகம்பாக்கில் நேரொத்
திராதுகண்டவரினுசை, கொண்ட வுருஷன்று னுசையாகிற்
கோதையுடன் கூடித்தீர்ப்பான்கண்டீர், கண்டபேர்களி
னுசை ஹயாத்துள்ள நாள்மட்டுந் தீராதென்றார். 12

வேடிக்கையான பெண்களெல்லாம் விரும்புங்கனியாமாட
வர்க்கவர்கள, பாடிப்படிக்கினுந் தாராட்டினும் பயனுமொப்
பாரி நகைப்பேச்சினு மோடியொளித்தவர் மறைவாகவே
யுவந்து மனையினிலிருக்கவேண்டும், நாடிநபிநாதர் ஹதீதின்
படி நங்கை தனையாண்கள்பேணிவைப்பீர். 13

தாடி தானில்லா வாலிபரைத் தங்கள் பிள்ளைபோற் பா
ராட்டியே, நாடிமுடுகியே வீட்டில்வர நாணங்கெட்டவர் பார்த்
திருப்பார் கோடிப் பாம்புக்கு நஞ்சுமெத்தக் கூசிவிலகியே
பெண்பிறந்தோரோடி யொளித்துப்போ யொதுங்கு மென்று
ருடையோ னபியுல்லா ஹதீதின்படி. 14

இந்தக் காலத்திற் சிலமடவா ரிரவிதனிலிப்பு நெருப்பு
முட்டை, வந்தபேருக்குக் கொடுத்ததாற்றங்கள், வாழ்வும்
பறக்கத்து மாறுமென்பார், அந்தக் குபிர்கலா மாலவர்களா
கிரத்ததாபினிலாபாரென், றிந்தை வகிர்ந்தவ ரும்மத்திலே
யினியவறிவாளரெடுத்தோதினர். 15

தந்தை காய்கிளை புருஷன்கிளை சகலமுஸிலீம்கள் தம்மை
கண்டாற். சிந்தை வெறுப்பாக நடக்காமலே சிநேகத்துற
வாக விருந்தோர்கள்தான், பிந்தி கியாமத்து நாளதனிற்
பெரிய நரகத்திலெரியாமலே, அந்த முளசொர்க்கம் பெறுவா
ரென்றே யாலிமுலமாக்களறிந்துறைத்தார். 16

சண்டைமூட்டியே கோட்சொல்வதிற் சமர்த்தாய் நம்
மைபோலே பில்லையென்று, கண்டிதமாகப் பலபேரையுங்
க்வுத்துவமதாகவெடுத்துவிட்டோ, ரென்று மறியாதபேரைப்

போலேயொழுங்காயிருந்தாலு முனுபிக்காவா, ரென் றிங்
குரைத்தார்களறிவாளர் தானிஸலாமானபே ரெல்
லோருக்குமே. 17

தனிய வழிபோற பெண்களுக்குச் சனியனிப்லிஸு துணை
யெனவே, முனிந்து விலக்குவீ ரவள் தனையே முழுகும் வேசை
யென்றறிந்து கொள்வீ, ரினியிங் கிவர்கள்போ வில்லையெனும்
பெண்ணெத்தனை பேர்கள் கூடினாலுந், தனியோராண்பிள்ளை
யில்லாக்கூட்டம் ஷைத்தான் கூட்டம்போ லாவார்களே. 18

பழையகுளத்தினின் மீன்கள்சில பதுங்கியொதுங்காமற்
கெருவிதமாய், மழை பெய் புதுத்தண்ணீர் கண்டவுடன்
மருண்டுபுரண்டோடுந் தன்மைபோலே, பிள்ளையாமடவர்கள்
வெளியில்வந்தாலெதிர்த்தவாடவர் பார்வையினா லழியுங் குள
மீன்போற் பலாகட்கவலைக்கப்பட்டதினாலே லினவாகுமே, 19

ஹறாமா மடவாரு மாடவருங் கணிநேசு யுவப்பாகப் பே
சுவதிற் குறாணை யிறக்கினேன் மலக்கையேவிக் குற்றமுள
பேச்சையெடுத்தெழுதி, யுறமலேற்றுங்காள் பாவமாகவோ
தவ விருவர்க்கும் பங்காயென்றே, பெருக நெருப்பினா லதாபு
செய்து பிடிப்பார் மலக்குகளடிப்பார்களே. 20

தலையைப் பிடவையால் மூடாதுறுந் தையல் படும்பாடங்
காசிரத்தி, லுலையி னெருப்பினைக் கடந்தெரியு மோடை நர
கத்திற்போடுவார்கள். தலையைத் திறந்துகா ணிருக்குமந்தக்
கன்னி தனையென்றும் வன்னிதனில், மலைத்தனை நன்மைசெய்
தாலுமாம் வரிசைமலக்குக ளெரிப்பார்களே. 21

வேலியடையாமற் பெண்களையே வெளியி லொளிவாக
வைத்தோர்மிகு, ஸாலிஹானபேராகிலுமாந் தங்கள் வணக்
கங்கள் பழுதாமென்றார், கூலிகொடுத்துத்தான் வருத்தப்
பட்டுக் குணமாயடைத்தப்பின் குடியிருப்பீர். தாலியிழந்த
பெண்ணாகிலுமாந் தலைகள்தெரியாமல் மறைக்கவேண்டும். 22

மிடிமைத் தனத்துக்குச் சபூறுசெய்து மேலோன் றனை
நித்தம்வணங்கினோர்கள். கொடுமையாகிய தனியா விலுங்
கூறுமாகிரமத்தனிலு. மடிமை தனினல்ல வடிமையாகியமனி
நரகம் விட்டுரிமையாகிக், கடுமையுடனே தான் பாலந்தனிற்
கடிந்தபிரவிபோல்நடந்துபோவார். 23

கந்தூரியினிலும் விருந்தினிலும் ஹலாலாஞ் சோறுண்
ணுங்களரியிலும், வந்தமனிதரை யினஞ்சேரவே வகையாய்ப்
பிரித்துத்தான் வைக்கவேண்டும், மந்தமகல்பொல்லாநச
லோரையுமடிமையோரையுநல்லோருடன், குந்தியுணுமென் று
சொன்னபேர்கள்குதாயானவனுக்குப் பாவியென்றார். 24

வணக்கமஃதிலார் சலுகைக்காரர் வணங்கு மூமின்களு
டனான்பது, குணக்கிநாயறு வேட்டைதனிற் கொண்டுவருமிரு
கத்திறைச்சைக், கணித்தே யதுவாய் பட்டிடுமெச்சிலைக் களு
வாமற்றின்றபுரவி யென்று, மணக்கு முஹம்மத ரும்மத்திலே
வரிசையறிவாளரெடுத் தோதினார். 25

நெருப்பாயெரிகின்ற கியாமத்திலே நெடியோன றுஷின்
கீழ்நிற்போர்களாம், விருப்பா யுளசினாவிட்டவருமெத்தப்பசி
தோருக்குதவினோருங், குருக்கடாய் தந்தை கணவனுக்குக்
குணமாயிணங்கியேவணங்கினோரு, மொருக்காலும் பாவஞ்
செய்யேனென்றேயுண்மைதப்பா மனின்றபேரும். 26

பெருக்காம் பீஸபீல்வெட்டு நரும் பேணி யமானிதங்
கொடுத்தவரும் பழுக்கச்சிறக்கவே பலருடைய பயந்து ஹறா
மென்றுதவிழ்ந்தவரு, முருக்கமுடனோன்பு ஸக்காக்கோடு
மூவந்து ஹஜ்ஜுகள்செய்தவரும், அருட்கள்பெற அமல்
முடிந்தவரு மறுஷ்னிழலின்கீழ் நிற்பாரென்றார். 27

அனியாயங் கொலைசெய்திலாரு மழகாய் வழக்கிலே நடுச்
சொல்வோருந் துனியாதனில்வட்டிகோள் விட்டோருந் துய்
யோன்வணக்கத்தை விடாதவருஞ் சனியாஞ் சொத்துகள்
தின்றிலாருந் தம்பிரான் திக்கிர் தனஞ்செய்வோருங், கனி
யாம் பெண்பிள்ளை குமர்கடனைக்கவாலாய் நிக்காஹிலே
முடித்தவரும். 28

பனியாமடுமையை யுரிமையாக்கிப் படைத்தோன் றனக்
காகவிட்டவரு, மினியாதரவில்லா வெத்தீம்களை யிறையோன்
பொருத்தத்துக் கேற்றபேரும், கனியாமிறைகனைக் கருத்துற்
றோருங் கைப்பெண் தனக்குத்தா னுதவினோரும், பனியா
தம்மக்கள் குபிர் விட்டோரும் வரிசையறுஷின்கீழ் நிற்பா
ரென்றார், 29

இலங்கு நபியுல்லா வும்மத்திலே யிறையோ னருட்படி
யெழுபதல்பு, மலக்குங் கியாமத்திற் கேள்வியின்றி மாதர்
ஹூறுடன்சொர்க்கலோகங், கலங்கா தேகுவா ரென்றி
றஸூல் கனத்த அஸ்ஹாபி மார்களொடு, நலங்கோளும்படி
யுரைத்தா ரனார்யாரென்றஸ் ஹாபி மார்கள் கேட்டார். 30

கேட்டவுடனபி சொன்னாரவர் கிளற்றுஞ் சோவியங்குறி
சாஸ்திரம், நாட்டமுடன் கேளார் மருந்தினால் நோய்நமைவிட்
டொழிந்த கென் றீமான்கொள்ளார், ஈட்டுப் பிணியர்மேற்
சூடுவையாரில்லா இல்மூகொண் டோதிப்பாரார், கூட்டமாம்
வகையெல்லாத் துங்குதாயின் பரஞ்சாட்டிக் கொள்வோருமே.

இன்னுமொருசொல்லி லேழுலட்ச மின்றுமொரு சொல்
லில்நா லுலட்சம், பின்னுமொரு கையைக் கூட்டியொன்றாய்ப்
பேணியெடுத்தமண் தொகையதாகு, மின்னுமொரு சொல்
லொவ் வொருத்தருடனிணங்கிக் கூடுநன் மொழுபதல்பு மன்
னுந்தொகைலக்கநானூற்றுத்தொண் ணூறுகோடிக்கு மேல்
வளர்ந்தோர். 32

இவர்களடங்கலும் கியாமத்திலே யெதிர்த்த கேள்வியும்
ஹிசாபு மின்றிச் சுவனம் புகுதுவாரென் றிறையோன் சோ
குசாய்நபிக்குத்தான் மிஃறாஜிலே, தவிருமுறையன்றிச் சிபத்
துச் செய்தான்றரனி மூஸிலிம்கா ளிதையறிந்தே, யவர்களு
டன் சேர்ந்துசுவர்க்கம் புகவான அமல்களைச் செய்வீர்களே.

பறவை மிருகம்பட்சிகள் மச்சத்தைப் பண்பாய் ஹலா
லாகாதென்று சொல்லி மறிவுதானில்லாக் காபிர்களுக் கட
வான நல்லவறிவு சொல்லி, யுறவாகாமலே பலவகையு மிடித்
துஞ் சிலைப்பேன் றலைப்பேனையு மறவே கொடிதான செள்ளு
மூட்டை யறவே கொல்வதுந்தோஷமென்றும். 34

குடலின் பூச்சிகள் சாகவென்று கொல்லமிளகுகள் புளி
யுப்புகள், கிடமாச் சேர்த்துத்தான் புசிப்பினோடு தின்பது
மின்னம்பனையினோடு மடலாருந்தென்னை மரங்களிவை
மண்டைதனி னிற்கும்வண்டுகளை, யடவாய்ப் பாராமற் கொல்
லுகிற ததுவுந் தோஷமாயிருக்கு மென்றும். 35

மாட்டின், கண்ணிலேயுளவுண்ணிய மனுடர் புண்ணிலே
புழுப்பூச்சியும், வீட்டையறுக்கின்ற வழகானையுமேலே நறுக்
கின்ற புழுக்களையும், நாட்டிலுளபயிர் பலவகையினன்றா
யிருக்கின்ற புழுக்களையு மோட்டிக்கொள்வது தோஷமென்று
முறைத்த காபிர்கட்குரையுமென்றார். 36

கோட்டைகிட்டங்கி கோவில்வீடு குளங்கள் கிணறுவாய்க்
கால்வயல்கள், மேட்டைப்வள்ளத்தை வெட்டும்போது மேயு
மென்றும்புகன் கறையான்களை, வீட்டைக்கலைத்தத்தான்
சொல்லுவதுவிரோத தோஷமாயிருக்குமென், மோட்டுக்
காபிர்கள் சொல்லுவதை மூமினனபேர் வெல்லுவாரே. 37

உயிருக்குயிராகு முதகங்களையுள்ளபடியேதான் கொள்
ளாமலே, வயிரவிறகினார் நெருப்பிற்காய்ச்சி வாங்கிக்குடிப்
பது தோஷந்தானே, பயிரா மூயிரெல்லாம் படைத்தோன்
சொன்னபடியே தின்றுண்டு வணங்காமலே, மயிராமறிவு
கடனைப்படித்து வணங்காக் காபிர்க்குத் தோஷ மென்றார்.

தன்னைப்படைத்தவன் றனக்காண்டவன் தான்தான்
சமைத்தது தனக்குடைமை, தன்னைப்படைத்தோனைத் தாரு

மாமற் றூன்றூன் சமைத்ததைத் தான்றெழுதாற், பின்னைக் கொடுத்திடும் நரகந்தனிற்பெருத்தவருத்தங்கள் பெறுவா ரென்றே, யென்னைப் படைத்தவன் வேதத்திலே யெழிலாய்த் திருவுளம் பற்றினனே. 39

ஆண்டோன் றனைமுற்றும் வணங்காமலே யடுமைதனைச் சற்றே வணங்கினோர்கள், தாண்டிவிழுவார்க ளரகந்தனிற் றூன தருமங்கள் மிகச்செய்பினும், பூண்டஞாயங்கள் படித்திடினும் பூசைபுனற்கார மிகச் செய்பினும், வேண்டுங் கருமங்கள் செய்திடினும் வினையாம் நரகமே கெதியாமென்றூர். 40

தனக்குத் துரைத்தன மிருக்கச்செய்தே தன்னைபோற் சிலபேர் நடக்க, உனக்குப் பொருத்தமோ வல்லவோசொல் லொண்ணுதிதை நன்றூய்க் கேளுமென, வெனக்கு முனக்கு மெல்லாவஸ்துக்கு மேகபெரியவனொருவனென்றே, நினைத்து நெஞ்சிலேலையைந்து நேரே நித்தம் வணங்குவீ ரிடைவிடாமல்.

வணங்கா முடிமன்ன னென்றொருவன் வானம் பூமிக்கு ளிருக்கிறவர்க், கிணங்காமற் சிலர் வெறுத்துவேறே யின்ன மொரு முடிமன்னைவைத்தாற், பிணமாயவனை வெட்டிடுவத லாற்பேத மிஃதென்று விடுகுவானே, குணங்களிவை கண் டோ ராதிதனைக் குறித்தே யனுதினம் வணங்குவீரே. 42

கச்சவடக் கட்க்காரன்பிச்சைக் காரன்களவீந்தோன் மூமினெனி, லட்சப் படவேண்டா மிருபதியி லருளும் பொருளுக்குநன்மைவரும், நச்சுமரமான காபிருக்கு நாலுவிதத்திலு முதற்கொடுத்தால், மிச்ச மூமின்போல் வாறதில்லை வேறே விடுதியிற்போறதினல். 43

துனியாதனிலுள்ள மூமின்கடான் தோஷப் பாவங்கள் செய்வதிலே, அநியாயமதான மிகுபாவம் தசடுங் கொலைவினைப் புறங்கோளிதாற் கனியாநன்மையெல்லாத்தவமுங் களைத்து கிளைந்துதானரியானுகப், பனியாதமக்கண் மஹ்ஷ ரிலே பாவிபாகவே திரிவாரென்றூர். 44

துரந்தவனந்துகள் சோறுகறிசொல்லும் நலபாண்டம பலவகையு, மறந்திடாமலே மூடிவைத்தல் மார்க்கந்தனக்கான செயலாகுமே பிறந்தபொழுதிலு மறைந்தபின்பும்போற்றுங் கதவினைப்பார்த்தடைக்க-நிறைந்த நபியுல்லா சொன்னு ரென்று நீதியறிவாளர் தாமுரைத்தார். 45

பாலில் நீர்விட்டு விற்பவரும் பதரைநெல்லுடன் கலப்ப வரும், காலியரிசினில் நீரிட்டோருங் கள்ளப்பணங்காசு செலுத்துநரு, மேலோன் லகுனத்திலாகியென்றும் வெகு நரகத்தி லாவரென்றும், ஆல நபியுல்லா வும்மத்திலே யறிவுள் ளோர் சில ரெடுத்துரைத்தார். 46

வல்லிமார்பின்பா லணைவோர்களு மாதவிடைதனி லடுப்போர்களுஞ், செல்ல ஹறுமான வொப்பாரிகள் சொல்லியழுவோருஞ் சூழ்ந்தோர்களும், பல்லிச், சாத்திரஞ்சொல்வோர்க் கேட்போர்பாவைமார் கோலங் கொண்டோர்களும், வல்ல பெரியவன் லக்ஷணத்துக்குள் வகையா யாவாரென்று ரிறஸலில்.

ஏகமூர்த்தியாம் அல்லாதனை யேத்துமார்க்கங்கள் பல வகையில், மோகமாகிய இஸ்லாமார்க்க மூமின் முஸ்லிம்களீமான்கொள்வார், வேகமாகிய மறுஜாதிகள் வேரோமாக் கங்க ளதிகமென்று, லாகமுடன் மூன்று காரணங் ளதனை யறிவே பிரிவாரென்றார். 48

செத்த மையித்திற் சிலபேர்களைத் திரும்பவெகு காலஞ் சென்றபின்பு, வைத்த சுரூபம் போலிருப்பதுவு மருவும்பசுக்களுங்கன்றுகளும், பெற்றதாய் தன்னை யம்மாவென்று பேசுமவை யிஸ்லாம்பாஷையாம், கத்தன் படைத்தாமெப்பிள்ளையுங் கனத்தஇஸ்லாத்தின் பாஷைபேசும். 49

நாலுபெண்கொள்ளு மூமினுக்கு நபக்காக் கிசுவத்துப் பெலமுமாதல், ஆல நபியுல்லா ஷறகின்படி யநேகம் ஷரியத்து வைக்கலாமே, மேலோன் சொற்படி நடத்தாவிட்டால் வினையாய் நரகமேகெதியா மென்று, ஞாலந்தனிலுள்ள ஆலிம்களு நல்லவறிவாளர்தாமுஞ்சொன்னர். 50

பலஹதீதுப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 30–க்குத் திருவிருத்தம் 544.

---

## குறுசுப் படலம்.

கலிகாலம்வந்தபின்னரிந்தக் கருணடகதேசமானதிலே யொலியாம் பெரியோரிற் சிலபேர்கள்தா முறைந்த சலங்களில் நடக்கும்பாவ, நலிபோற் பூமியி லோரிடத்து நடக்கவில்லையென்றுசொன்னதோடு, சலியா தறிவோது மொலிமார்கள்தாஞ் சந்தோஷம் பொல்லார்க்கில்லை யென்றார். 1

கந்தூரிப் பிறைகண்டவுடன் கட்டுங்கொடி யேற்றம் பார்க்கவென்றே, வந்தமடவார்கள் பாவியென்றும் வரிசையவருக்கங்கில்லை யென்றுங், கந்தச்சாராயங்களுங் கஞ்சாக் கடைகடோறுந்தான் விற்பதினற், குந்தக்கமதாகக் குடித்தோர்சிலர் கூறம்மடவாரைத் தொடருவாரே. 2

சந்தைக் கூட்டம்போ லாணும்பெண்ணுந் தனதாக வொன்றாய் நிற்பதுவுஞ், சிந்தைக் கிசைந்திடும படியவர்கள் சேர்ந்தேயூர்சுற்றிப் பார்ப்பதுவும், வந்த மடவாரைத் தான்

ரெடர்ந்து மாட்டோ மென்றோரைத் துரத்துவது, மிந்தப் பாவங்க ணடப்பதினாலேகனொலிமார்கள் லஃனத்தென்றார். 3

கொடியேற்றுங் கூட்டம் பார்க்கவந்த சோதைமாரெல்லாம்பாவியென்று, படியேற்றுங் கோயிற் றிருநாளுக்குப் பார்க்கப்போகும் போற் றானடந்தால், முடியேற்றும் நபி திருப்பேரனார் முஹிய்யித்தீன் சொன்ன ஹதீதின்படி, குடியேற்றுஞ் சொர்க்க முடையதான கோமானொலிமார்கள் லஃனத்தென்றார். 4

முட்டாயிக்கடை பார்க்கும்பெண்ணு முழுதும் பலதலமலையும் பெண்ணும், பட்டாணிக்காரர் பலகூட்டத்தைப் பார்த்துப்பார்த்துத்தான் சிரிக்கும்பெண்ணு, பாட்டையானை களான் குதிரையறையை விடுந்தலை காணும் பெண்ணும், கெட்டசெயலிது நடப்பதினாற் கிருபை யொலிமார்கள் லஃனத்தென்றார். 5

கெந்தப் பொடிகடை வளையற்கடை கீர்த்தியுளவன்னச் சவுளிக்கடை, சந்தனக்கடை பீங்கான்கடை சகலமணிக்கடையுளகூட்டத்துஞ், சிந்தைக்கிசையவே தேடித்தேடித் திரியுங் குமரிகளாலுண்டாகு, மந்தப் பாவத்தா லிறையோனொலியவர்கள்யாவரும்லஃனத்தென்றார். 6

கந்தங் கந்தூரி நெருக்கத்தினாற் காய்கள் பழம்போலே கசங்குவதும், அர்த்தராத்திரி சிலவாலிப ரணைந்தே ரணைந்து தான் விடுவதுவும், பித்தர் வெறியர்கள் குடியரைப்போற் பிடிக்கக் கொங்கையிற் கைபோடிலு, மற்றும் பலதோஷ நடப்பதினால் வல்லோனொலிமார்கள் லஃனத்தென்றார். 7

படிமேல் முடிவைத்தேயடிகிளப்பிப் பார்த்து ஸுஜூ திடுமாண் பெண்சிலர், கொடியபாவியாய் மடிவார் பின்னுங் கோதைமார்பேரினாட்ட மாகச், கொடிய வாசைதான் பெரிதாம்வைத்துக்கொண்டங் காடவர் தந்திரமாய்க், கடிகாயத் தொடருவோர் தங்களுக்குங் கத்த னொலிமார்கள் லஃனத்தென்றார். 8

இருவிரற் கச்சை தனைக்கட்டியே யேறச் சிறைத்துத் தான் சாம்பற்பூசிக், குருவாம்நபிநாதர் ஷறஹைறவிட்ட கொடியபக்கீர்க்குவெட்காதவர்பா, லரிவைமார் சிலர் முரீதுகேட் டேயழகு காட்டிப்பேசுவர வர்போ, லொருவரிலை நரகுரியோ ரென்றே யொலிமார்கள்லஃனத்தென்றார். 9

பள்ளிகபுறடி கூட்டஞ்சென்று பலகாட்சிகள் பார்க்கும் பெண்களையே, கொள்ளி நரகத்தி னெருப்பாற் சுட்டுக்கொல் வாரவள் கூவிப்போவாளதால், வெள்ளி திங்கள் ளாகிலு

மாம் வேறுநாட்களாகிலுமாங், கள்ளத் தனமாகப் புறப்பட்
டாட்குக் கனத்தவொலி மார்கள் லஃனத்தென்றார். 10
வீடுதனை விட்டுச்கந்தூரிக்கு மின்னாடிவைத்து நடக்
கிலவர், சோடு தனக்கொரு பாவமாகத் துய்ய பெரியவன்
மலக்கை யேவி, யேடுதனிலெழு கிடச்சொல்லிப்பின் னிந்தத்
துனியாவி லவரிறந்தாற, பாடுபடுவார்க ணரகத்திலே படைத்
தோ னொலிமார்கள் லஃனத்தென்றார். 11
சந்தனக் குடம்நடத்தும்போது சாமங்கனிலேதா னெழு
ந்திருந்து, வந்த மடவார்களிருகுடமு மார்பிற் குலுங்கிட நடப்
பதினால் அந்தக் குடத்திலா டவர்சிலர்க ளறிய நாட்டமாய்க்
கைபோடுவாரிந்தப் பாவங்கண்டப்பதினாலேக னொலிமார்கள்
தஃனத்தென்றார். 12
நாலுபக்கமு முயர்மோடையி னன்றாய் வாலிபரேறி
யுற்றுவாவிபமதுளா னுடற்றெறிய வழித்துக்குளிக்கிறவேளை
யிலே, தோலைநாடியே பார்த்திருக்குந் தோஷப் பாவத்தா
லவர்களுக்கே, ஆலநபியுல்லாமுனிவுடனே யரிய வொலி
மாரும் லஃனத்தென்றார். 13
ஊருக்கு மப்பால் நாலிடமு முயர்ந்த மனாருக்கள் மனுடர்
கூடிப், பேருக்குச் செங்கற்றனை யுயர்த்திப் பெருமையாய்க்
சட்டிலவத்ததல்லால், நேருக்குச்செய்த நன்மையல்ல நெடி
யோனருளவர்க்குக்கிடையா, தாருக்கும் காணாப் பெண்
களினு லழகாங் கந்தூரியிழவாகுமே. 14
உசந்த மனாருக்கள் கட்டில் நன்மையொன் றமிலைக்
சேளீரப்பணந்தான், வசந்த இஸ்லாத்தில் நாறுகுமர் வரிசை
யாய்மணமுடித்திடவு, நிசைந்த வாடைகள் பதினாயிர மெளி
யோர் மானிசமூடிடவும், பிசைந்த கறிசோறு பால்பழங்கள்
பெரியோர் லட்சத்திற்கீயக்காணும். 15
பெருமை கீர்த்திக்குச் செலவழிப்போர் பெட்பார்சுவர்க்
கத்திற் புகுதாரென்றுந் தருமஞ் செய்தவரல்லரென்றுந் தம்
பிரான் கோபமவர்க்குண்டாகும், அருமைக் குமருக்கும் பசித்
தோருக்குமாடையிழந்தோர்க்கு முதவுமவ, ருரிமையாகவே
நரகம்விட்டங் கூழிகாலமும் வாழுவாரே. 16
மார்க்கத் தப்பான வெடுப்புகள்தான் மறுமைப்பதிதனி
லதாபிலாக்கும், ஆர்க்கு நாணக மடவார்கள்தா னனலாம்
நரகத்தில் விழுவார்கள், காக்கு மபிமான முடையவர்கள் கடி
தாயடக்கியேயமர்த்தாமலே, தீர்க்கமுடனே தான வெளியில்
விட்டாற் றேசநதனிற்கெட்ட தோஷியாவார். 17
கண்ணைமொருமாதோரூரினிலே கனியாய்த் தலைமூழ்க
வாடைநீக்கி, நண்ணைய்மூழ்கியே தீர்ந்தவுட னுடித்துடைத்

தபின் றுகிலுடுத்த அண்ணார்ந்து பார்த்தாள் மறைவின்மே லாடவன பார்த்து நகைக்கக்கண்டே, யொண்ணும் நாயனே யிணையற்றோனே யொடுக்கியவன்றனை ஹறாபாக்கென்றாள்.

அவனை ஹறாபாக்கென் றேதுமூமினைவேந்திழை பது வாத்தனைப், பவநீக்கிடு நாயன் கபூலாக்கிபே பண்ணி மறை வைச்சுரியவாங்கச் சுவரா யடுகின மறுருவுடன் றேஷம் பார்வை தான் பார்த்தவனு, மெவரு காணாமற் பூமியின்கீ ழின்னங்குழியோடிப் போனானென்றார். 19

மண்ணிலடங்கிய கபுரின்மேலே வந்தங்கிருக்கின்ற குரு விதனைப், பெண்ணாணெனக்குறிப் பறியுமட்டும் பேசாதிருப் பார்கள் கபுறாளிக, ளொண்ணாக பெண்ணைப் பிறந்தோர் களையங்கள் தாய்தந்தை கபுறாகிலுங், கண்ணால் நோக்கிப் போய்ச்சந்திப்பதுநத்தன்றனைகோரத குற்றமென்றார். 20

கபுறிலடங்கு மையித்திற்குநம் கண்ணிற் சுருபங்கள் காண்பபோலே, சவுதான பெண்ணா ணபிமானங்கள் தா னுந் தெரியுமென்றெண்ணவேண்டும், தவருந்தனியாவிலா ணும் பெண்ணுங் கண்டுவெட்கிக்கு மாறுபோலே, யெவரும் காணாத கபுறைமாத ரெதிர்த்துப்பாராமற் றிரும்பிக்கொள் வீர். 21

ஆடவனைக்காணாப் பெண்களே நீரழியும் துனியாவில் வெளியில் வரிற், பேடரும் பேரில் நாட்டமாகப் பிரிந்து திரும்பிபாராமற்பார்த்து நிற்பார். மூடுமதனாலே கபறிடத்தை முடுகிப் போய்க்கண்டு வருவதற்குக் காடுகனிலேதா னடக் கிலுமாக் கன்னிமார்சென்றால் வன்னியாமே. 22

பூவுலுள நல்லெலப்பைமாரிற் பொல்லாலப்பை மார்சில பேர்கடான், தாவுங்கொள்ளிவாய்ப் பேய்கள் போலே தள் ளும் புகையினைக் குடிப்பதினாற்காவுசெறிபொன்னார் காட் டொலிமார் களிக்குமினத்தார்க யில்லையென்று வாவலாகி யாமெவர்செய்தாலு மழிவார் புகையினாற் கழிவார்களே. 23

வாங்கு சொல்லும்போது வணங்காமலே வாயிற் புகை சுற்றப்புகைத்துக்கொண்டு, நாங்கள் லப்பைமாரெனவாண் பெண்கள் நாலாதிசையிலும் பரந்தோடியே, தாங்கிசங் கொண்டே யெவரிடத்துங்கடிதிற் போய்ப்பொட் கொடிகள் போலே, வாங்கியே தின்னுமவர்கட்கெல்லாம் வல்லோனொலி மார்கள் லஃனத்தென்றார். 24

வெள்ளைப் பூண்டுகள் வெங்காயங்கள் வேகாமற்றின்ற வாய்நாற்றத்தின், பள்ளிகனிற்சென்றுட் புகாமலே பகை யாய் விலக்கினார்பய ஹாம்பர்தாம் கள்ளுக்குடிபோலே கந்த

மான கடிய புகைக்குடிநாற்றத்துடன், பள்ளிதனிற்சென்றுட்புகுந்தவர்க்குப்படைத்தோன் முனிவுதான் கிடைக்குமென்றார், 25

நாற்ற முளபேர்கள் பள்ளியுள்ளே நண்ணுமற்றள்ளி விடுவீரென வேற்ற முளநபி சொன்னாரென வினியவறிவாளரெடுத்துரைத்தார், போற்றும் புகழான பள்ளிதனிற் பொல்லா நாற்றத்தோடுற்றவர்கள், மாற்றிலுயாபொன்னார் மணத்தினுக்குமாற்றமாகியே நாற்றமாவார். 26

வாயிற்புகைக்குடி நாற்றத்தொடு மங்கை மார்களைப் புணர்ச்சிசெய்தாற் பேயின்குதிரைதான் கடிவாளத்தைப் பெயர்த்து முகமாறித்திரும்பிடல்போற், பாயும் பாம்பினை வெறிகுரங்கு பற்றிப்பிடித்தாட்டும் பழமையும்போற். றேயும் கோகைமார் மனம்வெறுத்துத் துலங்கு முகமாறிச் சினப்பாரென்றார். 27

புருஷன் புகையிலை குடித்துப்பின்னர் பூவைதனை மோகங்கொள்கிலவ, ளருவருப்பாக வாய்நாற்றத்தாலழகார் முகந்தனைமாறிக்கொள்வாள் இருவரும் புகைகுடித்தாரெனி லிரண்டுநாற்றமுமொன்றுசேர்ந்தேதொருவரிடங்கிட்டி யொருவர் பேசவூற்றை வாய்நாற்ற மகற்றுமென்றார். 28

மீறுனொலிதல முதலாம்மற்ற வொலிகள் தலத்திலுந் தோஷஞ்செய்தால்நேராய்ப்பொறுப்பாரென்றுரைக்கவர்கள் கெடியோன்றனக்குத்தான் பாவியாகிப் பெராங்கியா மத்து நாவிலவர் பேசுநாக்கிலே தூண்டிலிட்டே யூரார்பலர் காண லாகிடவே ரிறையோனொலிமார்கள் லவினத்தென்றார். 29

ஆகநபிமக்க ளானோரிலே யன்பா யீமானில் வந்தோர்களிற் சேதமாகவே சிலமனுடர் தேசந்தனிற் காபிரானது போல், நீதமுளமீறுன் மனுடரிலே நேராய்நடந்தவர் தவிர விண்ணு, மீதமுளவாண் பெண்ணெல்லோர்களும் வேத விறைக்கஞ்சிப் பேசாரென்றார். 30

குறுசுப்படலம்-முற்றிற்று.

ஆ. படலம் 31-க்குத் திருவிருத்தம் 574.

---

இந்தகுறுசுப்படலத்தை முகலில் ஏட்டுப்பிரதியைப்பார்த்தச்சிட்ட கோட்டாற்று முசாபிர் ஷேக்கப்துல் காதிர் லெப்பையாலிம்நாகூர்ப்படல மென்றச்சிட்டுப் புத்தகத்தை முடிசெய்து பைண்டுகட்டிச் சுமார் (25) புத்தகம்வரைக்கும் அவரவர்களுக்கு விலைக்குக்கொடுதிதிருந்தார். அதிலோர் புத்த

கத்தை நாகூர் இரத்தினபரீட்சை ஷேகுசதக்குத்தம்பி மரைக்காயரவர்களின் மைத்துனர் முஹம்மது ஷேக்கு நாலெப்பையென்பவர் பார்த்து இஃதென்ன ஆச்சரியம், வேதத்தினேவல் பொதுவாகச் சொல்லுதல்போய்நாகூரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதே இஃகச்சுப்போடுவித்தவனுடைய செய்கையென்று ஆலிம்ஸாஹிபைத் தேடிப்பிடித்து வேங்கைப் புலியும் மானும்போலே வாக்குவாதங்கள்செய்துகொண்டு மகாகனம் பொருந்திய கீ-ஸெய்யிது முஹம்மது மரைக்காயரவர்களிடத்தில் வந்து இருதிறத்தாருந் தங்களபிப்பிராயத்தைச் சொன்னதின் பேரில், அவர்கள் ஆலிம்ஸாஹிபுசெய்தது குற்றமென்றுகண்டு, என்னைவருத்தி ஆலிம்ஸாஹிபுக்கிப்புத்தகமும்விற்கவேண்டும். நாகூர்க் கந்தூரிக் கூட்டத்தைக் குறித்துப் பாடியிருக்கிற இழிவுவாக்கிய மில்லாமலுமிருக்கவேண்டும். ஆகலால், நீயிதற்கு யோசனை சொல்லென்றுகேட்டதில், நான் விற்ற புத்தகத்தையெல்லாம் அழைப்பிக்கச்சொல்லி அதிலிருக்கிற நாகூர்படலத்தைக் கிழித்தெடுத்துவிட்டு, குறுசுப்படலம் மென்றச்சிட்டு, அப்புத்தகத்திலும் மற்றப் புத்தகங்களிலும் சேர்த்துப் பயிண்டுகட்டி விற்கிறது நன்றாயிருக்குமென்றேன். அதுபோல் ஆலிம்ஸாஹிப செய்யமுயன்று முன்பிருந்த பாடல்களிற் சிலவற்றைமாற்றி பாடி அச்சிட்டார்.

அதனாலும், மற்றப்பாடலிருக்க பிழைகளாலும் இந்த அதபுமாலை, ஹஜறத்து தக்கரூறத்துப்பாடின ஷாமுநயினா லெப்பை ஆலிம்ஸாஹிபவர்களாற் பாடினதென்று திட்டமாக நான்சொல்லமாட்டேன். ஆனால் முதலிலச்சிட்டது ஆலிம்ஸாஹிபுடைய பாடலாகத்தானிருக்கவேண்டும். அவர் தன்பெயரைச் சொல்லாமல் முன்னுள்ளபெரியோர்கள் பெயரைச் சொல்லியிருப்பதால் நானிவரென்று தீர்க்கமாகச் சொல்லவுமாட்டேன்.

ஆனாலிதிற் பொய்சென்னவர்களை அல்லாஹுந் தஆலா பார்த்துக்கொண்டிருக்கிறான். மேலும் அதபுமாலை யென்றொன்றிருக்கிறது. அது கீழ்க்கரை தைக்காஸாஹிபவர்கள் பாடிய முப்பத்திரண்டு மாலைகளிலொன்றாயிருக்கிறதென்று நான் திடனாகச்சொல்வேன். இதையாவரும் யோசித்தறிய வேண்டியது. அவர்களுக்கு அல்லாஹுத்தஆலா கிருபை றஹ்மத்துச் செய்வானாகவும்.

## மௌலிதுப் படலம்.

மவுலி துகளைத்தா னவரவர்கள் வரிசை குறுமத்தாயோ தாமலே, கவிகள் ராகமாய்ப் படிப்பவரைக் கண்டுவிலக்காத ஆலிம்கள்தாம், புவிவிட்டடங்கிப்பின்கியாமமானாற் புதியோன பிமுன்னேபேசநாணிச், செவியுங் கண்களு மில்லார்கள் போற் றிரிவாரெனச்சொன்னாரறிவாளரே. 1

சலிபி லாமௌலி தோதவென்று சஹீகாய் பயித்துகள் படித்தோதியே, கவியாவிருந்தெல்லா மூண்டுபோட்டுக கத்தன்றனை நித்தம் வணங்கிடார்க்கங், கலியார் மாமனார் ஷபாஅத்திலே யவர்கள் முடுகாமற் கெடுவாரென்றே யொலியாமுலமாக்கள் சொன்னாரென வுண்மையறிவாள ரெடுத்தோதினர்.

கத்தனருள்பெற்ற ஷகுனனியீ கனத்த இமாமப்துல் வஹ்ஹாபுதா, மத்தாயோதின மௌலிதுக்கு மனமு மகிழ்ச்சியாய்ப் போனபின்பு, சத்தமுடன்ராகம் படித்தபேர்கள் சங்கையாம்ஸுபுகுத்தொழுகை, மெத்த வருத்தமாய் விட்ட பாவ மேலாய்க் கனத்ததென் றெடுத்துரைத்தார். 3

கனத்த ஸுபுகதின் றொழுகைதானுங் கடந்துபோகமற் பேணிக் கொண்டே, யினித்தராகங்கள் வெகுநேரமா யிசையாய்ப் படிக்காமல் நடுத்தரமாய் மனத்தினச்சமாய் மௌலிதுவை மணக்குமதபாகவோ திவந்தாற், சினத்தி னெரிகின்ற செந்தழலிற் சேராமற் சொர்க்கப் புகுவாரென்றார். 4

மௌலிதுப்படலம்-முற்றிற்று.

ஆக படலம் 32-க்குத் திருவிருத்தம் 578.

---

## பெண்வார்த்தை கேட்கலாகாப் படலம்.

எல்லாவறிவுமார் மங்கையாயிருந்தபோதிலுமவர்கள் வார்த்தை பொல்லாதவை யென்று தள்ளாலல்லாற் பொருந்தியதை யாருங்கேட்கொணாது, நல்லார் நபிசொன்னா ரவியாருக்கு நாளும் பெண்சொற்கேளாதீரென்று, வல்லாரவியாருமப்படியே வரிசைப்பாத்திமாசொற்றட்டினர். 1

ஆதம் ஹவ்வாவின் சொல்லைக்கேட்ட யவருங்கை சேதப்பட்டழுதார், வேத மோதின பல்ஹாம் ஆலிம பீவிசொல்லாலே குபிரிலானார், நீதநெறியுள்ள சுல்தான்சிலர் நேரிழை தன்னலரசிழந்தார், சேதமிகவுள்ள பாவிகள் நாம்தேவிமார் சொல்லைக்கேட்கொணாதே. 2

உறவின் பெண்டீர்கள் புத்திசொன்னாலுவந்து மிகுதியு மகிழவேண்டாம், ஷறகின் படியச்சொல் லிருக்குமாகிற் சந்தோஷ மட்டாய்க் கொள்ளவேண்டும், பிறகங்கதினாலே வருவதையும் பின்முன்பார்த்தத்தா னடக்கவேண்டும், விறகு நெருப்பினாற் சோராக்கிலும் வேங்கை நெருப்பைத்தான் நீண்டொணாதே. 3

மந்திரியர்போலுந் துரைகள்போலு மனையிலிருந்துவாழ் பெண்டீர்நல்ல, தந்திரக்காரியாகிலுமாந் தையல் சொற்களிற்பொய்கள்கூடு, மிந்தவகை நாயனறிகிலேதா னிருந்தவடியினா லவர்களுக்கு, நந்திலா நபிப்பட்டமதில் நாட்டவிலையென நவின்றனனே. 4

காலுங் கழுத்தையுங் கட்டிக்கொண்டு கறக்கும் பசுவுக்குத் தீன்கள்போட்டுப், பாலு கறந்துதான்குடிப்பதுபோற் பகரு மனையாளைப்பத்திரமாய்க் கோலும்வேலையு மோங்கித் தாங்கிக்குற்றஞ்செய்யாமற் பயப்படவே, ஆலநபியுல்லா ஷறகின்படி யடக்கிவைத்தன்பாய் ஆள்வீர்களே. 5

மார்க்கமறியாத புருஷனுக்கு வாழ்க்கைப் படும்பெண்டீர் கண்ணில்லாத, மூர்க்க முடையானுக் கவன்பெண்சாதி மொழியுநல்வழிகாட்டுதல்போற், காக்குமிஸ்லாத்தின் மார்க்கவழி கனிவா யறிந்துதான் சொல்வாளெனிற், நீர்க்கமுடனவள் பாவியல்லத்தெளியுமவள்சொல்லின் வழிநடப்பீர். 6

பெண்வார்த்தைகேட்கலாகாப் படலம்-முற்றிற்று.

ஆ படலம் 33-க்குத் திருவிருத்தம் 584.

---

## லப்பைமார் படலம்.

மார்க்கமறியாத மஹல்லக்காரர் விரிசையிமாமத்துச் செய்கிறது, பார்க்கவறியாத வயித்தியன்றான் பாரநசலுக்கு மருந்தையீந்து பேர்க்கப் பிரிக்கவும் பத்தியங்கள்பேணி யுரைக்கவு மறியாமலே, ஆர்க்குஞ் சொல்லாம லோடிப்போவா னவனேயிவனென் றிங் கறிந்துகொள்வீர். 1

அறிவு தெரியாத மஹல்லக்கார ராலிம் தாங்க பாலடி பணிந்து நெறியா யறிவெல்லாம் பிடித்துக்கொண்டு நெடியோன்றனை நித்தம் வணங்காமலே, முறிவாய் ரோசமாய்முடு காமலு முழுதுமறிந்தோர்கள் போற்றொழுதாற், குறியாய் முஸ்லிம்களுடமை யெல்லாங் குற்றமாய்த் தின்றபாவி யாவான். 2

மஹல்லக்காரருமாலிம்களும் வகையாய் முஸ்லிம்களிடத் தினிற் போய்ச், சகலவிதத்தினா லறிவுபேசித் தனங்கள் வாங்

கியேதின்பதினால், பகலையிரவையைப் படைத்தநாயன்படித் துக்கொடுத்தத்தான் சொன்னதினாற், பகலிலிரவையிலாண் பெண்ணுக்குப் பறுலாங் கருமங்கள் பகருவீரே. 3

வாங்கித்தின்றுதான் படிப்பியாமல் வந்ததைவரப்பார்த் துக்கொண்டு, தாங்கியவர்களைப் பின்றொடர்ந்து தங்கு மூட ராயாக்கிவிட்டா, லேங்கித்திரிகின்ற கியாமத்திலே யிவர்களறி வெல்லாம் பறிகொடுத்துத், தூங்கித்தூங்கியே நரகுதனிற் றொல்லையுடன் சென்றுபுகுதுவாரே. 4

குத்துபாவோத ஆலிம்வேணுங் குற்றமிலகத்தீ போத லாகு, மற்றுமறிவொடுவணக்கமில்லார் வயிற்றுப் பிழைப்புக் காய்த் தருத்கேறினால், நித்தமவன் செய்யுந் தோஷத்தினால் நெடியோன் தனக்கேறு தஃதன்றியுஞ், சுத்தமாகவே யவ்வூரி னைத் தொடர்ந்தபலாய் தூரப்போகா தென்றார். 5

ஆண்டைநபிநின்ற தலந்தனிலே யாலிம் கனின்றேயோ தலாகும், வேண்டுமறிவொடு வணக்கமுள்ள வெற்றியுளகத்தீ போதவேண்டும், தாண்ட குணமுள்ளவணக்கமில்லார் தருத் திலேறியேயோதுவதிங், காண்டவடிமையைத் தலையிலேற்றி ஐபாய்ச் சுமப்பது போலா மென்றார். 6

அல்லாமுகத்திற் காலிம்களானோ ராயிரம்பேரிலொரு வருண்டும், பொல்லா துனியாவின் முகத்துக்காகப் புலம்பித் திரிவார்கள் சிலமனுடர், நல்லாரமல்களைச் செய்யாமலே நாற் றமுள அமல்பார்த்துச் செய்வார், கல்லையுவந்திடும் பாவிக் கென்று கனத்த வுலமாக்க ளுரைத்தனரே. 7

தக்குவாயுள்ள ஆலிம்கட்குச் சங்கைநபிமார்க்குப் போ லாமென்று மிக்க அமலில்லாவாலிம்கடான் வீணை முழுமூட ராகுமென்றும், ஹக்கு தனைப்பேசி வணங்காதபேர் கனத் தமுனாபிக்குத் தானாமென்றும், சொர்க்கம் புகுநபி ஹதீதின் படி சொல்லுமறிவாளருரைத்தனரே. 8

ஆலிம் தமக்கும்மைஷத்தானவர்க்கு மறிவுமிகுந் தோர்க் கும் வயதருக்கும், ஆலம் விழிமினாந் நாணவேண்டு மாசைமிக வுள்ளநோட்டக்கார, வாலிபவண்ட மூடரி லும் வகுத்துமூ வர்க்கு மாசைமெத்த, ஸாலிஹானோர்க்கும் நாணவேண்டுந் தானென்றறிவாரெடுத்தோதினார். 9

தக்குவாயுள்ள பேர்களெல்லாம் சங்கைலாயத்துக் குதி ரைபோலாம், வெட்கந்தானில்லா மூடரெல்லாம் விடுமட்டம தான கழுதைபோலாம், திக்கி நடக்கின்ற கழுதை கெட்டாற் செருப்புப்போனது போல நஷ்ட, மிக்க விலையுள்ள குதிரை கெட்டால் விலையாற் குடிதலை தனிற்கெடுமே. 10

மார்க்கவழி தனில் பைத்துகளும் வரிசையறிவுகள் பல வகையும், தீர்க்கமுடனே தான்படித்திருந்து தீனின் படியே தானடக்காதவர், பார்க்கனறியாத பேர்களுக்குப் பாராவரி ஞர்போ லிருப்பாரவர், மூர்க்கமுறு மிபுலீஸெனவே முழுது மறிவாள ரெடுத்துரைத்தார். 11

பள்ளிதனிற் கூட்டஞ் சமயம் பார்த்தும் பறுலுசுன்னத் துப்பலவகையு, மொள்ளிதாம் நல்ல பெரியோரைப் போல வந்து வெகுநோந் தொழுகிறது, மெள்ளத்தனிப்பிடம் வீட்டில்வந்தால் விதித்தபறுலையும் பிற்படுத்தித், தள்ளியதுதனைத் தாழ்வாக்கினோர் தங்கடமதான பாஸிக்கென்றார், 12

வணக்கந்தனில் குறைதுவரும் வணங்கிமுடிந்தபின் துஆக்களிலுங், கணக்கினளவோடுநடுந்தரமாய்க் கடுகமுடுக வும் நீட்டாமலு, மணக்குமுஹம்மது ஷறகின்படி வரிசைகுறு மத்தா யோதாமலே, பணக்காரர் பலகூட்டம் பார்த்துப் படிக்குமவர்களும் பாவியென்றார். 13

வயிற்றுப் பிழைப்புக்கேயறிவுகற்றால் வரிசையுள கூலி கிடையாமலே, கவுத்துவக்காரனிவனெனவே கள்ளத்தொழு கையுந் தள்ளப்படும், சவுத்துப் போகமனன்மை யெல்லாந் தம்பிரானுக்காய்நாட்டம் வைத்து, மவுத்தைப் பயந்து தா னறிவுகளை வணக்கந்தனக்காகப்படியுமென்றார். 14

ஊரி லறிவெல்லாம் படித்திருந்து மொளிவாயிருக்கின்ற வறிவாளர்தா, மாரு மறியாத குற்றம்பார்த்தே யதபா யறி வோதி வருத்திவைப்பார், நேரி னறிவிலா ரவர்கள்செய்யு நீண்ட வணக்கமல்களோடு சீரின்படிப்பெல்லாம் புறத்தியார் க்குத் தெளிவாய் வெளியாகத் தெரியுமென்றார். 15

ஆற்றும் வயித்தியன் புறத்தியார்கள் கான நசலுக்கு மருந்துசொல்வான், தேற்றும் வயித்திய னோயிலானைற் றிரும் பப் புறத்தியார் பார்க்கவேணும், காற்றுப்பெரிதாகி யயர்ந்து போனார் காற்றை விசிறியா லுண்டாக்கல்போற், போற்று மறிவினை தாங்கள்சொன்ன புத்தியல்லாமல் வேறிலையே. 16

அறிவாளர்சொன்ன அறிவுகேட்டே யறியாதவரெல்லா நடக்கவேண்டும், குறியாமறிவாளர் கரங்களென்றுங் கூறும் படியே தானடக்கவேண்டும், நெறியாமறிவு போல் நடக்கா மலே நீங்கடவறிலைஃகாவது, முறிவாம்வழி கெட்டவயித்தி ஞல் முழுதுநசற்றீராத்தனைப்போலாம். 17

ஆலிமாயிருப்பவர்கடங்களரிய குடும்பமும்பேணிக் கொண்டு, காலிமிருகம்போலறிவில்லாத கசட்டுமனுடரைக் கண்டிடில்மேன், மேலுந் தங்களாலாகுமட்டுமேலோன்றனக்

காக வறிவுசொல்லிச்சீலம்வருத்திடக் கடனாமென்று செப்பா லிமாம்கள் சொல்லறிவுதானே. 18

ஈமானுள்ளமூமினவர்களுக்கிங்கினியவறிவோதுமாலிம்கள் தான், சீமான்றனமான பேர்களுக்கும் சிறப்பாயறிவெல்லா முறைப்பாகவே, கோமானபி சொற்போலெளியோருக்குங் குணமாயறிவுகள்சொல்லாவிட்டா, லீமான்மிக மெலிந் தெளி மையாகி யெழிலாகிரந்தனி லலைகுவாரே. 19

செறிவாமறிவுக டெரியாதவர் சிறப்பாரறிவாள ரிடத் தினிற்போய்க், குறியாவயதுள கிழவியேனுக் கோணி நாணீ யேயறிவுகேட்டால், நெறியாயறிவுகள் சொல்லாமலே நெகிழ்ந்து நகைத்துத்தான் துரத்திவிட்டோர், முறிவாரி புலீஸ் போலெனவே முழுதுமறிவாள ரெடுத்தோதினார். 20

ஆலிமானவர் தங்களிட மறிவுபடித்திடவரு வோரிடங், கூலிவாங்காமற்றவரைநாடிக் குறியாயறிவெல்லாமறையாம லும்சோலி, நினையாமலுஞ் சொல்லுகிற் றுய்யோனருளுண் டாமில்லாவிடி, லாலிமானவர்க்காகிரத்தி லனலாய்க்கடிவாள மிடுவாரென்றார். 21

திருநாட்கோயில்களிடத்திரவு தேவதாசிகள் கூட்டத் திலே, யருமையாரிஸ்லாமுஸ்லி மானோர்களிற் சிலர்போனா ரெனிற். கருவாயழிந்ததிற் சிலமூடர்கள் ஹறாபாவாரகை விலக்குமென்றே, யுரிமைபெரியவன் வேதத்தினை யுணர்ந்த வறிவாளருரைத்தன்றே. 22

கொப்பிபாகையைக்கழற்றிப்போட்டுச்சோடுமாற்றிமுக் காடுமிட்டுக், தப்பிதமதாகப் பாவஞ்செய்யத் தாறுமாறு மாய்ப்போறவரைத், தப்பாதறிந்திருந்தும் மவரைத் தடுத்து விலக்காமற் பார்த்திருந்தோர், கைப்புமிகுந்திடுங் ஹறாம் தனக்குக் கலந்துதான் கூடிச்செய்தோரென்றார். 23

அளவின்படியேதானமல் செய்யாம லழிவுமிகச் செய்யும் பழிகாரரைக், களிவாயுலகிலுங் கியாமத்திலுங் கண்டபேரெல் லாம்நகைத்திடவே, யொளிவாஞ்சுவர்க்கத்து வழிசெல்லாம லோடநரகத்திற்போடெனவே, தெளிவாமிறையவன் சொல்வானெனத்தேர்ந்தவறிவாள ரெடுத்துரைத்தார். 24

நாயன்மாமறைபடித்தலொடு நவிலுந்தொழுகை நோன் பிவைகள் மூன்றுங், காயமுறுப்புநாக் காத்தின்றிக்கதன் றனக் கேராச்செயல்செய்திடில், வாயினாற்கிணறது தூரல் போல் வழுவிப்பழுதாகவழியுமதால், நாயன்றனக் கஞ்சி யாண் பெண்ணெலா நாவுமபத்தையும் பேணுமென்றார். 25

ஏவல்விலக்கல்படி யாமலே யிலப்பைமாரென்று பேர் சொல்லியே, ஆவலுடனேதான் முமின்முக லனியாயமதாக வாங்கித்தின்று, காவலுடையோனைத் தொழுவதுபோற் கண்டபேர்காணத்தெண்டனிட்டோர். சாவலாகிலும் பேடாகிலுந் தம்பிரானுக்குப் பாவியென்றார். 26

வணக்கந்தனைக்காட்டி வாங்கிதின்று வருந்திச்சரீரத்தாலுளைத்துண்ணுகோர் குணக்குமுனபிக்காயாகிரத்திற்கொடியனாகேழினடியில்வீழ்வார், பணக்காரர் காணவணக்கஞ் செய்வோர் படைத்தோன்றனக் கிணைவைத்தாரென்று, பிணைக்காய்ப்பிணை நின்ற நபியும் மத்திந் பேசுமறிவாளரெடுத்தோதினர். 27

கணக்குவழக்குகள் தீர்க்குமாலிம் கனத்தகுடும்பமும் வருத்தமானர், பணக்காரர்வந்த வழக்ககனிற் படிச்செலவுகள் வாங்கவுமாமினக்குமெதிராளி யெளியோர்களை யிறுக்கியுறுக்கியேவாங்கும்பேர்கள், மணக்குமுஹம்மது குடும்பந்தனை வருத்தப்படுத்தின பாவியாவார். 28

வாங்கித் தின்றாலும் பழக்கதனை வல்லோன்றனக் காகச் சொல்லாமலே, தாங்கள் வாங்கின வுறவுக்காகச் சற்றேவாக்கிலேகுற்றமானல், வேங்கைப் புலிபோலேபிடிக்கும் வன்னிவேண்டு வாலிமைத்தூண்டிவிட்டே, யேங்கிக் கதறவே அதாபு செய்ய வெல்லா முடையவன் சொல்வானென்றார். 29

ஞாலந் தனிலுள்ள முஸ்லிம்கடா னலக்கேடாம்பாவஞ் செய்கவர்க்குக், கூலிகொடுப்பதே யொன்றுக்கொன்று குறியாமறிவாளர் செய்பாவங்கள், சோலி யாகவே பெருந்தொகையாய்த் தூக்கியிறையவனேக்கியதை, ஆலந்தனிலுள பாவம்போலே யாலிம்தமக்குத்தான் கொடுப்பானென்றார்.

மிச்சமாக இல்மைப் படித்து வேண்டும் மனுடர்க்கு வெளிவிடாமல், வைச்ச புதையலைச் சொல்லாமற்றான் வாயால் மொழியாமற்சாவார்போலு, மெச்சமனுடர்கள் பிச்சை வாங்கியிறுக்கிமுறுக்கியே முடிந்துகொண்டு, பிச்சை வாங்கிச் சாவி னர்போலென்றும் பெரிய வறிவாளர் தாமுஞ்சாவார்.

அல்லா முஹம்மது நபிதமக்கே யழகாம் ரகசியம் பராசயமுஞ் சொல்லி, யறிவித்தான் தனியாவிலே சொல்லு மனுடர்க்குச்சொல்லுமென்று, நல்ல நபியவர் நாளினிலே நாயன் சொற்படிநடாத்திவைத்தார், வெல்லும்மறிவுகள் படித்தவாலி மேலோன்சொற்படி நடந்து கொள்வீர். 32

கள்ளதுனியாவி லாலிம்சிலர் கனத்த வறிவாளரென்று சொல்லிச் சொல்லாரகசியப் பொருளையெல்லாம் சொல்லித்

துனியாவின்பொருளுக்காகப், பொல்லா மனுடர்க்கு மூடர்கட்கும் போற்றியறிவித்து வெளிவிடலா, லெல்லோர்களு நல்ல ஷறகைவிட்டேயேறிச் செய்பாவமிவர்க்கேயென்றார்.

நல்லவறிவோது மாலிங்கடா னன்மை தீமையிரெண்டும் சொல்வார், புல்ல வறிவுள ஆலிம்கடான் பொல்லாச் செயலதைமறைத்து வைப்பார், சொல்லு மறிவெல்லாம் பார்க்கும் போது துனியா முகத்துக்கா யிருக்குங்கண்டீ, ரல்லா தவர் செய்யும் பாவமெல்லா மழியுந் துனியாவில் வெளியாமென்றார்.

ஓதுங்காளென்பார் தொழுங்காளென்பா ருவந்து நோன்புவைத்திடுங்காளென்பார், நீதி யாதயம் வரச்சதக்கா நிதிய மிகுதியாய்க் கொடுங்காளென்பார், பேதகமதான பாவங்களைப் பிரித்தேயறியார்க்கு மறியச்சொல்வார், பாதகமதன வாலிம்கடான் பழிகாரரென்றார் யறிவாளரே. 35

கண்டவிடமெல்லாம் பெண்கடமை ஹறமாம்பேர்காண விட்டிருப்பார், முண்டத் தனமாகப் பலபாவங்கள் மோகமாய்ச்செய்யப்பார்த்திருப்பார், கொண்டபெண்சாதி சொல்லுக்கும்கீழ்கொடியவறிவாளாடிபணியர், றென்றேயுரைத்தார்க ளறிவாளர்தானிசையாயாலிமை வசையாகவே. 36

கலியாணங் கட்குங் கந்தூரிக்குங் கன்னி போய்வரப் பார்த்திருப்பார், சலியாமற் றங்கள்பெண்களையுஞ் சண்டித்தனமாக விட்டிருப்பார் வலியான் றனைத்தொழும் பள்ளிதனில் வந்தே யுவப்பாகத் தொழுது கொள்வார், கலியாவிருந்துடன் சோறுகண்டாற்கனத்த கூட்டமாய் வந்திடுவார், 37

தேசந்தனிலுள்ள மூமினுக்குச்சொல்லு மறிவுகள் சொல்லப்போனால், மோசஞ் சொல்கிறீர் நாலாம்வேத முஸ்லிமானோர் போல்அனுதினமும், ஹ'ஜத் துடனுங்கள் செய்துவாரோங் கத்தன் றனக்கது குற்றமாகத், தோஷம் வந்தாலும் வரட்டுமென்றுசொல்விக்கெடுவார்கண்மதிகெட்டோரே. 38

வெட்கம்ரோசம் தானில்லையோ வெளியிற் புறப்பட ஞாயமூண்டோ, ஹக்கன்வேதத்தைப்படித்திருந்துங் கடியதுரோகங்கள்செய்யலாமோ, மிக்க குப்பாயம் போட்டிருநதால் விரும்பிச் செய்பாவமறைந்திடுமோ, சொர்க்கமவர்க்குத்தான வெட்குமென்றுசொல்லுமறிவாளரெடுத்துரைத்தார். 39

கொண்ட பெண்டனை கைப்பிடிக்கக் கொடுத்த வொலிகாரர்மட்டல்லாமற், கண்டவறமுறை லப்பைமார்கள் கையைப் பிடித்துத்தான் கொடுத்தாரெனி, லன்றங் கவர் கையைத் தொட்டதனாலேபாவம் ஸினுவாகவே யிருக்கு, மென்றேயுரைத்தார்க ளறிவாளர் தாம் இஸ்லாமானோர்க ளிவைவு யுணவீர். 40

இலப்பை மார்சிலர் வீட்டினிலேயெல்லாப் பாவமு நடக்குதென்று, பலபேர் வீட்டிலு முளமடவார் பாவ மிகச் செய்வாரப்பாவங்கள், இலப்பைமார்களின் வீட்டிற்கும்பங் கென்றேயிலப்பைமார் சொலுமறிவை, யிலப்பை மார்கள் தானிதமுங் கேட்டிங்கிசைந்து நன்றாக நடப்பீர்களே. 41

கேட்டு நடப்பீர்கள் லப்பைமாரே கித்தாபு தனிலுள்ள வறிவை யெல்லாம், பாட்டுப் படிப்பவர் சொன்ன தல்லப் பாங் காய்நீங்களே சொன்னீரதைக், கேட்டுப் படித்தியான் சொன்னேனென்று கிருபைமுஸ்லிம்கள் கோபம் வேண்டாம், ஏட்டி லெழுதியஹதீதின்படி யிலப்பை மார்கேட்டு நடப்பீர்களே. 42

வீடுகளைக் கட்டப் பயணம்போக விலையாயெ வையையுங் கொண்டுவிற்கக், கூடுங்கலியாணம் சுன்னத்துகள்குழுறுங் கட, லோட்டந்தொழினடத்தத், தேடுமிஸ்லா மார்க்கநெறி சேர்ந்தவாலிமைக் கேளாமலே, காடுதனிற் பிணஞ்சுட்டுநாறுங் காபிர்தனைக்கேட்போர் பாவியென்றார். 43

ஏட்டோடுங் கித்தாபுமள்படித்தோமென்றேயறிவுள்ள ஆலிமிடங், கேட்டேபடியாமற் றிரிவது தான் கேடாயிருக்குமே அஃதெதுபோற், பாட்டேபடிப்பார்களதனுடைய பயனையறியார்கள் போலுங்கப்ப, லோட்டோட்டந்தெரி மாலிம்போலுமோட்டந் தெரியார்கள்போலுமென்றார். 44

ஆலிம்சொற்கேளா மனுடரெல்லா மவஸ்தையாகி கியாமத்திலே மாலிந்தனைவிட்டுக் கப்பலேறு மனுடர் படும்பாடு படுவாரின்னுங், கோலினெடுமேய்க்குங் கோனில்லாத கூட்டப்பசுவெங்குஞ் சிதறல்போலுஞ், சோலியுளபொல்லாத தலங்கள்கண்டு தோஷந்தனைசெய்து சாவார்களே. 45

ஆலிம்பிறப்பதே யிபுலீஸுக்கிங் காயிரந்தரம் பேரிழவாஞ், சாலிஹாமாலி மிறப்பதுதான் சங்கைக்கலியாணமாயிரமாங், கூலிமிகப்பெற்றுக் குபிரோர்கடாங் கூண்டகபுறினுடாலிம்சென்றால், ஞாலந்தனிலவர் பறக்கத்தாலே நாற்பானு ளைக்கங் கதாபிலையே. 46

ஆலிம் பதவிக்கங் காகிரத்தி லதிகபதவிக ளொன்றுமில்லை, தாலி பறக்கவே காபிர்களைத் தட்டும் பீஸ்பீல் வெட்டும்பேரில், ஸாலிஹாமாலி மதிகமென்று தகுமாயிரையவன் மெகுமானமாய்க், கூலிகொடுத்தால் பெற்றுச்சுவர்க்கங் கொள்ளக்கூட்டத்தோடுஞ்சொல்லுவார். 47

இந்த ஆலிம்கள் வந்திலையா லிஸ்லாமான பேரெல்லேலய ருந்தா, ஞெந்துகண்ணிலாக் குருடர்போலே நுவலுந்தல

மெல்லாந் தடுமாறியே, பொங்குபொதும்புகள் போய்
விழுந்து பொல்லாப்பலாயானமகியினலே, பொங்தவையுள்ள
பாவங்களு மிவர்க்குத் தெரியாமற்செய்துசாவார். 48

செத்தா னரகத்திலேகாமலே சீமான் றனான ஈமா
னுடன், சுத்தாங்கமதான அமல்கள் செய்யாத் தய்யவறி
வோது மாவிம்களைப் பித்சங்கலே கொண்ட நசல்கள் தீர்க்கப்
பெரியமருந்தாக வனுப்பிவித்த, சுத்தன் றனக்கெல்லாப்
புகழ்ச்சியுமே காலமடங்லும் றஹ்மத்தாமீன். 49

அல்லாஇறக்கின குருனின் படி யஃறம்பகிறஸூலின்
ஹதீதின்படி நல்லாரிமாம்கள்செய் கித்தாபின்படி நலமாமா
லிம்கள் சொற்படியே யெல்லா அமல்களுமாமே செய்தே யின்
லாமார்க்கத்தினடக்கவேண்டும், அல்லாவுதவியா லாமீனுமீ
னுமீனப்படி யாகவேண்டும். 50

ஹம்மது தனைக்கொண்டு மகிமான கனகிஸலவாத்து
ஸலாமைக் கொண்டும், ஹிம்மத்துடன்ஷாமு இபுன்ஸூலே
மான் கீத்தி யாகவேயதபுமாலை, கம்மியிருக்கின்ற தீன்வழி
யைக் கருத்திலறியாதோரிருப்பதாலே. அம்மற்றிடுமவிலீ
மெல்லோரு மழகாய்வாழ்கவே யுணர்த்திட்டேனே. 51

விம்மும் ஸக்கருக்கு வேளைதனில் விரும்புப்பசிதாக
மகன்றுபோகும்,கும்பி நெருக்கிற கபரிதனிற் கூட்டுநேரத்தி
லகாபகலுங் கம்முங்கியாமத்திலமளியெல்லாங் காக்கப்படும்
நபீ ஷபாஉத்துண்டாம். அம்முடன்கேட்டே யறிந்தபடி யழ
காய் நடப்போர்களெல்லோர்க்குமே. 52

இந்த அதபான மாலையினை யெழுதியிதமாக உரை செய்
தோர்க்கும், அந்த முடன்வைத்துக் குறைகடீர்க்கே யழ
காய்ப்படிப்போர்க்குங் கேட்போருக்கு, முங்கவர்செய்த பா
வங்களைமுழுதுமிறையவன் றான்பொறுத்துப், பிந்தவுந்
தோஷஞ் செய்யாதவன் பிரிசறஹ்மத்திலாக ஆமீன். 53

லப்பைமார் படலம் முற்றிற்று.

ஆ படலம் 34-க்குத் திருவிருத்தம் 637.

---

## அதபுமாலை முற்றிற்று.

கலைமகள்பிரஸ், வடக்கன்குளம்.

# இஸ்லாம் மார்க்கப் ப

I, L :118

| | ரூ. ச |
|---|---|
| முகிதீன் மாலை 5 முனாஜாத் தடன் | 1—00 |
| ராஜ மணிமாலை | 1—75 |
| ஷை இரண்டுர் ஆப்பமிண்டு | 3—00 |
| பஸ்தான் சாகிபு பாடல் மூலம் | 2—00 |
| ஷை உரையுடன் | 5—00 |
| நஸீஹத்தல் மூமினீன் மாலை | 2—50 |
| முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம் | 2—50 |
| மஜ்மூஉ சூரத்கள் குர்ஆன் | 3—00 |
| பீர்முகம்மது ஞானக்கோவை | 5—00 |
| சீறா புராணம் மூலம் | 6—00 |
| நசீகத்துல் இஸ்லாம் ஹனபியா | 0—75 |
| ஷை ஷாபியா | 0—75 |
| தொழுகையின் சீரியமுறை ஹனபி ; ஷாபியடங்கியது | 1—25 |
| சாதர்வேல் கதை | 2—00 |
| முனாஜாத்தே பாத்திமா | 0—75 |
| ஜவாஹிருல் பாவாஜித் | 6—00 |
| இரத்தின முகமது காரண சரித்திரம் | 0—75 |
| பப்பரத்தியசரம்மானை | 0—75 |
| சைக்தூன் கிஸ்ஸா | 0—75 |
| ஷம்ஊன் கிஸ்ஸா | 0—75 |
| பீவிமறியம்முடைய கிஸ்ஸா | 0—75 |
| ஹம்சாலப்பை பதம் | 1—00 |
| சத்குருசங்காரம் | 1—00 |
| சூறாது | 0—75 |
| ஜவாகிருல் மவ்லூது | 1—50 |
| ஞானரத்தின குறவஞ்சி | 0—25 |
| சொர்க்கநீதி அடைக்கலமாலை | 0—25 |
| ஹபீபு அரசர் | 0—75 |
| தஃலீமுல் இஸ்லாம் | 4—75 |

| | ரூ. ச |
|---|---|
| கி—ஆ—கன் ஜமால் துர்ஷ் | 1—0 |
| சைதத்தாப்படைப்போர் | 0—7 |
| அகபுமாலை | 1—0 |
| தலைப்பாத்திஹா | 0—7 |
| தமிழ் யாசீன் | 0—5 |
| ஷை அறபு | 0—2 |
| மகிழ்மணிமாலை | 0—7 |
| வேதாந்த வெடிகுண்டு | 0—7 |
| இல்மூல் அஸ்ரார் | 1—0 |
| இல்முனிசா | 0—5 |
| நபி அவதாரம்மானை | 0—25 |
| தொழுகையடவு | 0—25 |
| பெண்புத்திமாலை | 0—25 |
| தொழுகைநாமா | 0—25 |
| திருமுடி இறக்கின ஹதீது | 0—25 |
| நஸீகத்நாமா | 0—25 |
| தீதாறுமாலை | 0—40 |
| ஞானமணிமாலை | 0—40 |
| மரண விளக்கம் | 0—40 |
| தௌலத் | 0—75 |
| நவீன முஸ்லீம் | 0—75 |
| இஸ்லாம் மத சித்தாந்தம் | 0—75 |
| மஸ்தான் வேதாந்த கீதம் | 0—15 |
| பிர்சா அம்மாள் ஹதீது | 0—5 |
| முனாஜாத்தே குத்பியா | 0—60 |
| தோகையர்மாலை | 0—20 |
| மனமாய்கைமாலை | 0—25 |
| தமீமுல் அன்சாரி கிஸ்ஸா | 0—50 |
| முஸ்லீமான் கொண்ட காரணம் | 0—25 |
| சலவாத்துப் பாட்டு | 0—25 |
| சக்ராத் நாமா | 0—20 |
| நூறுமசலா | 0—75 |
| அகத்தெளியுமாலை | 0—25 |

## சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு

கொழும்பு